பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அழுத்தம்; சந்தேக நபரின் பிணை அனுமதி நீக்கம்
பக். 03

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 145 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 06, செவ்வாய்க்கிழமை 19.04.2016

## 500 அகதிகள் சாவு

மத்தியதரைக் கடலில் பயணித்த படகு விபத்தில்



மீட்கப்பட்ட சில அகதிகள்.

லண்டன், ஏப். 19
மத்திய தரைக் கடல் பகுதியில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று நீரில் மூழ்கியதில் 500 பேர் பக். 25

# அதிகாரிகள் மீது மைத்திரி பாய்ச்சல்

### இராணுவம் வசமுள்ள காணிகளின் விவரத்தைச் சமர்ப்பிக்கத் தவறியதால்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19
வடக்கு – கிழக்கில் பாதுகாப்புத்தரப்பினர் வசம் உள்ள காணிகள் தொடர்பான விவரங்களின் தொகுப்பை அதிகாரிகள் நேற்றுச் சமர்ப்பிக்கத் தவறியதால், அவர்கள் மீது ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன், காரசாரமாகப் பேசியுமுள்ளார்.
அத்துடன் எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் அத்தனை விவரங்களையும் முழுமைப்படுத்தி, அன்றைய தினம் இடம்பெறும் கூட்டத்தில் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவிட்டுள்ளார். பக். 23

## விடுவித்த பகுதிகளை விட்டு அகலவில்லை காவலரண்கள்

### வலி. வடக்கில் பொதுமக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஏப். 19
வலி.வடக்கில் மக்கள் பாவனைக்காக காணிகள் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், அந்தப் பகுதிக்குள் நுழைவதற்கான பிரதேசங்களில் அமைக்கப்பட்ட காவலரண்கள் இன்னமும் அகற்றப்படாமலேயே உள்ளன.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்குச் செல்வதற்கான கே.கே.எஸ் வீதி வழியிலுள்ள காவலரண் மற்றும் சுற்றுப்படையினரால் கீரிமலையில் விடுவிக்கப்பட்ட 6.4 ஏக்கர் காணிக்குச் செல்வதற்கான வழியிலுள்ள காவலரண் என்பன இதுவரை அகற்றப்படாமல் உள்ளன.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், கடந்த மாதம் 12 ஆம் திகதி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மற்றும் அதனோடு இணைந்த பகுதிகள் என்பன விடுவிக்கப்பட்டிருந்தன. இந்தப் பகுதிகளுக்குக் காங்கேசன்துறை வீதி பக். 23

## வடமாகாண உறுப்பினர்கள் 28 பேர் வாகனப் பெர்மிற்றுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 19
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 28 பேர், கொழும்பு அரசின் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.
மாகாண சபை உறுப்பினர்கள் இரண்டரை வருடங்கள் பூர்த்தியான பின்னர், தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும். அதனடிப்படையில் வடக்கு மாகாண சபை, பக். 25

## மக்களுக்கு இன்னல் தரும் வரி உயர்வுக்கு இடமில்லை

### ஜனாதிபதி மைத்திரி உறுதி



கொழும்பு, ஏப். 19
நாட்டு மக்களுக்கு இன்னல் தரும் எந்த விதமான வரி அதிகரிப்புக்கும் நான் இடமளிக்கமாட்டேன். அவ்வாறான யோசனைகளை முன்வைக்கும் பொருளியல் நிபுணர்கள் இருப்பார்களாயின், அவர்களை வீட்டுக்கு அனுப்புவதை விடுத்து, நாட்டின் பொருளியல் பொருளாதார வேலைத் திட்டத்துக்கு அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நான் தயார் இல்லை. பக். 24

முச்சந்தி முரளி



எல்லாம் சுதந்திரமாய் வருவதைச் சொல்லுறியளோ...

## வடக்கில் சுதந்திரம் ஏற்படுத்தியது நானே

### மகிந்த பெருமிதம்



கொழும்பு, ஏப். 19
வடக்கு மாகாணத்துக்குக் கருத்துச் சுதந்திரத்தை... – சுதந்திர நடமாட்டத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது நான் தான் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள வசதிகளைப் போன்று இலங்கையில் வேறு எந்த வைத்திய பக். 25

## புதிய பொலிஸ்மா அதிபராக பூஜித் ஜெயசுந்தர பரிந்துரை



கொழும்பு, ஏப்.19
இலங்கையின் புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவின் பெயர் அரசமைப்புச் சபையினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
இந்தப் பரிந்துரை நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
இதன்படி, நாட்டின் 34ஆவது பொலிஸ்மா அதிபராக பூஜித் ஜெயசுந்தரவை ஜனாதிபதி நியமிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
பொலிஸ்மா அதிபராக இருந்த இலங்கக்கோன் ஓய்வு பெற்றதையடுத்தே, அந்த இடத்துக்கு பக். 24

## கரந்தாயில் மீளக்குடியமர்வை தடுத்து நிறுத்திய பொலிஸார்

### தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையிடம் 2 வாரங்களுள் முடிவைப் பெற்றுத் தருவதாகக் கூறி



யாழ்ப்பாணம், ஏப். 19
பளை–கரந்தாய் பகுதியில் தென்னைப் பயிர்ச் செய்கைச்சபையினால் உரிமை கோரப்படும் காணியில், மக்கள் நேற்று மீளக்குடியமர்வதற்காக முன்னெடுத்த நடவடிக்கைகள் பளைப் பொலிஸாரினால் தடுக்கப்பட்டுள்ளன.
இந்த விடயத்துக்கு இரண்டு வாரங்களுக்குள் உரிய தரப்பினரை அழைத்துக் கலந்துரையாடல் நடத்தி தீர்வு பெற்றுத்தரப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் மக்கள் அங்கிருந்து தற்காலிகமாக வெளியேறியுள்ளனர்.
பளை–கரந்தாய் பகுதியில் 1976 ஆம் ஆண்டு முதல் வசித்து வந்த மக்கள், போரின்போது இடம்பெயர்ந்து மீளவும் 2010 ஆம் ஆண்டு முதல் மீள்குடியமர்ந்து, அந்தப் பகுதி பக். 23

metecno The Specialist
கூரைத் தகடுகள் | சேட் தகடுகள் | செண்விச் பெனல் | வளைந்த தகடுகள் | ஓடு டிசைனிலான தகடுகள் | பெர்லிங்க்ஸ்
METROOF Total Roofing Solutions
மெட்டெக்னோ லங்கா பிரைவட் லிமிட்டட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 845 544
www.metecnolanka.com
METECNO LANKA (PVT) LTD
Sri Lanka | Germany | Italy | Spain | Portugal | Chile | Columbia | India | Thailand | Vietnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இயற்கை ஒதுக்கிடப் பிரச்சினையை ஆராய வடக்கு வருகிறார் அமைச்சர்

## நாகர்கோவில் சென்று மக்களைச் சந்திக்கவுள்ளார்

யாழ்ப்பாணம், ஏப்.19

நாகர்கோவில் பகுதியில் 7 ஆயிரத்து 882 ஹெக்ரேயர் நிலப்பரப்பைத் தாவர விலங்கினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் "நாகர்கோவில் இயற்கை ஒதுக்கிடப்" பிரதேசமாக, பிரகடனப் படுத்துவதற்கு முன்னெடுக்கப் பட்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதை அடுத்து, அது தொடர்பில் ஆராய் வதற்காக வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜெயவிக் கிரம பெரேரா எதிர்வரும் 29 ஆம் திகதி வடமராட்சி கிழக்கிற்கு நேரில் வரவுள்ளார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

வடக்கில் 37 ஆயிரத்து 62 ஹெக்ரேயர் நிலப்பரப்பைத் தாவர விலங்கினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், "இயற்கை ஒதுக் கிடப்"பிரதேசமாக பிரகடனப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது.

அதற்குரிய வர்த்தமானி அறி வித்தல் கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரி வில் நாகர்கோவில் பகுதியில் 7 ஆயிரத்து 882 ஹெக்ரேயரும், மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவில் 29 ஆயிரத்து 180 ஹெக் ரேயரும் இதற்காக ஒதுக்கப்படு கின்றது என்று வனஜீவராசிகள் திணைக்களத்தால் வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இயற்கை ஒதுக்கிடப் பிரதேசத் துக்கு காணிகள் வழங்கப்படுவ தற்கு அவர்கள் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம், அமைச்சர் காமினி ஜெயவிக்கிரமவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களால் எடுத்துரைக்கப்பட்டது. அதையடுத்து நேரில் வருகை தந்து இடங்களைப் பார்வை யிட்டு, பொதுமக்களுடன் கலந் துரையாடி முடிவு எடுப்பதற்கு அவர் இணங்கியுள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 29 ஆம் திகதி அவர் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு வர வுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

(ற-ஐ-5)

# ரயர் வெடித்ததால் வாகனம் கடலுக்குள் பாய்ந்து விபத்து

## மதபோதகர் ஒருவர் சாவு; சாரதி படுகாயம் மன்னார் பிரதான வீதியில் சம்பவம்



மன்னார், ஏப்.19

பயணித்துக் கொண்டிருந்த வாகனத்தின் ரயர் வெடித்ததால், வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. அதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதில் பயணித்த மேலும் ஒருவர் படுகாயம டைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து மன்னார் பிரதான வீதியில், விமானப்படை தளத்துக் கும், தள்ளாடி இராணுவ முகா முக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் நடந்துள்ளது.

விபத்தில் இலங்கை பெந்த கொஸ்தே சபையின் மன்னார் கிளையின் மதகுரு (போதகர்) தாவீதுராஜா (வயது - 58) என் பவரே உயிரிழந்தார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். வாகனத் தின் சாரதியான தேவஊழியர் ஏ.யூட் தோமஸ் (வயது - 34) படுகாயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார். ஏனையவர்கள் சிறுகாயங்களுக்குள்ளாகியுள் ளனர்.

யாழ்ப்பாணம்-அரியாலைப்பகுதி யில் மத வழிபாடுகளை முடித்து கொண்டு நேற்றுக் காலை மன் னார் நோக்கி குறித்த குழுவினர் பயணித்துள்ளனர். அவர்கள் இலங்கை பெந்தகொஸ்தே சபையின் வாகனம் ஒன்றி லேயே பயணித்துள்ளனர்.

குறித்த வாகனத்தில் மூன்று ஆண்களும் (தேவ ஊழியர்கள்), ஏழு பெண்களும் (தேவ ஊழிய சகோதரிகள்) பயணித்துள்ள னர். அதன் போதே வாகனத்தின் ரயர் வெடித்ததால் வாகனம் வீதியை விட்டு விலகி கடற்பரப் பினுள் புரண்டு விழுந்து விபத் துக்குள்ளாகியுள்ளது என்று விசாரணையில் தெரியவந்தது என பொலிஸார் கூறுகின்றனர். மேலேதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என் றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-4,56)

# விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா-மன்னார் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று பொலி ஸார் தெரிவித்தனர். இராமன் இராம லிங்கம் (வயது - 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நெளுக்குளம் - மன்னார் வீதி யிலிருந்து வவுனியா நோக்கிச் சைக் கிளில் சென்றபோது சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

சைக்கிளில் சென்றவர் படுகாய மடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராத புரம் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக் காது அவர் உயிரிழந்துள்ளார்.

(ற-ஐ-4,402)

# புதுவருட விழா

வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை மற் றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டுத் திணைக்களம் தென் மராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் தமிழ், சிங்கள புதுவருட விழா இன்று மு.ப. 9 மணி தொடக்கம் மட்டுவில் வளர்மதி விளை யாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது. அத்துடன் பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (ற-9)

# இராணுவ அதிகாரியின் தனிப்பட்ட நடவடிக்கையே முல்லைச் சம்பவம்

## வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 19

முல்லைத்தீவில் கிராமசேவகர் ஒருவர் இராணுவத்தின் கெடு பிடிகளுக்கு உள்ளான சம்பவமானது தன்னிச்சையான தனிப்பட்ட இராணுவ அதிகாரியின் நடவடிக்கையாகும். இத னைப் பயன்படுத்தி வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லை. இராணுவ நிர்வாகமே உள்ளது என்று அர்த்தப்படுத்த முடியாது. - இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லையென்ற முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் தற்போது வடக்கில் பாதுகாப்பைக் கருத் திற் கொண்டே இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் கிராமசேவகர் ஒருவர் இராணுவத்தின் கெடுபிடி களுக்கு உள்ளான சம்பவமானது தன்னிச்சையான தனிப்பட்ட இராணுவ அதிகாரியின் நடவடிக்கையாகும். அதனைப் பயன் படுத்தி வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லை. இராணுவ நிர்வாகமே உள்ளது என்று அர்த்தப்படுத்த முடியாது. இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி விசாரிக்கப்பட வேண்டும்.

விக்கினேஸ்வரன் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார். இவை யெல்லாம் தற்போது மக்கள் மத்தி யில் எடுபடாது. அத்தோடு இலங்கையில் தமிழ், முஸ்லிம், சிங்களம் மற்றும் மலையகம் என்று மாகாணங்களைப் பிரிக்க முடியாது.

கிழக்கில் முஸ்லிம்கள், சிங்களவர்கள், தமிழர்கள் ஒற்றுமை யாக வாழ்கின்றனர். இதே போன்று மலையகத்திலும் மக்கள் வாழ்கின்றனர். எனவே விக்கினேஸ்வரனின் யோசனை தேவையற்றது - என்றார்.

(ற-ஐ-5)

# கல்விப் பணிப்பாளர் இடமாற்றம் குறித்து விசாரணைகள் நடத்துக

## இலங்கை ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19

முல்லைத்தீவு - குமுழமுனை மகா வித்தியாலயத்தில் இல் லாத கட்டடத்தை இருக்கின்றது என்று காட்ட முற்பட்டபோது அவ் வாறான கட்டடம் இல்லை என்று உண்மையைக் கூறியதால், கல் விப் பணிப்பாளர் இடமாற்றம் செய்யப்பட்ட விடயத்தில் சம்பந் தப்பட்ட அதிகாரிகளைவிசாரணை செய்ய வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசி ரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித் துள்ளதாவது-

2013 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச தலைமை யில் அபிவிருத்திக் குழுக் கூட் டம் இடம்பெற்றது. அதில் குறித்த பாடசாலையில் குறித்ததொரு கட்டடம் உள்ளது என்று அரச தரப்பினரால் புரஜெக்டரில் ஜனாதிபதிக்குப் போட்டுக் காட்டப் பட்டது.

அதுபற்றிக் கேள்வி எழுப்பப் பட்டபோது அத்தகையதொரு கட்டடம், குறித்த பாடசாலையில் இல்லை என்று அப்போது அந் தப் பாடசாலைக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த வரதராஜமூர்த்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையிலேயே பகிரங்க மாக உண்மையைக் கூறினார். அவர் அவ்வாறு கூறியதால் இல்லாத ஒரு கட்டடத்தை இருக் கின்றது என்று காட்ட முற்பட்ட அரச தரப்பினரின் குட்டு அம் பலமானது.

அவர் அவ்வாறு உண்மை யைக் கூறியதால் அப்போது வடக்கு மாகாண ஆளுநராக இருந்த சந்திரசிறிக்கும் அவரது அலுவலகத்தினருக்கும், இல் லாத ஒன்றை இருக்கின்றது என்று காட்ட முற்பட்ட கல்வி அதி காரிகள் சிலருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரதராஜமூர்த்தி திடீ ரென தீவக வலயத்துக்கு இட மாற்றம் செய்யப்பட்டார். பின் னர் யாழ்.கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு தற் போது யாழ்.கல்வி வலயத்தி லேயே பணியாற்றி வருகிறார்.

குறித்த இடமாற்றம் செய்ய முற் பட்டமை தவறானது என்று தெரி வித்துள்ள சங்கம், அது பற்றிய பூரண விசாரணையை மேற் கொள்ள வேண்டும் என்று ஜனா திபதிக்குக் கடிதம் அனுப்பியுள் ளது. அதன் பிரதிகள் வடமாகாண ஆளுநர், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகி யோருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன - என்றார். (ற-4)

# பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கு உள்ளூராட்சி அமைச்சால் நிதியுதவி

யாழ்ப்பாணம், ஏப்.19

தேசிய ரீதியாக பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ள உள்ளூராட்சி அமைச்சு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட் டங்களுக்கான மதிப்பீட்டை அனுப்பி வைக்குமாறு சகல பிரதேச சபை செயலாளர்களுக் கும் அறிவித்துள்ளது. அதையடுத்து வேலைத் திட் டங்களுக்கான மதிப்பீட்டைத் தயாரிப்பதில் செயலா ளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

போதிய வருமானம் கிடைக்காததாலும், நிதி பற்றாக் குறையாலும் நாட்டிலுள்ள அநேகமான உள்ளூ ராட்சி சபைகள் மக்களுக்குத் தேவையான அபி விருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடி யாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பிரதேசத் தினதும் , மக்களினதும் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையில் ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் தலா 40 லட்சம் ரூபா வீதம் நிதியுதவி வழங்க மத்திய அரசின் கீழுள்ள உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

அதையடுத்து, இது சம் பந்தமாக சகல பிரதேச சபை களுக்கும் அறிவித்துள்ள உள்ளூராட்சி அமைச்சு, மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றிய மதிப்பீட் டைத் தயாரித்து அனுப்பி வைக்கு மாறு செயலாளர்களைக் கோரியுள்ளது.

அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் வரு மானம் குறைந்த பிரதேச சபைகளுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமைந்துள்ளது. (ற-ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அழுத்தம்; சந்தேகநபரின் பிணை அனுமதி நீக்கம்

## மன்னார் நீதிவான் அதிரடி உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 19

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி கற்பதற்குச் சென்ற மாணவிக்குப் பாலியல் தொந்தரவு புரிந்த குற்றச்சாட்டில் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்ட கல்வி நிறுவன இணைப்பாளர் சார்பிலானோர் மற்றும் அதிகாரிகள், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அழுத்தம் கொடுத்ததாக மன்னார் நீதிவான் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சந்தேகநபரின் பிணை அனுமதியை நீக்கிய நீதிமன்று, அவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அழுத்தம் கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டில், பிரதேச செயலர் உள்ளிட்ட அலுவலர்கள் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

மன்னாரில் உள்ள கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்ற மாணவி ஒருவரை சில வாரங்களுக்கு முன்னர், அதே கல்வி நிலையத்தில் இணைப்பாளராகப் பணி புரியும் அன்டன் சமரக்கோன் அன்றூ அனஸ்லீ என்பவர் பாலியல் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதனால் அவர் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குறித்த வழக்கு மன்னார் நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

ஆனால் குறித்த சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், வழக்குக்கான முறைப்பாட்டை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு, குறித்த சந்தேக நபருக்கு சார்பாக பலரிடமிருந்தும் சிறுமியின் தரப்பினரிடம் பல முறை அழுத்தங்கள்பிரயோகிக்கப்பட்டன.

இதில் மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர், மன்னார் பிரதேச செயலகத்தில் கிராமசேவையாளர்கள் பிரிவுக்கு மேற்பார்வை உத்தியோகத்தராக கடமை செய்யும் உத்தியோகத்தவர் ஒருவர் மற்றும் சந்தேக நபரது மாமியார், நண்பர் போன்றோர் சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவரது குடும்பத்தினரையும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி முறைப்பாட்டை மீளப்பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என குறிப்பிடப்பட்டது.

எனினும் சிறுமியின் தரப்பினர் முறைப்பாட்டை மீளப்பெறக் கூடாது என்பதில் உறுதியாக இருந்துள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி சார்பாக நேற்று நீதிமன்றில் முற்பட்ட சட்டத்தரணிகள், குறித்த சந்தேகநபருக்கு எதிரான முறைப்பாட்டை மீளப்பெறுமாறு கூறப்பட்ட விடயத்தை மன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையாரது முறைப்பாட்டை சத்தியக்கடதாசி வடிவில் மன்றுக்குச் சமர்ப்பித்தனர்.

இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணையில் இருக்கும் போது, சாட்சிகளை அச்சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட சந்தேக நபர் நீதிமன்றநடவடிக்கைகளை முடக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், சந்தேக நபர் இந்தச் சூழ்நிலையில் பிணையில் இருப்பது சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தலான ஒரு விடயம் என மன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த வழக்கின் விசாரணையை மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சரியான விதத்தில் மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிமன்று கட்டளையிட்டது.

மேலும் நீதிமன்ற விசாரணையைக்குழப்பும்நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும், அவ்வாறு நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு விளைவிப்பது உறுதிப்படுத்தப் பட்டால், அவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் வழக்கில் இடையூறு புரிந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் பிரதேச செயலாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரது செயற்பாடுகள் தொடர்பிலும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கும்படியும் நீதிமன்று கட்டளையிட்டது.

தவிர, மன்னார் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுடன் இணைந்து, மன்னார் பெண்கள் சிறுவர் பொலிஸ் பிரிவினர், மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் கல்வி நிலையங்களுக்கும் சென்று மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும், வார நாள்களில் வெள்ளிக்கிழமை மாலையிலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமையிலும் தனியார் வகுப்புக்கள் இடம்பெறக் கூடாது எனவும் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா உத்தர விட்டார்.

குறித்த சந்தேகநபருக்கு வழங்கப்பட்ட பிணை நீக்கப்பட்டு, அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு மேலதிக விசாரணைக்காக மே மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் அன்ரன் புனிதநாயகம், திருமதி.மங்களேஸ்வரி சங்கர், ரனித்தா ஞானராஜா மற்றும் த.வினோதன் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். (வ-4)

## காங்கேசன் நடேஸ்வராக் கல்லூரியின் புனரமைப்புக்கு அரசிடமிருந்து நிதி

### மாவை. எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.19

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் புனரமைப்புக்கான நிதி தொடர்பில், மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்து, உரிய நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

23 வருடங்களாக இயங்காத நிலையில் இருந்த காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி, கடந்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பாடசாலை 2 ஆம் தவணைக்கான காலப்பகுதியில் திறக்கப்படும் என கூறப்பட்ட நிலையில், அதற்கான முயற்சிகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் மற்றும் முன்னாள் வலி, வடக்கு பிரதேச சபை தவிசாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவிக்கையில் ,

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் புனரமைப்பு மற்றும் தளபாடக் கொள்வனவு தொடர்பான செலவு தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் முகமாக நேரில் ஆராயச் சென்றோம். அத்துடன், பாடசாலைக்குச் செல்லும் காங்கேசன்துறை பிரதான வீதியில் உள்ள படையினரின் சோதனைச் சாவடியை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கையை உரிய இடத்துக்குக் கொண்டு செல்வோம் .

மேலும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. பாடசாலைச் சூழல் கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ப படையினரின் பிரசன்னம் இன்றி அமைதியான சூழல் ஏற்பட மேற்கொள்ள வேண்டிய வழிமுறை தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது - என்றார். (வ-101)

## விடுமுறை தினங்களில் கட்டாய மருத்துவ சேவை வழங்க வேண்டும்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19

ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களில் வைத்தியசாலை களில் குறைந்தது காலை 8 மணி தொடக்கம் மு.ப. 10 மணி வரையாவது கட்டாய மருத்துவ சேவையை நடைமுறைப்படுத்த வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி பீ.ஜி.மகிபால பணித்துள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவின், நோயாளர் சிகிச்சை வழங்கும் சேவையை ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான சுற்றுநிருபம் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி பீ.ஜி.மகிபால அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அனுப்பியுள்ளார்.

அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

இவ்வாறு மருத்துவ சேவையை இதுவரை நடைமுறைப்படுத்தாத நிறுவனங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். தற்போது காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை சேவையை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்கள் அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவில் மக்களுக்கு வழங்கும் சேவையானது ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தின்ங்களில் நடைமுறைப்படுத்துவது, அதனை உறுதிப்படுத்துவது சகல திணைக்களத் தலைவர்களினதும் கடமையாகும்.

ஞாயிறு மற்றும் அரச பொது விடுமுறை தினங்களில் அரச பணியாளர்கள் உட்பட பொதுமக்களின் நலன்கருதி மு.ப. 10 மணியுடன் நிறுத்தப்படும், வெளிநோயாளர் பிரிவின் சேவையை நண்பகல் 12 வரைநீடிக்கவேண்டும். முதற்கட்டம ஆதார வைத்தியசாலை மற்றும் அதற்கு மேற்பட்ட படிநிலைகளைக் கொண்டுள்ள வைத்தியசாலைகளில் இந்த நடைமுறை செயற்படுத்தப்பட வேண்டும்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4,9)

**பெயர் மாற்றம்**

பங்களாலேன், மல்லாகத்தைச் சேர்ந்த சந்திரகுமாரன் பிருந்தாபன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சந்திரகுமாரன் அபிலக்ஷனன் எனப் பெயர்மாற்றம் செய்வதோடு. இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சந்திரகுமாரன் அபிலக்ஷனன்

**வேலையாள் தேவை**

அழகு கலையகம் ஒன்றுக்கு மேக்கப். கேக்ஜசிங் தெரிந்த வேலையாள் தேவை. (பெண்கள் மட்டும்)

தொ.பே. 077 360 4469
021 222 3885

**மருந்தாளர் தேவை**

யாழ்.நகருக்கு அருகில் உள்ள மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொ.பே. 077 391 8825

**மணமகன் தேவை**

வலிகாமம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985இல் பிறந்த அவிட்டம் 4ஆம் பாதம், செவ்வாய்க்குற்றம் கிரகபாவம் 74 A/L படித்த மணமகளுக்கு தகுந்த உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை.

தொடர்பு: 077 2349 270

(J 475) (10)

**சுத்திகரிக்கப்பட்ட குடி நீர் விநியோகம்**

பிரபல நிறுவனத்தின் 20l குடி நீர் போத்தல்கள் தேவைக்கேற்றவாறு உங்கள் வீடுகளுக்கே கெண்டு வந்துதரப்படும்.

தொடர்பு:- 077 3549092, 077 4429 316

**தேவை**

அலுவலக உதவியாளர் பெண் (Office Staff) தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்டிருத்தல் (க.பொ.த.சா/த சித்தி) வயது எல்லை (25-35)

077 829 41 81

(J 476)(10)

திரு.ஹாம்சன் அவர்களின்...

**SPOKEN ENGLISH**

இளைஞர் யுவதிகள், O/L, A/L எழுதியோர், தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.

"அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

3 மாத சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மற்றும் Video DVD என்பன முழுவதும் இலவசம்.

23.04.2016 இற்குமுன் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி உண்டு.

SAAMSON

021 320 3313
077 1570 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு

**வங்கியியல் கற்கைநெறிகள்**
*IABF & DABF*
*Medium :- Tamil & English*
Minimum qualification :-
G.C.E. O/L 6 Passes
including 5 Credits

**பட்டயக்கணக்காளர் ஆவதற்கு**
*Chartered Accountancy*
Executive Level , Business level
*Medium :-Tamil & English*
Minimum qualification:-
G.C.E. A/L 3 Passes

**ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு**
*CERTIFICATE COURSE IN ENGLISH*
Minimum qualification :-
G.C.E. O/L 3 Passes
Total Hours :- 130 Hours

**A/L** வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன **2016 & 2017 & 2018**

Further Details : -
**Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149
(C/29944)(10.17.18)



## தென்னிந்திய திருத்தல யாத்திரை

**நாள்கள் - 16** **யாத்திரிகர் - 10**

**ஆரம்பம் - 20.05.2016**

**தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடாக திருத்தல யாத்திரை தரிசிக்கும் ஆலயங்கள்.**

உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, மணக்குளவிநாயகர், காணிப்பாக்கவிநாயகர், திருப்பதி, சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்த்திரி, ஏகாம்பரேஸ்வரர், **திருவானைக்காவல்**, திருவாரூர், திருவிடைமருதூர், திருவையாறு, தஞ்சாவூர், இராமேஸ்வரம், **உத்திரகோசமங்கை, திருப்புலாணி**, நவபாஷாணம், குருவாயூர், **ஐயர்மலை, சிவன்மலை, பொற்கோயில்**, பத்மநாதசுவாமி, கொடுங்களூர் பகவதி அம்மன், சுசீந்திரம், கபாலிஸ்வரம், பஞ்சவடி, அனந்தமங்கலம், ஆஞ்சினேயர், மதுரைமீனாட்சி, கன்னியாகுமரி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்கபட்டிணம், சமயபுரம், மேல்மருவத்தூர் **பிரம்மா கோயில், 9 நவக்கிரக ஆலயங்கள்** தனித்தனியாக, திருநள்ளாறு சனிபகவான் உட்பட ஆறுபடை வீடுகள் (திருச்செந்தூர், பழனி, பழமுதிர்சோலை, திருத்தணிகை, திருப்பரம்குன்றம், சுவாமிமலை) குன்றக்குடி, பைரவன்பட்டி பைரவர், காமாட்சி, வனத்திருப்பதி, திருக்கடையூர் அபிராமி உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம்.

முக்கியமாக கும்பகோணம் மகாமயை குளத்தில் கும்பமேளா நடந்த இடத்தில் 90 நாள்களுள் நீராடினால் தோஷங்களும் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் புனித குளத்தில் நீராட விஷேஷ ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**கட்டணங்கள் உட்பட மேலதிக விவரங்களை கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்**

**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்** (ராஜன் - மகன்)
**59.3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**T.P: 0777 680 102, 0777 362 154**
**F.B.sridevisriranganathan.thuraiappa**





## இணுவில் திருப்பதி

## அருள்மிகு ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலயம் வசந்தகாலத் திருமஞ்சனத் திருவிழா

**காலம்: 19.04.2016 செவ்வாய்க்கிழமை முதல்**
**22.04.2016 வெள்ளி வரை**

**நேரம் : தினமும் காலை 6.30 மணிமுதல்**
**12.00 மணிவரையும்**
**யாகபூசை, ஸ்ரீநிவாசர் நந்தவனத்தில் திருமஞ்சனம்**
**மாலை 4.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை**
**யாகபூஜை ஸ்ரீநிவாசர் திருமஞ்சனம், ஆராதனை.**

**சித்திரை 21.04.2016 வியாழன் காலை 6.00 மணிமுதல்**

யாகபூஜை, 81 கலச மகா திருமஞ்சனம், தீர்த்தவாரி,
விசேட பூஜை
மாலை 4.00 மணிமுதல் மகா பூர்ணாகுதி, ஸ்ரீநிவாசர்
கருட சேனையுடன் கும்ப வீதியுலா.
ஸ்ரீநிவாசருக்கு கும்ப புரோட்சனம்.

**சித்திரை 22.04.2016 வெள்ளி மாலை 4.00 மணிமுதல்**

இலக்சுமி நாராயணர் திருக்கல்யாண வைபவம்
ஊஞ்சல் சேவை
மலர்ப் பூந்தண்டிகையில் ஸ்ரீநிவாசர் திருமகளுடன்
சேவை கண்டருளுவார்.

(J/464)(10)

**உபயகாரர்கள்.** / T.P: 021 224 2300 / ஆலய தர்மகர்த்தா **ச.கணேசலிங்கம்.**


# ஐ.தே.க. மே தினக் கூட்டத்துக்கு பெரும் தொகையினர் திரள்வர்

## கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்குப் பெருந் தொகையான மக்கள் திரட்டப்படுவர் என்று அமைச்சரும் கட்சியின் பொதுச் செயலாளருமான கபிர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களை விட இந்த முறை மே தினக் கூட்டத்தில் என்றுமில்லாதவாறு மக்கள் திரட்டப்படுவர் என்று கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார்.ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த மே தினக் கூட்டத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கவுள்ளார்.

மே தினக் கூட்டம் தொடர்பில் தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கட்சி உறுப்பினர்களை அணி திரட்டும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

பீ.டி சிறிசேன விளையாட்டு மைதானத்திலிருந்து குறித்த பேரணி ஆரம்பமாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)


**வீடு வாடகைக்குண்டு**

A9 வீதி, அரியாலையில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 245 3673**



**பெயர் மாற்றம்**

ஈச்சங்குளம், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியாவைச் சேர்ந்த **கோபால் சோமவாசினி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **கோபால் கோமவாசினி** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**கோபால் கோமவாசினி**



**தவறிவிட்டது**

செல்வநாதன் வினுஷன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் (B 2766403) கச்சேரிக்கும் யாழ் நகரிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், உடன் தொடர்பு கொள்ளவும். (66533)(2.18.20)

**077 579 2672, 075 203 4889**



**பெயர்மாற்றம்**

2 ஆம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த **கனகரத்தினம் மனோரஞ்ஜிதராணி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **கனகரத்தினம் மனோரஞ்சி** எனமாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை அறியத்தருகிறேன்.

**க.மனோரஞ்சி**



**Village 2 City Club**
Jaffna, Sri Lanka

**அதிர்ஷ்ட வினா விடை சீட்டிழுப்பு முடிவுகள்**
**17.04.2016**

| | |
|---|---|
| **முதலாம் பரிசு** | **- 18611** |
| **இரண்டாம் பரிசு** | **- 8063** |
| **மூன்றாம் பரிசு** | **- 18718** |

ஆறுதல் பரிசுகள்
**27759, 35536, 35534, 6236, 11596**

நிர்வாகத்தினர்.

**077 833 1202**


## அருளுரை நாளை

யாழ்ப்பாணம், ஏப்.19

ஆஸ்திரேலியா மற்றும் தென்கிழக்கு ஆசியப் பிராந்திய பிரம்ம குமாரிகள் நிலையங்களின் இயக்குநர் கலாநிதி நிர்மலா கயாரியா -ரேத்தின்அழைப்பு என்னும் தொனிப் பொருளில்நாளை புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். பிறவுண் வீதி, சுக்டகாம் மண்டபத்தில் அருளுரை நிகழ்த்தவுள்ளார். சமூகத் தலைவர்கள் அதில் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வாழைப்பழம் விலை அதிகரிப்பு

குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. தற்போதைய கடும் வறட்சிவெப்பத்தை அடுத்து கூடுதலான மக்கள் வாழைப் பழத்தை பயன்படுத்தி வருகின்றனர்.திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளில் கதலிவாழைப்பழத்தின் விலை கிலோ 55ரூபாவுக்குமேல் விற்கப்படுகின்றது. நீர்வேலி வாழைக் குலை விற்பனைச் சங்கத்தில் வாழைப் பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துக் காணப்படுவதோடு சங்கத்துக்கு வாழைக் குலைகள் குறைந்தளவே தினமும் வந்து சேர்கின்றன.

விலை அதிகரிப்பை அடுத்து வன்னியில் இருந்து பெருமளவிலான வாழைக்குலைகள் வியாபாரிகளால் எடுத்துவரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படு


**கேள்வி அறிவித்தல்**

**செயற்திட்ட அலுவலகம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்**
**புள்ளிவிபரக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

தற்காலிகமாக செயற்திட்ட அலுவலகம் ஒன்றை மே1 தொடக்கம் யூலை 31 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கு வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக வழங்குனர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றன.

தற்காலிகமாக வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் செயற்திட்ட அலுவலகத்தில் காணப்படவேண்டிய வசதிகள்

- உத்தியோகத்தர்கள் எண்மர்(8) கூடி அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய மேசை ஒன்றும் மற்றும் 6 கதிரைகளை கொண்ட விறாந்தை. தேவைப்படுமிடத்து சாப்பாடு மற்றும் தேனீர் பருகக்கூடிய வசதியுடைய சாப்பாட்டறை.
- சுத்தமான குடிநீரை தடையின்றி பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி இருத்தல்.
- 6 கணினிகள் வேலை செய்யக்கூடிய மின்சார இணைப்பு வசதிகள்
- போதியளவு நீர் வசதி மற்றும் இரண்டு பாதுகாப்பான குளியலறை மற்றும் இரு மலசலகூட வசதிகள்
- அளவீட்டு குழுவினருக்கான வாகனத்திற்கான பொருத்தமான தரிப்பிடம்.
- தொலைத்தொடர்பு சமிஞ்ஞைகள் சிறந்த முறையில் உள்ள இடமாக கட்டடம் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறித்த காலத்திற்கான மின்சாரக்கட்டணம் மற்றும் நீர்க்கட்டணம் போன்றவை வீட்டு உரிமையாளரினால் செலுத்தப்படல் வேண்டும்.
- குறைந்தது நான்கு மெத்தை கட்டில்கள் கொண்ட நான்கு அறைகள் இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி படிவங்களை 19.04.2016ஆம் திகதியிலிருந்து 25.04.2016ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00வரை யாழ்ப்பாண மாவட்டச் செயலக புள்ளிவிபரக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாக பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகளை, கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "செயற்திட்ட அலுவலகம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளல்" எனகுறிப்பிட்டு 26.04.2016ஆம் திகதி பி.ப3.00 மணிக்கு முன்னர் நேரடியாக மாவட்ட புள்ளிவிவரவியலாளர், புள்ளிவிவரக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சமர்ப்பிக்கவும். அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்விகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்தில் திறக்கப்படும். பெறுகைக் குழுவின் முடிவே இறுதியானது.

மேலதிக தகவல்களுக்கு மாவட்ட புள்ளிவிவரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 021 222 3330 / 0777642379

நா. வேதநாயகன்.
அரசாங்கஅதிபர்/மாவட்டச் செயலாளர்.

(21207)(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு - 10, கண்ணகிபுரம்

## அருள்மிகு கண்ணகி அம்மன்

என வழங்கும்

## ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான


# தேர்த்திருவிழா சிறப்பிதழ்



நாளை (20.04.2016)
புதன்கிழமை
முற்பகல் 10 மணிக்கு

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைகண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

முழு உலகையும் காத்து இரட்சிக்கும் எம் அன்னை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் மற்றும் விநாயகப்பெருமான், முருகப்பெருமான் அழகிய சித்திரத் தேர்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முத்தேர் பவனி. அடியவர்கள் அனைவரும் கலந்து அன்னை இராஜ ராஜேஸ்வரியின் சித்திரத்தேர் வடம் பிடிக்க வாரீர் வாரீர் என அன்புடன் அழைக்கின்றோம்.



**தீர்த்தோற்சவமும் சித்திரா பௌர்ணமி விரதமும் நாளை மறுதினம் (21.04.2016) வியாழக்கிழமை காலை இந்துமா சமுத்திரக் கரையில் நடைபெறும்.**

## நிர்வாக சபை

**Woodlands Hotel** Pure Vegetarian
No.192, 4th Cross Street, Colombo - 11
Tell:011 247 2142



தேர்த் திருவிழா
சிறப்புற
வாழ்த்துவோர்

**RAVI LANKA TRADERS**
No.216, Bodhirajah Mawatha
(Gasworks Street), Colombo - 11
Tel: 2423047 Fax: 2330330
Mobile : 077 302 2036

**ESA**
E.SITTAMPALAM & SONS
General Merchant Commission Agent
Wholesale Retail Dealer in Food Stuff.
No.223, 5th Cross Street, Colombo-11
Tel : 011 243 5917, 011 232 6587

**STS Agency**
Importers, Exporters General Merchants & Commission Agents
No.118, 4th Cross Street, Colombo - 11
Tel: +94112451036 Mobile:+94773779464
Email: nnadarajan1978@gmail.com

**New U & R TRADER**
# 171, 5th Cross Street,
Colombo- 11
Tel : 243 6227, 23 82990

**UTHAYA AGENCY**
No.111, Fourth Cross Street,
Colombo - 11
Tel: 242 2584, 243 7018, 43 44524

**Raamsethu& Co**
No.65, Fourth Cross Street,
Colombo - 11.
Tel: 238 0374, 2323 686

**AMILEX**
AMILEX (PVT) LTD
No.222, Bodhiriraja Mawatha,
Colombo -11
Tel:0112471472

**SPS**
S.P.S Agency
Importers & Commission Agent
No.113, 4th Cross Street, Colombo - 11
Phone: +9411 232 6204,
+9411 244 1824

**Arun Tran'sWaays**
Prima Wheat Flour Authorized Dealer
No: 165, 5th Cross Street,
Colombo- 11
T.P. 254 3757

**VEMAAL CO.(PVT) LTD**
No: 01, Dam Street,
Colombo- 12.
No.72, Wolfendhal Street,
Colombo- 13.
Tel: 011 2431641, 011 233 6565

**Menan Trading Co.**
General Merchants & Commission Agents
No : 82, 4th Cross Street,
No.208, Prince Street, Colombo-11.
Phone: 011 232 4092

**THAYA TRADERS**
No.276, Keyzer Street, Colombo -11
T.P: 011 243 9970

**M.MUTHIAPILLAI & SONS**
NO.06,Sri Kathirasan Street, Colombo -13.
T.P : 0112 444 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சிதம்பரநாதன்



தோற்றம்
11 . 08 . 1934

மறைவு
17 . 04 . 2016

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிதம்பரநாதன் 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானசுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்தரியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- தங்கமுத்து தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஞானசுந்தரம்.- கந்தசுவாமியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வல்லிபுரம்- சிதம்பரநாதனின் (ஓய்வு பெற்ற தபால அத்தியட்சகர்) பாசமிகு மனைவியும் மற்றும் சிறீதரன்(லண்டன்). இரவீந்திரன்.சுலோஜனா(லதா-சுவிஸ்). றஞ்ஜனா (லண்டன்). கிருபேந்திரன்(லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் சுதர்சினி. சியாமளா காலஞ்சென்ற தாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் கவினன். கவிதா. கிஷானி. கிஷாந். கிறிஷாந். சுவீத்தா. கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2016) புதன்கிழமை வல்வெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இலுப்பையடி,**
**வல்வெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

021 205 5185

## 10ஆம் ஆண்டு நினைவுகளில்




அமரர்
**நவரத்தினம் பிரகாஸ்**
(மு/மல்லாவி ம.கல்லூரி.
கணித பிரிவு மாணவன்)

மண்ணில் 24.02.1988
விண்ணில் 19.04.2006

பத்து ஆண்டுகள்
பறந்தோடிச் சென்றும்
பாரினிலே நீர் விட்டுச் சென்ற
நினைவுகள் என்றும் அழிவதில்லை

**குடும்பத்தினர்.**
வாகையடிச்சந்தி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.03.2016
ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவரும்
அன்பு சித்தப்பாவும்
அன்பு மைத்துனருமாகிய

*அமரர்*
***நாகலிங்கம் தனபாலசிங்கம்***
[ஓய்வு நிலை பொலிஸ் அதிகாரி]

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (19.04.2016) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் இல - 81, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்காதவர்கள் தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

லயன் வடிவேலு பூலோகேந்திரன்
லயன் Dr. மு.கதிர்காமநாதன்
லயன் Dr. க.மு.பத்மநாதன் (வெஸ்கோ பார்மசி)


### அரசுக்கு வெளிநாடுகள் ஆதரவு

கொழும்பு, ஏப்.19 கடந்த ஆட்சிக் காலத்தில் எங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள் இப்போது எங்களை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சிக்கென ஒரு தலைவர் இருக்கிறார். எனவே, நாங்கள் அவருடனே செயற்படுகின்றோம். சிலரது தேவைக்காக கட்சியை விட்டு எதிராகச் செயற்படப் போவதில்லை. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் உள்ள 90 வீதமானோர் கட்சி பிளவடையவிரும்பாதவர்களே. தலைவரின் முடிவுகளுக்கு ஏற்ப கட்சி செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஐ-5)

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை சிவகுமார் (பெரியண்ணா)

யாழ்ப்பாணம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சாந்தசோலை வீதி, பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவகுமார் (பெரியண்ணா) 16.04.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை சிவபாக்கியம் அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், அருட்பெரும் சோதியின் அன்புக் கணவரும், பகிரதன் (மேனன்), சங்கீதா, ராஜ் குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தகுமார் (ஆனந்தன்), சிவராஜகுமார், (சிவாண்ணா), சிவராணி (பபி), சிவராகினி, சந்திரகுமார், சிவரஞ்சினி, சிவலோஜினி, சிவநேசகுமார், சிவபாலினி, சிவபாலகுமார், சிவ சாயினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியலட்சுமி, வில்வராஜா (APC இந்திரன்), இரட்னேஸ்வரன், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் வரத லிங்கம், திரு, செல்வி, திருமகள், கௌசி, விக்கினேஸ் வரன் ஆகியோரின் மைத்துனரும், கலைவாணி, வைகுந்தன் ஆகியோரின் மாமனும், சயன், சச்சின், தஸ்வின், பிரகதி ஆகியோரின் பேரனும், செந்தூரன், செனந்தனன், கோடீஸ்வரன், அபிராமி, துஷாந்த், வோசி, துஷி, விதுசன், யதுசன், அபிராம், அக்ஷயா ஆகியோரின் பெரியப்பாவும், அபிராமி, தாட்சாயினி, ஹரி, கிரி, நந்தினி, நந்துஷன், சாரங்கா, வாதுனன், வாரணன், திவ்வியா, ரமணன், கஜன், காருண்யா, தாரணியா, ஆதித்தியன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2016) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாந்தசோலை வீதி,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**தகவல்:**
**சகோதரர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077 801 8799/ 077 655 5260

# வடக்கு மாகாண சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரிக்கிறது

## கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.19

வடக்கு மாகாணத்தின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருகின்றது என்று தெரிவித்துள்ள வடபிராந்திய கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம் அதனை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது.

இராணுவ மயமாக்கலை அகற்றுவது இன்றைய அவசரத் தேவையாக உள்ளது என்றும், இராணுவத்தினரை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் அந்த ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு அதிகரித்து வருவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் அனைவரும் இயல்பாக வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படுமாயின் மட்டுமே நீதி மைய உரிமை சார் நல்லிணக்கம் நனவாகும்.

எந்தவித அனுமதியுமின்றி தென்னிலங்கை மீனவர்கள் முல்லைத்தீவில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர். கொக்குத்தொடுவாய் வடக்கிலுள்ள புலிபாய்ந்தகல் அருகாமையில் அத்து மீறிக்குடியேறி கடற்றொழிலில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கச் சென்ற கிராம அலுவலரான சீவரட்ணம் யேசுரட்ணம் தென்னிலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

அதன்பின் தென்னிலங்கை மீனவர்களது தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற 593 ஆவது படைப்பிரிவு இராணுவ அதிகாரி கேணல் சமந்த சில்வா, கிராம அலுவலரின் தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை என்பவற்றை எடுத்துக்கொண்டதுடன் தகாத வார்த்தைகளாலும் திட்டியுள்ளார். தென்னிலங்கை மீனவர்களினதும் இராணுவத்தினதும் பொறுப்பற்ற இந்த நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம்.

> மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம், வவுனியா கிறிஸ்தவ ஒன்றியம், வன்னி கிறிஸ்தவ ஒன்றியம் மற்றும் வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் என்பன கையெழுத்திட்டுள்ளன

சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவது அறத்துக்கு மாறானது. இது ஆரோக்கியமானதல்ல. இது நல்லிணக்கம் நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பதையே வெளிப்படுத்தும். இதனால் சிவில் நடைமுறைகளை தென்னிலங்கை மீனவர்கள் மதிக்கப் பழக வேண்டும். இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது.

வடமாகாணத்தில் இராணு வத் தலையீடுஉற்கனவேகல்விஅமைச்சின் பொறுப்பிலுள்ள முன்பள்ளிகளிலும் காணப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக, முன்பள்ளிகளில் கற்பிப்போரை சிவில் பாதுகாப்பு படையினராக நியமித்து, மாதாந்த சம்பளத்தை வழங்கி, அவர்களது இயலாமையை தமது தலையீட்டுக்கு பாவிப்பதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொருத்தமானதல்ல. இராணுவத்தை அகற்றுவதன் மூலம்தான் இப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவரலாம். எனவே அரச சிவில் நிர்வாகம், அரச அதிபர், பிரதேச செயலாளர், கிராம அலுவலர், பொலிஸ், நீதிமன்றம் என்பவை இராணுவத் தலையீடின்றி இயங்குவது உடனடியாக உறுதி செய்யப்பட வேண்டும். அரச இராணுவம், அரச சிவில் நிர்வாக செயற்பாட்டுக்குத் தடையாகவுள்ள நிலைமை தொடரக்கூடாது. இந்த நிலை நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

அந்த அறிக்கையில், மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியம், வவுனியா கிறிஸ்தவ ஒன்றியம், வன்னி கிறிஸ்தவ ஒன்றியம் மற்றும் வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் என்பன கையெழுத்திட்டுள்ளன.(ற-ஜ-4)

### திருமுறை மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.19

**வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்** சைவசமய அபிவிருத்திக் கழகம் திருநாவுக்கரசர் குரு பூசை தினத்தை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது என பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல்3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. தரம் 1, 2 பாலர் பிரிவிலும், தரம் 3, 4 கீழ்ப் பிரிவிலும் நடத்தப்படவுள்ளன.

பாலர் பிரிவுக்கு "மாசில் வீணையும் மாலை மதியமும்", "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" ஆகிய இரு திருமுறைகளும், கீழ்ப்பிரிவுக்கு "கூற்றாயினவாறு விலக்ககலீர்", "நிலைபெறுமா றெண்ணுதியேல்" ஆகிய இருதிருமுறைகளும் மனனம் செய்யப்பட வேண்டும்.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல. 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)



வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலய வரலாற்றைக் குறிக்கும் முகமாக அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டு வைபவரீதியாக திறக்கப்பட்டுள்ளது. வவுனியா பிரதேச செயலர் உதயராசா கல்வெட்டைத் திரை நீக்கம் செய்தார். இதன் போது ஆலய பிரதம குருவால் பிரதேச செயலர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ற-ஜ)

# வடக்கு மாகாண திணைக்களங்களுக்கு ஆளணி இன்னமும் ஒதுக்கப்படவில்லை

## பணிகளில் இடர்பாடுகள் என சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப்.19

வடக்கு மாகாண புனர்வாழ்வுத் திணைக்களம் மற்றும் பெண்கள் விவகாரத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட வேண்டிய ஆளணி இன்னமும் ஒதுக்கப்படவில்லை. அதனால் இந்தத் திணைக்களங்களின் ஊடாக முன்னெடுக்க வேண்டிய பணிகளில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண புனர்வாழ்வுத் திணைக்களம் மற்றும் பெண்கள் விவகாரத் திணைக்களம் என்பன நீண்ட காலமாக உருவாக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்தத் திணைக்களங்களினூடாக முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக் களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

புனர்வாழ்வுத் திணைக்களம் மற்றும் பெண்கள் விவகாரத் திணைக்களத்துக்கு தலா 42 பேரைக் கொண்ட ஆளணி உருவாக்கத்துக்கு அனுமதி கோரப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அதற்கான அனுமதியை இன்னமும் வழங்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடந்த ஆண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில், அமைச்சர்கள் சந்தித்துக் கலந்துரையாடிய போது மேற்படி விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. இரண்டு திணைக்களங்களுக்குமான ஆளணி உருவாக்கத்துக்கு அனுமதி விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி இதன் போது உறுதி வழங்கியிருந்தார்.

ஆனாலும் ஜனாதிபதியின் உறுதி நடைமுறைக்கு வரவில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நிதி அமைச்சின் கீழேயே செயற்படுகின்றது. அதனடிப்படையில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கலந்துரையாடியிருந்தார். இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி வழங்கியிருந்த போதும், இது வரையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டு திணைக்களங்களும் உருவாக்கப்படுவதன் ஊடாகவே, போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் வேலைத் திட்டங்களை இலகுவாக முன்னெடுக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.(ற-ஜ-5)

2015 தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகளில் சிறப்பாக தோற்றிய மாணவர்களுக்கு

300 நிதி உதவிப் புலமைப்பரிசில்கள்
இன்றே விண்ணப்பியுங்கள்

ஸ்ரீலங்கா இன்ஷூவரன்ஸின் லைஃப் சுப பெத்தும் தேசிய புலமைப்பரிசில் செயற்திட்டத்திற்கு தேசத்தின் அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

தரம் 5 புலமைப்பரிசில்
எமக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 4 மாணவர்கள் வீதம் மொத்தமாக 100 மாணவர்களுக்கு சுப பெத்தும் நிதி உதவிப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மாணவர்களின் தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் ஸ்ரீலங்கா இன்ஷூவரன்ஸ் ஆயுள் காப்புறுதியின் உரிமையாளர் எனின் குறித்த புலமைப்பரிசில் தொடர்ந்தும் 5 வருடங்கள் வரை வழங்கப்படும்.

கா.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான புலமைப்பரிசில்கள்
எமக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 4 மாணவர்கள் வீதம் மொத்தமாக 100 மாணவர்களுக்கு சுப பெத்தும் நிதி உதவிப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மாணவர்களின் தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் ஸ்ரீலங்கா இன்ஷூவரன்ஸ் ஆயுள் காப்புறுதியின் உரிமையாளர் எனின் குறித்த புலமைப்பரிசில் தொடர்ந்தும் 2 வருடங்கள் வரை வழங்கப்படும்.

கா.பொ.த உயர் தரப் பரீட்சைக்கான புலமைப்பரிசில்கள்
கலை, வணிக, விஞ்ஞான மற்றும் கணித பிரிவுகளில் தேசிய மட்டத்தில் சிறப்பு பெறுபேறுகளைப் பெற்ற 100 மாணவர்களுக்கு சுப பெத்தும் நிதி உதவிப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
புலமைப்பரிசிலைப் பெறுபவர் அல்லது புலமைப்பரிசிலைப் பெறுபவரின் தாய்/தந்தை/பாதுகாவலர் ஸ்ரீலங்கா இன்ஷூவரன்ஸ் ஆயுள் காப்புறுதியின் உரிமையாளர் எனின் குறித்த புலமைப்பரிசில் தொடர்ந்தும் 3 வருடங்கள் வரை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 2016 மே 31ஆம் திகதி வரை மட்டுமே.

விண்ணப்பங்கள் அருகில் உள்ள ஸ்ரீலங்கா இன்ஷூவரன்ஸ் கிளையில் அல்லது www.srilankainsurance.com இணைய முகவரியில்

அல்லது SP இடைவெளி G5/OL அல்லது AL இடைவெளி உங்கள் மின்னஞ்சல் முகவரி என்பவற்றை டைப் செய்து 7353க்கு SMS செய்யுங்கள்.

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 160 பேருக்கு நேற்று நியமனக் கடிதங்கள்



யாழ்ப்பாணம், ஏப். 19
வடக்கு மாகாண சபையால் முகாமைத்துவ உதவியாளர்கள், சாரதிகள், அலுவலகப் பணியாளர்கள் ஆகிய பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட 160 பேருக்கு நேற்றுத்திங்கட்கிழமை நியமனக் கடிதங்கள் வழங் கப்பட்டுள்ளன.
யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இவர்களுடன் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) திருமதி ச.மோகநாதன் மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் பங்கு பற்றியிருந்தனர். (ற-ஐ-5)

# யாழில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த சட்ட நடவடிக்கை

## மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.19
நாடு முழுவதும் தடைசெய்யப்பட்டுள்ள 20 மைக்ரோனுக்கு குறைந்த பொலித்தீன் பாவனை தற்போதும் யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் செயற்படாத விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - இவ்வாறு யாழ். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் ரி.வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

> “சுகாதாரச் சீர்கேடு மற்றும் சுற்றாடல் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்ற நிலையில் நாடு முழுவதும் பாவனை செய்வதற்கு உகந்தது அல்ல என்று இந்த வருட ஆரம்பம் முதல் தடை செய்யப்பட்டுள்ள 20 மைக்ரோனுக்கும் குறைவான அளவுடைய பொலித்தீனைப் பாவிப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.”

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சுகாதாரச் சீர்கேடு மற்றும் சுற்றாடல் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்ற நிலையில் நாடு முழுவதும் பாவனை செய்வதற்கு உகந்தது அல்ல என்று இந்த வருட ஆரம்பம் முதல் தடை செய்யப்பட்டுள்ள 20 மைக்ரோனுக்கும் குறைவான அளவுடைய பொலித்தீனைப் பாவிப்போருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
இந்த வகையான பொலித்தீனை உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
நாட்டில் 20 மைக்ரோனுக்கும் குறைவான அளவுடைய பொலித்தீனுக்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்.மாவட்டத்தில் இன்னமும் பாவனையில் உள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
எனவே யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையினருடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது 20 மைக்ரோனுக்கு குறைவான பொலித்தீன் மீதான தடையை மீறிச் செயற்பட்டவர்கள் எவராக இருப்பினும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
எனவே அனைத்து வர்த்தகர்களும் தம்முடைய பொலித்தீன் பாவனை குறித்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (ற-ஐ-ரி5)

# கணினிப் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

மன்னார், ஏப்.19
“நண்பனின் தேவை” நற்பணி மன்றத்தால் மன்னார்-நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வஞ்சியன் குளம் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு கடந்த இரண்டரை மாதங்களாக நடத்தப்பட்ட கணினிப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 40 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
வஞ்சியன்குளம் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு,குறித்த நற்பணி மன்றத்தின் தலைவர் பவமொழிபவன் தலைமையில் இடம் பெற்றது.



குறித்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ஜீ.குணசீலன், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரதிநிதி ஜஸ்ரின், சிவன் அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் கணேஸ் வேலாயுதம், சமூக சேவையாளர் என்.கணேசலிங்கம், வஞ்சியன்குளம் பங்குத் தந்தை எஸ்.ஞானாதிக்கம், கிராம சேவையாளர் எம்.ஜெ.பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 40 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ற-ஐ-56)

# நிரந்தர நியமனம் பெறுவதற்காக ஓராண்டு காத்திருக்கும் நிலைமை

## சித்த மருத்துவர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.19
யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சித்தமருத்துவத்துறையில் பயின்று பட்டம் பெற்ற 46 சித்த மருத்துவர்கள் நிரந்தர நியமனம் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கு ஒரு வருடத்துக்கு மேல் காத்திருக்கவேண்டியுள்ளது என்று கவலை வெளியிட்டுள்ளனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஒரே கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு சித்த மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற 46 தமிழர்கள் உள்ளக பயிற்சியை நிறைவு செய்வதில் பின் தள்ளப்பட்டதால்,நிரந்தர நியமனம் பெற்று சித்த வைத்தியர்களாகக் கடமையேற்பதற்குக் காத்திருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.
சுகாதாரப் போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு இலங்கை ஆயுள்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்திலான மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. பட்டச் சான்றிதழ் 2015 மே முதலாம் திகதி வரை செல்லுபடியாகும் நிலை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ். பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப்பல்கலைக் கழகத்தில் சித்தமருத்துவத்துறை பயின்றவர்கள் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதால், தமிழர் 46 பேரின் சான்றிதழ் செல்லுபடியாகும் காலம் 2015 ஜூலை முதலாம் திகதியாகப் பின்தள்ளப்பட்டுள்ளது. ஆகையால் அவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
ஒரே காலப்பகுதியில் பல்கலைக்கழத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் முன் கூட்டியே நிரந்தர நியமனம் பெற்று வைத்தியர்களாகப் பணியாற்றும் அதே வேளையில், தமிழர்களாகிய நாங்கள் உள்ளகப் பயிற்சியைப் பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தால் ஒருவருடத்துக்கு மேற்பட்ட காலம் நிரந்தர நியமனம் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டி உள்ளது.
இது ஒருவகையில் இனரீதியான புறக்கணிப்பேயாகும்- என்று தெரிவித்தனர். (ற-ஐ-11)

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தால் “உதயன்” பத்திரிகை நிறுவன ஆதரவுடன் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை குருபூசைத் தின கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.
முதலாம் இடத்தை அருளானந்தன் விஜயராமும், இரண்டாம் இடத்தை மார்க்கண்டு செல்வதாஸும், மூன்றாம் இடத்தை சோழமாதேவி அருளானந்தனும் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று நிலையத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலைய இழுபறிக்குத் தீர்வைத் தருக

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.19
வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவதில் உள்ள இழுபறி நிலைக்கு முடிவு பெற்றுத்தர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம், வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தில், வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குரிய காணியைத் தெரிவு செய்வதில் இழுபறி நிலைமை இருந்து வருகின்றது.

வவுனியா நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தில் இதற்குரிய காணியை அடையாளப்படுத்தி வழங்குமாறு கிராமிய பொருளாதார அமைச்சு கோரியிருந்தது. தாண்டிக்குளத்திலுள்ள விவசாய விதை உற்பத்தி நிலையத்துக்குச் சொந்தமான காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்குவதற்கு வவுனியா மாவட்டத்தில் அரச அதிபர் தலைமையில், வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் முடிவு எட்டப்பட்டிருந்தது.

ஆனாலும், இந்தக் காணியை வழங்குவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சம்மதிக்கவில்லை. இதனால் இந்தத் திட்டம் வட மாகாணத்தை விடுத்து வேறு மாகாணத்துக்குச் செல்லும் அபாய நிலை காணப்படுகின்றது.

> வரவு – செலவுத் திட்டத்தில், வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குரிய காணியைத் தெரிவு செய்வதில் இழுபறி நிலைமை இருந்து வருகின்றது.

வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர், முதலமைச்சரைக் கடந்த 7 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினர். இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசனுடன் பேசியதாகவும், நகரிலிருந்து 2 கிலோ மீற்றரினுள் தான் காணி வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி, நகரிலிருந்து 9 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஓமந்தையில் அமைப்பதற்குச் சம்மதித்துள்ளார் என்றும் முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஆனால், வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு, இது தொடர்பில் எந்தக் கடிதமும் – அறிவுறுத்தலும் கிராமிய பொருளாதார அமைச்சால் வழங்கப்படவில்லை. மாறாக, இன்னும் ஒருவார கால அவகாசம் வழங்கி, அதற்குள் தாண்டிக்குளம் காணிக்குரிய அனுமதியைப் பெற்றுத் தருமாறும் இல்லாவிடின், வேறு மாகாணத்துக்கு இந்தத் திட்டம் மாற்றப்படும் என்ற அறிவுறுத்தலே, மாவட்டச் செயலகத்துக்கு கிராமிய பொருளாதார அமைச்சால் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன் போது வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் மேற்படி விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்துள்ளனர்.

தாண்டிக்குளம் காணியை இந்தத் திட்டத்துக்குப் பயன்படுத்துவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரை சம்மதிக்க வையுங்கள். அல்லது ஓமந்தையில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள, கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரி சனைச் சம்மதிக்க வையுங்கள் என்று கோரியுள்ளனர். இதுதொடர்பில் ஆராயப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பதிலளித்துள்ளார். (ற-ஜ-5)

## அலங்கார உற்சவமும் மணவாளக் கோலமும்

அச்சுவேலி, ஏப்.19
ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தத் திருவிழாவும், மணவாளக் கோல உற்சவமும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. உற்சவங்களை அடுத்து சங்காபிசேகமும் நடைபெறும்.

நாளை புதன்கிழமை 20 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

(ற-ஜ-11)

## சங்காபிசேகம்


யாழ்ப்பாணம், ஏப்.19
புற்றளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மணவாளக் கோல 1008 சங்காபிசேகம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(த-ரி)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் அந்தோனிப்பிள்ளை இருதயநாதன்

### (ஓய்வுநிலைப் பொறியியலாளர்)



என்றும் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எம் நினைவுடனேயே எம்மை விட்டுப் பிரிந்த அமரர் அந்தோனிப்பிள்ளை இருதயநாதன் அவர்களுக்கு இறுதி நேரத்தில் அவரைக் காப்பாற்றுவதற்கு அரும்பாடுபட்ட யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், தாதிமாரையும், அவரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறிய யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி மேதகு யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் இளைப்பாறிய ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், தென்னிந்திய திருச்சபை இளைப்பாறிய ஆயர் ஜெபநேசன் ஆண்டகை அவர்களுக்கும் மனமுவந்து நன்றி கூறுகின்றோம்.

மேலும் எங்கள் அன்புத் தெய்வத்துக்காகப் பிரார்த்தனை செய்த அருட் தந்தையர்கள், அருட்கன்னியர்கள், தென்இந்திய திருச்சபை அருட்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். எமக்கு நேரில் வந்து ஆறுதல் அளித்த வைத்திய நிபுணர்கள், வைத்திய கலாநிதிகள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எம்மைக் கௌரவித்து வருகை தந்து ஆறுதல் கூறிய கௌரவ கல்வி அமைச்சர் உயர்திரு.த.குருகுலராஜா அவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம். இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட கல்விப் பணிப்பாளர்கள்,ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் என்றும் எம் நன்றிக்குரியவர்கள் என்றும் எம் துயர்துடைக்கும் உற்றார், உறவினர், ஊர்மக்கள், நண்பர்கள் எம்மூர் இளைஞர்கள், 31 நாள்களும் எம் இல்லத்தில் வழிபாடு செய்தவர்கள் அனைவருக்கும் நன்றிகள். தொலைபேசி மின்னஞ்சல் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும் மலர் வளையம், பூமாலைகள் சமர்ப்பித்த பெரியோர்களுக்கும் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய குருமுதல்வர் அருட்திரு ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாருக்கும், சகல வழிகளிலும் ஆதரவு நல்கிய பங்குத்தந்தை அருட்திரு றோய் பேர்டினன்ட் அவர்களுக்கும் நன்றி.

எமது தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவு அஞ்சலி நாளை (20.04.2016)புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடை பெறவிருப்பதால் அங்கு வருகை தந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மண்ணில் 08.07.1943
விண்ணில் 20.03.2016

மானிப்பாய்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபை ஊடாக தனி நாட்டுக்கான ஆரம்பம்

## கெஹெலிய ரம்புக்வெல எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 19
தனிநாட்டுக்கான ஆரம்பத்தை அமைக்கக்கூடிய வகையிலான தீர்வுத் திட்டத்தை வட மாகாண சபை ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளது. மொழி ரீதியான பிராந்தியங்களை அமைப்பதானது தனிநாட்டை அமைப்பதற்கான ஆரம்பமாகும்.
- இவ்வாறு முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
முன்னைய அரசு சீனாவுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்தபோது எதிர்க்கட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி கடும் விமர்சனங்களை முன்வைத்தது. இலங்கை சீனாவின் கொலனியாக மாறியுள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியினர் கூறியதை நாங்கள் இன்னும் மறக்கவில்லை.
ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. சீனாவைக் கடுமையாக விமர்சித்த ஐக்கிய தேசிய கட்சி இன்று அதன் காலடியில் விழுந்துள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய வேண்டும். அதாவது உலக பொருளாதாரத்தில் சீனா அசைக்க முடியாத சக்தியாக உருவாகி வருகின்றது என்ற யதார்த்தமே அரசை சீனாவின் காலடியில் விழ வைத்தது. இதுதான் யதார்த்தமாகும்.
இதேவேளை தனிநாட்டுக்கான ஆரம்பத்தை அமைக்கக்கூடிய வகையிலான தீர்வுத்திட்டத்தை வட மாகாண சபை ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்துள்ளது. மொழி ரீதியான பிராந்தியங்களை அமைப்பதானது தனி நாட்டை அமைப்பதற் கான ஆரம்பமாகும்.
இங்கு நாம் ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும். அதாவது பலவீனமான அரசு பதவியில் அமரும்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் யதார்த்தத்துக்கு



அப்பாற்பட்டு தீர்வுத் திட்டங்களை கோருவது வழக்கமாகும். சுதந்திரத்திலிருந்தே தமிழ் மக்கள் தீர்வைக் கோரி நிற்கின்றனர்.
ஆனால் பலவீனமான அரசு பதவியில் அமருகின்ற போது தமது கோரிக்கையை வலுவாக்கி விடுவார்கள். இதுதான் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. அதனையே தற்போதும் கோருகின்றனர். இதேவேளை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் புதிய அரசியல் கட்சியை அமைப்பார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு இன்னும் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு உள்ளது என்பதே உண்மையாகும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ந-ஐ-5)

## கைக்குண்டுடன் இருவர் கைது

கொழும்பு, ஏப். 19
காலி - மீட்டியாகொட - கிரலகஹவெல பகுதியில் கைக்குண்டுகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்றில் கைக்குண்டுகளுடன் பயணித்துக் கொண்டிருந்த போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இவர்களிடம் மீட்கப்பட்ட கைக்குண்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-ஐ-5)

## பெறுமதி சேர் வரி அதிகரிப்பால் நுகர்வோர், வியாபாரிகள் பாதிப்பு

கொழும்பு, ஏப்.19
மே மாதம் இரண்டாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி (வற் வரி) 15 சதவீதம் வரையில் அதிகரிக்கப்படவுள்ளதால் நுகர்வோர் மாத்திரமன்றி, சிறு மற்றும் மத்திய தர வியாபாரிகளும் பாதிக்கப்படுவர் என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.
சுகாதாரச் சேவைகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் போன்று தகவல் தொடர்புப் பிரிவுகள் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.
இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது அமைப்பால் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக, அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வரி அதிகரிப்பால், தொலைபேசி, நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என்றும் அத்தியாவசியப் பொருள்கள், மருத்துவ மற்றும் தனியார் கல்வி மீதான வரிகளும் அதிகரிக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-ஐ-5)

## துப்பாக்கிகள் களவாடப்பட்டமை குறித்து 80 பேரிடம் விசாரணைகள்

கொழும்பு, ஏப்.19
மாத்தளை, லக்கல பொலிஸ் நிலையத்திலிருந்து காணாமற்போன துப்பாக்கிகள் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும், பொலிஸ் சேவையில் ஈடுபட்ட சுமார் 80 பேரிடம் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை காணாமற்போன துப்பாக்கிகள், பொலிஸ் நிலையத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள விகாரையொன்றிலிருந்து மீட்கப்பட்ட நிலையில், அவற்றில் பதிந்துள்ள கைவிரல் அடையாளங்களைப் பெறுவதற்காக, அந்தத் துப்பாக்கிகள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.
சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், லக்கல பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம், குற்றப் புல னாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
லக்கலை பொலிஸ் நிலையத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை அதிகாலை 6 துப்பாக்கிகள் களவாடப்பட்ட நிலையில், அவை அருகிலுள்ள விகாரையொன்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தன. இந்த விவகாரத்தில், அந்தப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய மூன்று பொலிஸார் பணிநீக்கம் செய்யப்பட்டிருந் தனர்.
மேற்படி துப்பாக்கிகளுக்கான ரவைகள் திருடப்படாமை, சாவிக் கொத்திலுள்ள 17 சாவிகளில், சரியான சாவி தெரிந்தெடுக்கப்பட்டு துப்பாக்கிகள் கொள்ளையிடப் பட்டமை மற்றும் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குள் இருந்த பாகுபாடு ஆகியவை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றன. (ந-ஐ-5)

## பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் சுகாதாரத்துறைக்கு பாதிப்புகள்

### விஜித ஹேரத் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 19
வற் வரி அதிகரிப்பால் சுகாதாரத்துறையும் பாதிப்பை எதிர்நோக்கும். நோயாளர்களுக்கான மருத்துவ ஆலோசனை சேவை கட்டணங்கள் உயர்வடையும். மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் என்பனவற்றின் விலைகளும் அதிகரிக்கப்படலாம். இதனால் சாதாரண அப்பாவி மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கும் அபாயம் உள்ளது. குறிப்பாக பற்பசையை எடுத்துக் கொண்டால் மக்களின் அத்தியாவசிய தேவையாகும். அதன் விலை கூட வரி அதிகரிப்பால் உயரும் அபாயம் உள்ளது. - இவ்வாறு மக்கள் விடுதலைமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்து பொருள்கள் சேவைகளினதும் விலைகளும் கட்டணங்களும் அதிகரிக்கப்படும் அபாயம் உள்ளது.
நல்லாட்சி என்று கூறிக்கொண்டு புதிய அரசும் மக்களைப் பொருளாதார சுமைக்குள் தள்ளி விடுகின்றது.
இவ்வாறு வரி வீதத்தை 15 சதவீதம் அதிகரிப்பதால் சாதாரண அப்பாவி மக்களே பாதிக்கப்படவுள்ளனர். குறிப்பாக தொலைபேசி கட்டணங்களிலும், சுகாதார துறையிலும் இந்த வரி அதிகரிப்பு தாக்கம் செலுத்தும். அப்படியாயின் வரி அதிகரிப்பின் காரணமாகதொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும். இதனால் சாதாரண பொது மக்களும் பெரிய பாதிப்புக்களை எதிர்நோக்கவுள்ளனர்.
நீண்டகால ரீதியில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். வரி அதிகரிப்பால் தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதன் காரணமாக அர சுக்கு குறுகிய கால ரீதியில் வருமானம் கிடைக்கலாம். ஆனால் நீண்ட கால ரீதியில் பாதிப்புக்களே ஏற்படும்.
இதேவேளை வரி அதிகரிப்பால் சுகாதாரத் துறையும் பாதிப்பை எதிர் நோக்கும். நோயாளர்களுக்கான மருத்துவ ஆலோசனைச் சேவைக் கட்டணங்கள் உயர்வடையும்.
அதுமட்டுமன்றி அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களினதும் விலைகள் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது. இதனால் மக்கள் பொருளாதார ரீதியில் பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்குவர். சில பொருள்கள் அத்தியாவசிய பொருள்களில் உள்ளடக்கப் படாவிட்டாலும் அவை மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களாகும். நல்லாட்சி அரசு இவ்வாறு மக்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டை மேற்கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.
ராஜபக்சக்களை விமர்சித்துக் கொண்டு இந்த அரசும் அதே செயற்பாட்டையே முன்னெடுக்கின்றது. இதனால் எமது நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். இவ்வாறு தொடர்ந்து பயணித்தால் தற்போது காணப்படுவதை விட பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (ந-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீடுகளுக்காக முண்டியடிக்கின்றனர் வடக்கு மாகாண மக்கள்

## அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.19

கோப்பாய் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள பொருத்து வீடுகளைப் போன்ற வீட்டுத் திட்டத்துக்காக வடக்கு மக்கள் முண்டியடிக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன்.

அந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இரு பொருத்து வீடுகளைப் பார்வையிட்ட பின்னர் இவ்வாறான வீடுகளைப் பெறுவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 32 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 8 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவ்வாறான வீடுகளைப் பொதுமக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதையே இது காட்டுகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

> பெரும் எண்ணிக்கையான மக்கள் பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாறான வீடுகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதையே இது காட்டுகின்றது என்று அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கூறியுள்ளார்.

ஆகையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக இந்த வீட்டுத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை- வடக்கில் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைக்கும் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சபையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோரியிருந்தன. உருக்கால் அமைக்கப்படும் இந்த வீடுகள் வடக்கு மாகாணத்தின் கால நிலைக்கு ஒவ்வாதவை என்றும், அதிக செலவு கொண்டவை என்றும் அவை சுட்டிக்காட்டியிருந்தன. (ற-ஐ-5)

# புலிகளின் இப்போதைய இலக்கு மகிந்தவும், கோத்தாவும் மட்டுமே

## கலாநிதி தயான் ஜயதிலக தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.19

மகிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவுமே புலிகளின் இலக்காக இருப்பர் என்று கூறியுள்ளார் முன்னாள் இராஜதந்திரியும், மகிந்த ராஜபக்சவின் ஆலோசகர்களில் ஒருவருமான கலாநிதி தயான் ஜயதிலக.

தற்கொலை அங்கி கண்டுபிடிப்புத் தொடர்பான சம்பவத்தை அனைத்துலக அனுபவங்கள், நடப்புகள் மூலம் நோக்கும் போது ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம். பிரபலமான பயங் கரவாத இயக்கமொன்று தோல்வி கண்ட பின்னர் முன்பிருந்த பெயரிலோ, வேறு பெயரிலோ தலைதூக்கலாம்.

இதற்குச் சிறந்த உதாரணம் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பாகும். பல ஆண்டுகளுக்கு முன்னர், இந்த இயக்கம் வட ஆபிரிக்காவில் அல்குவைதா அமைப்பாகச் செயற்பட்டது. இன்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பாக மாறியுள் ளது.- என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விடுதலைப் புலிகள் இயக்கம் தோல்வியைக் கண்டது. ஆனால் அதிலிருந்து தப்பிச் சென்ற பெரும்பாலானோர் மேற்கத்தேய நாடுகளிலும், தென்னிந்தியாவிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் புலிகளாகச் செயற்படாமல் இருக்கலாம். ஆனால் சர்வதேச புலிகளின் வலைப் பின்னலில் இணைந்திருந்தவர்களால் மீண்டும் புலிகளின் செயற்பாடுகள் தலைதூக்க இடமுள்ளது.

ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் புலிகள் தலைதூக்க முடியாமல் போனது. அந்தப் பிரதேசங்களில் படையினர் மற்றும் உளவுப் பிரிவினர் அதிகம் மக்களுடன் மக்களாக இருந்தனர். எனவே புலிகள் முயற்சித்தாலும் அவர்களால் தலைதூக்க முடியவில்லை.

ஆனால் புதிய அரசில் வடக்கு - கிழக்கின் பாதுகாப்பில் ஓட்டை ஏற்பட்டுள்ளது. குழப்பகரமான சூழ்நிலை தலைதூக்கியுள்ளது. இந்த ஓட்டை ஊடாகவே சாவகச்சேரி, மன்னார் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

ஒரு பிரிவினர் இதன்மூலம் புலிகள் பயங்கரவாதத் தாக்குதலொன்றுக்குத் தயாராவது புலப்படுகின்றது. அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. சர்வதேச ரீதியிலும் தமிழ்நாட்டில் எஞ்சியுள்ள புலிகள் அமைப்பின் பயங்கரவாதச் செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்கும். இதனை ஆழமாக ஆராய்ந்தால் புலிகளின் இலக்கு அரச தரப்பில் எவரையும் இலக்கு வைத்ததாக அமையாது. மேற்கத்தேய நாடுகளின் நண்பனான அரசின் மீது தாக்குதல் நடத்தினால் மேற்குலகத்தின் கடும் போக்குக்கு ஆளாகலாம் என்பதைப் புலிகள் அறிவார்கள். எனவே இதற்குப் புலிகள் தயாராக மாட்டார்கள்.

அதனால் புலிகளின் இலக்கு மகிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவாகவுமே இருக்கும். இதனை வெற்றிகரமாக நிறைவேற்றினால் புலம்பெயர் புலிகள் மகிழ்ச்சியடைவார்கள். - என்று கூறியுள்ளார்.(ற-ஐ-5)

# பொருத்து வீடுகளில் உரிய காற்றோட்ட வசதி இல்லை

## ஆய்வு செய்த நிபுணர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

வடக்கு - கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்ட பொருத்து வீடுகள் போதிய அத்திவாரங்களோ கூரை தொடர்பான ஆதாரங்களோ இல்லாது காணப்படுகின்றன என்றும், காற்றோட்ட வசதிகளும் இல்லாதுள்ளன என்றும் மொரட்டுவ பல்கலைக்கழக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீடுகள் தொடர்பில் தொழில்நுட்ப ரீதியான ஆய்வை மேற்கொண்ட பின்னர் அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் பிரியன் டயஸ், டொக்டர் நக்கிகா கல்வத்துற மற்றும் கட்டடக்கலைஞர் வருண டீ.சில்வா ஆகியோரால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சர்ச்சைக்குரிய வீடுகள் லக்ஸம்பேக்கை தளமாகக் கொண்ட ஆசிலோமிட்டல் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட வுள்ளன. இந்த வீடுகளை விஸ்தரிக்கவோ அல்லது திருத்தவோ முடியாது என நிபுணர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சிமெந்துக் கற்களால் கட்டப்படும் வீடுகளிலும் பார்க்க இதன் ஆயுள்காலம் குறைவாக இருக்கும். இந்த வீடுகளை நிர்மாணிப்பதால் உள்ளூர் பொருளாதாரத்துக்கு அனுகூலங்கள் கிடைக்காது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

# சிறுமியை வன்கொடுமைக்கு உள்ளாக்கிய சிப்பாய் கைது

கொழும்பு, ஏப்.19

14 வயதுச் சிறுமியை வன்கொடுமைக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் கலென்பிந்துனுவெல பிரதேசத்தில் கடந்த 14 ஆம் திகதி புத்தாண்டு தினத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதே பிரதேசத்தில் வசிக்கும் 14 வயதுச் சிறுமி ஒருவருடன் முகநூல் ஊடாகக் காதல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் புத்தாண்டு தினத்தில் சிறுமியைச் சந்திப்பதற்காக கலென்பிந்துனுவெல சென்றுள்ளார்.

அதன் பின்னர் சிறுமியைக் காட்டுக்குள் இழுத்துச் சென்று வன்கொடுமைக்கு உட்படுத்தி விட்டு இளைஞர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோரின் உதவியுடன் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் அநுராதபுரம் மாவட்டத்தின் மகா இலுபள்ளம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், 28 வய தான அவர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்து தலைமறைவாக உள்ளவர் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்ட இளைஞர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற-ஐ-5)

# மகிந்தவோடு பிரதமர் பேசுவதில் தப்பில்லை

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

மகிந்த ராஜபக்சவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் தனிப்பட்ட குரோதம் எதுவும் கிடையாது. மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியின் எதிரியும் இல்லை. நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் அவருடன் பேசுவதில் எந்தப் பிழையும் இல்லை. - இவ்வாறு அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கண்டிக்குச் சென்று அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்திருந்தார். அதன் போது பிரதமருடன் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்லவும் சென்றிருந்தார். சந்திப்பு முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே லக்ஸ்மன் கிரியல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த அரசுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஊடகங்களுக்கு செய்தி இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சில ஊடகவியலாளர்கள் என்னைத் தொடர்பு கொண்டு ஏதாவது சொல்லுங்கள் என்று கேட்கின்றனர். தற்போது ஊடகவியலாளர்களுக்குக் கேள்வி கிடையாது. வெள்ளை வான்களில் கடத்தப்படுவதில்லை. தாக்கப்படுவதில்லை. ஊடக சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மரத்தில் கட்டப்படுவதில்லை, கடத்தல்கள் கிடையாது, பிரதம நீதியரசர் விரட்டப்பட்டார், சரத் பொன்சேகா இழுத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதில்லை. அது நல்லது இல்லையா? அரசு அபிவிருத்திப் பணிகளின் நிமித்தம் பல நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது.- என்று கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க உள்ளமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, செய்திகளைப் புனைய வேண்டாம் என்று குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் பிரதமர் சந்திப்பு நடத்தியமை குறித்து கேள்வி எழுப்பிய போது மகிந்தவுக்கும், ரணிலுக்கும் இடையில் தனிப்பட்ட குரோதம் கிடையாது. மகிந்த ஐக்கிய தேசியக் கட்சியின் எதிரியல்ல. நாட்டின் பிரஜை என்ற ரீதியில் அவருடன் பேச்சு நடத்துவதில் எவ்வித பிழையும் கிடையாது - என்று அவர் பதிலளித்துள்ளார். (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும்

கனடாவின் எதிர்க்கட்சித் தலைவி, ரோணா அம்புரூஸ் அம்மையாருக்கும், கனேடிய தமிழர் தேசிய அவைக்கும் இடையில் நடைபெற்ற உச்சமட்டச் சந்திப்பின்போது--

ஈழத் தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிரான இன அழிப்பு அனைத்துக்கும், அனைத்துலக விசாரணை அவசியம் என்று, காட்டமான கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இரு தரப்பினரதும் சந்திப்பின் பின்னர், எதிர்க்கட்சித் தலைவி தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்களை, தமது உள்ளார்ந்த நிலை நின்று தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முழு அளவில் முன்னெடுக்கப்படுவதற்கு முன்னரே, இலங்கை அரசும் அதன் ஆயுதப் படைகளும்--

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிச் செயற்பட்டமை இரகசியம் அல்ல. விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டனர் என்று கூறப்பட்ட பின்னரும்--

இடம்பெற்ற, இடம்பெறுகின்ற சம்பவங்கள் குறித்து, இலங்கை அரசு, வெறுமனே தனது மறுப்புக்களை மட்டுமே, வெளியிட்டு வருகிறது!

தனது கரங்கள் கறைபடியாதவை என்று நிரூபிக்க வேண்டிய முழுப் பொறுப்பும், கொழும்பு அரசுக்கே முழுக்க முழுக்க உண்டு. ஆனால் அந்தப் பணியை கையில் எடுப்பதற்கு அரசு மிகவும் பின்னடிக்கிறது! ஒளித்துப் பிடித்து விளையாடும் தந்திரத்தையே மேலெழுப்புகிறது!!

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கை தொடங்குவதற்கு முன்னரும்--

அரசால் (அரச படைகளால்), விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர் என்று தெரிவித்த பின்னர், இடம்பெற்ற சம்பவங்கள், இடம்பெறும் சம்பவங்கள் குறித்து வெறும் மறுப்புக்களையே முன்னிறுத்தி வந்தன; வருகின்றன!

இலங்கை அரசின் கரங்கள், உண்மையிலேயே கறை படியாதவை எனின், அதனை உறுதிப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பும், தட்டிக் கழிக்க முடியாத கடமையும் அரசுக்கே உண்டு--என்று கனேடிய எதிர்க்கட்சித் தலைவி, அறுத்து உறுத்துக் கூறியுள்ளமை, கருத்தில் கொள்ளப்பட்டாக வேண்டும்.

அத்தோடு--

இப்போதைய மைத்திரி-ரணில் அரசு, வெறும் கண்துடைப்புக்காகவே ஒரு சில முன்னேற்றங்களைக் காண்பிக்க முயற்சிக்கிறது--

தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள், தொடர்ந்து வருவதாகவும் கனேடிய எதிர்க்கட்சி குற்றம் சாட்டி உள்ளது.

மொத்தத்தில்--

இலங்கை அரசு, தமிழர்களைத் தாம் இனக்கொலை செய்யவில்லை என்று வாதம் செய்வதை விடுத்து--

பக்கச்சார்பற்ற பூரண விசாரணையை நடத்தி, அதனை உறுதிப்படுத்தி, உலகுக்குத் தெரிவிப்பதற்கு பின்னடிப்பது ஏன்?

அவ்வாறு செய்யின், நல்லாட்சிக்கு வலுச்சேர்க்கும். அல்லவா...?

# தீராத நோயாகுமா நாட்டின் தலைவிதி?

சேரலாதன்

கடந்தகால ஆட்சியில் இடம்பெற்ற சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் தொடர்பான செய்திகளைப் படிக்கும்போதும், பார்க்கும்போதும் இந்த நாடு உருப்படுமா என்ற வினாதான் மனதில் எழுகின்றது.



### மகிந்த பெற்ற கடன்கள்

மகிந்த அரசில் பொருளாதார அபிவிருத்தி அமைவிவிசராக இருந்தவர் அவரது உடன் பிறந்த தம்பியான பசில் ராஜபக்ச. நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் அண்ணன் மகிந்தவும், தம்பியான பசிலும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். போர் இடம்பெற்றபோது புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பல நாடுகள் பல்வேறு வகையிலும் உதவிகளை அள்ளி வழங்கின. இவற்றுக்கெல்லாம் சரியான கணக்குகள் பேணப்பட்டனவா என்பது தெரியவில்லை. இதேவேளை– போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதிலும் பெருமளவு வெளிநாட்டுக் கடன்களை வாங்கிக் குவித்ததன் மூலமாக மகிந்த இந்த நாட்டு மக்களை வெளிநாடுகளுக்கு அடிமைகளாக்கியுள்ளார் என்ற குற்றவிவிசாட்டுக்கள் எழும் வகையில் கடன்கள் நாட்டு மக்களை அவிவிசுறுத்தி நிற்கின்றன. இந்தக் கடன்களையும், அவற்றுக்கான வட்டியையும் திருப்பிவிவிசெலுத்தக்கூடியவல்லமை நாட்டின் பொருளா தாரத்துக்கு இல்லையென்று தான் கூறமுடியும். இதன் காரணமாகப் பொருளாதாரவிவி சுமைகள் நாட்டு மக்களின் தலைகளை நீண்ட காலத்துக்கு நசுக்கிக் கொண்டே இருக்கப் போகின்றன. மக்களின் அவலநிலை இவ்வாறிருக்க அரசியல்வாதிகளின் சுகபோக வாழ்க்கை தொடர்ந்த வண்ணம் உள்ளது. மகிந்தவும் அவரைவிவி சேர்ந்தவர்களும் நாட்டின்பொருளாதாரத்தைவிவி சூறையாடியதுடன் நின்றுவிடாது தமது இஷ்டம் போன்று நடந்து கொள்ளவும் தவறவில்லை.

### சமையல் பணிகளில் படை வீரர்கள்

முன்னாள் அமைவிவிசர் பசில் ராஜபக்சவின் மகன் அமெரிக்காவின் கலிபோர்னியாப் பிரதேசத்தில் வசித்து வருகின்றார். இவரது வீட்டில் சமையல் பணிகளை மேற்கொள்வதற்காக இரண்டு கடற்படை வீரர்கள் இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். அதுவும் இராஜதந்திர கடவுவிவிசீட்டு மூலமாகவே இவர்கள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இதுவொரு மிகப்பெரிய மோசடியாகும். பசில் ராஜபக்ச நிதி மோசடிக் குற்றவிவிசாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுத் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இந்தப்பாரதூரமான குற்றவிவிசாட்டு எழுந்துள்ளது. இதற்கான முழுப் பொறுப்பையும் பசில் ராஜபக்சவே ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இந்த விடயத்தில் பசில் ராஜபக்சவின் மனைவியும் சம்பந்தப்பட்டிருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

> நல்லாட்சி எனக் கூறிக்கொள்ளும் மைத்திரி–ரணில் இணைந்த அரசு இந்த விடயத்திலும் வழக்கம் போன்று மெத்தனமாக இருந்து விடுமா?

அமெரிக்காவில் சமையல் வேலைகளை மேற்கொள்வதற்கு கடற்படை வீரர்களை அனுப்பிவைத்தமை நாட்டுக்குத் தலைகுனிவையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மகிந்த தரப்பினரின் மோசடிகளையும், சட்ட விரோதவிவி செயற்பாடு களையும் அம்பலப்படுத்தியுள் ளது.

### மைத்திரி அரசின் மெத்தனப்போக்கு

நல்லாட்சி எனக் கூறிக்கொள்ளும்மைத்திரி-ரணில்இணைந்த அரசு இந்த விடயத்திலும் வழக்கம் போன்று மெத்தனமாக இருந்து விடுமா? என்ற கேள்வி மக்களிடம் தற்போது எழுந்துள்ளது. ஏற்கனவே பல விடயங்களில் இந்த அரசு பலவீனமான செயற்பாடுகளைக் காட்டியதால் அரசின் மீதான நம்பிக்கை மக்களிடமிருந்து மெல்ல மெல்ல நழுவிவிவிசென்றுகொண்டிருக்கின்றது. இது ஒரு பலவீனமான அரசு என்ற எண்ணமும் வலுப்பெறுவதைக் காணமுடிகின்றது. எந்தவொரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அரசு உறுதியான கொள்கையைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. அதிலும் மகிந்த தரப்பினரின் விடயங்களை விட்டுக் கொடுத்து நடக்கின்ற செயற்பாடுகளிலேயே அது ஈடுபடுவதைக் காண முடிகின்றது. இது அரசின் நிலைத்த தன்மைக்குப் பெரிய சவாலாக அமைந்து விடப்போகின்றது. மேலும்நாட்டின்வளர்விவிசிக்கும் பாதகமான சூழ்நிலை உருவாகிவிடும். குற்றம் புரிந்தவர்கள் எவராக இருந்தாலும் தராதரம் பார்க்காமல் தண்டிக்கப்பட வேண்டும்.

கட்சி, தராதரம் என்பன பார்க்கப்பட்டால் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவே முடியாது. கடந்த கால அரசில் இடம்பெற்றகுற்றவிவிசெயல்கள் ஒரு வலைப்பின்னல் போன்றே காணப்படுகின்றன. இதனால் இவற்றைக் கண்டுபிடிப்பதும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதும் சிரமமான ஒன்றல்ல. இதற்குத் துணிவும், முயற்சியும்தான் தேவையாகவுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைத்துத்தான் மக்கள் தமது வாக்குகளை வழங்கி அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர். இந்த வாக்குகள் மகிந்தவுக்கு எதிராகப் போடப்பட்டவை என்பதும் கவனத்துக்குரியது. இதை அரசு புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.பா.மகாலிங்கசிவம்

# மரத்தை வளர்த்தும் பழம் உண்ண முடியாத ஆங் சாங் சூகி

மியன்மாரில் (முந்தைய பர்மா) இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 77 வீதமான வாக்குகளைப் பெற்று தேசிய ஜனநாயகக்கட்சி அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றபோதிலும், அதன் தலைவியான ஆங் சாங் சூகியினால் ஜனாதிபதியாக வர முடியாமற் போயுள்ளது. மியன்மாரில் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்த இராணுவம் ஆங் சாங் சூகியைக் குறிவைத்து முன்னரே உருவாக்கிய வெளிநாட்டவரைத் திருமணம் செய்யும் அரசியல் தலைவர்கள் நாட்டின் உயர் பதவிகளை வகிக்க முடியாது என்ற சட்டமே சூகியின் கணவர் பிரிட்டிஷ் பிரசையாக இருக்கும் காரணத்தால் சூகி ஜனாதிபதியாவதைத் தடுத்து நிறுத்தியுள்ளது.
தற்போது 4 கோடி 87 லட்சம் சனத்தொகையைக் கொண்ட மியன்மார் நாடு பௌத்த சமயத்தை பிரதான மதமாகக் கொண்டது. 1885 இல் இங்கிலாந்து ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டு 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றது. அதன் பின் ஜனநாயக ஆட்சி முறை அங்கு நிலவியது. 1962 இல் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி 2011 வரை ஏறத்தாழ 50 ஆண்டுகள் கொடூரமான இராணுவ ஆட்சியை அங்கு உருவாக்கி நடத்தி வந்தது.
மியன்மாரில் மக்களாட்சிக்காகப் போராடிக் கொண்டிருந்த ஆங்சாங் இன் மகளாக 1945 இல் சூகி பிறந்தார். அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஆங்சாங் ஈடுபடுவதாகக் கருதப்பட்டுச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அவரது மரணத்தின் அதிர்ச்சியும், அச்சமும் துரத்த சூகியின் குடும்பம் இந்தியா, இங்கிலாந்து முதலிய பல இடங்களுக்கும் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டது. முதலில் இந்தியாவில் தங்கியிருந்து கல்வியைப் பெற்றுக் கொண்ட சூகி மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்றார்.
இங்கிலாந்திலே தன்னுடன் கல்வி கற்ற மைக்கேல் ஆரிஸ் என்பவரைத் திருமணம் செய்தார். இவர் இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர் என்ற காரணத்தைக் காட்டியே தற்போது வெளிநாட்டுப் பிரசையைத் திருமணம் செய்த சூகியை நாட்டின் ஜனாதிபதியாக முடியாமல் இராணுவத்தினர் உருவாக்கிய சட்டம் தடுத்துள்ளது
சூகி–மைக்கேல் ஆரிஸ் தம்பதினருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்த நிலையில், உடல் நலிவுற்ற தாய் கிங்கியைப் பார்ப்பதற்காகத் தனது கணவரையும் பிள்ளைகளையும் லண்டனிலேயே விட்டுவிட்டு சூகி மியன்மாருக்கு வந்தார். அப்போது தாய் நாட்டு மக்களின் துயர் நிறைந்த வாழ்க்கை சூகிக்குள் கொதிப்பை ஏற்படுத்தியது. இரா ணுவ ஆட்சியின் கீழ் மக்கள் வறுமை சூழ்ந்த நிலையில் அச்சத்துடன் கண்ணீர் வடித்துக் கொண்டிருந் தனர். விடுதலை கேட்டுப் போராடிய ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். மக்கள் அரசியல் பற்றிப் பேசவே அச்சப்பட்டுக் கொண்டிருந்தனர்.
இந்த நிலையில் லண்டன் நகரின் சுகபோக வாழ்க்கையையும் கணவன் பிள்ளைகளையும் துறந்து தாய் நாட்டு மக்களின் சுதந்திரத்துக் காக தந்தையான ஆங் சாங்கின் வழியில் போராட சூகி முடிவெடுத்தார். தேசிய ஜனநாயகக் கட்சியை ஆரம்பித்தார். தமக்கான மீட்பர் ஒருவர் வந்து விட்டதை உணர்ந்து கொண்ட மக்கள் சூகியின் தலைமையின் கீழ் அணி திரண்டனர்.




சூகிக்கு நாட்டில் பெருகிவந்த ஆதரவைக் கண்டு அஞ்சிய இராணுவ அரசு அவரை வீட்டுக்காவலில் சிறை வைத்தது. மின்சாரவசதிகள் அற்ற சேதமடைந்த வீடு. இரவில் பெரும்பாலும் மெழுகுவர்த்தி மூலம் தான் ஒளியைப் பெற வேண்டிய நிலை. தொலைபேசி வசதிகளும் தடை செய்யப்பட்டன. துணைக்கு வயோதிபப் பெண்கள் இருவர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். வேறு எவரையும் சந்திக்க முடியாது. எனினும் சூகி தளரவில்லை. கடிதங்கள் மூலம் தனது கருத்துக்களை வெளிப்படுத்தி மக்களைத் தைரியப் படுத்தி இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்ட உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார். 20 ஆண்டு கள் வீட்டுக் காவலில் தனிமைச் சிறையில் வைத்த போதும், சூகியின் போராட்ட உணர்வையும் மனத் தைரியத்தையும் இராணுவ ஆட்சியால் அசைக்க முடியவில்லை.
இறுதியாக 2015 நவம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 77 வீதமான வாக்குகளைப் பெற்று ஆங்சாங் சூகியின் கட்சி வெற்றி பெற்றது. மேற்சபையில் 135 இடங்களையும் கீழ்ச்சபையில் 255 இடங்களையும் இவர் பெற்றுக் கொண்டார். இராணுவக் கற்பாதைகளிடையே ஜனநாயகம் என்னும் மரத்தை நட்டு வளர்த்த சூகியால் கணவன் வெளிநாட்டவர் என்பதால் ஜனாதிபதிப் பதவி என்னும் பழத்தைப் பறிக்க முடியாமற் போயுள்ளது.
எனினும் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அராஜக இராணுவ ஆட்சிக்குத் தனது துணிச்சலான கொலை அச்சுறுத்தல்களுக்கும், கொடிய சிறைவாழ்க்கைக்கும் அஞ்சாத சாத்வீக வழிப் போராட்டங் கள் மூலம் முற்றுப் புள்ளி வைத்த வீராங்கனையாக அவர் நாட்டு மக்கள் முன் உயர்ந்து நிற்கின்றார்.

## ஐயனார் வீதியில் புனரமைப்புப் பணிகள்

சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்கு முன்னால் உள்ள வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.
நீண்ட காலமாகவே இந்த வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டதால் இதனைப் பயன்படுத்தி வந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். மழை காலங்களில் வீதியின் பள்ளமான பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்கள் பெரியளவில் சிரமங்களை எதிர்கொள்வது வழக்கமாகவே இருந்தது.
இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாகப் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் எதுவுமே இடம்பெறவில்லை. தற்போதுதான் இந்த வீதிக்கு விடிவுகாலம் ஏற்பட்டுள்ளது. முக்கியமான வீதிகளின் புனரமைப்புப் பணிகளுக்கு ஒப்பான வகையில் இந்த வீதியின் பணிகளும் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. வேலைகள் நடைபெறுகின்ற வேகத்தைப்பார்க்கும்போது, விரைவில்புன்ரைமைப்புப்பணிகள்முடிவடைந்துவிடுமென எண்ணத் தோன்றுகின்றது. ஐயனாரை நாடிவருகின்ற பக்தர்கள் சிரமங்களின்றி இந்த வீதியால் பயணிக்கும் அந்த நாளை நினைக்க மகிழ்ச்சியாக உள்ளது.

**ம.கிருபாகரன், சுன்னாகம்**

## மழைகாலத்தில் நீரைத் தேக்குவது குடா நாட்டின் அவசரப் பணி

தற்போது குடாநாட்டில் காணப்படும் கடுமையான வெப்பமும், வறட்சியும் மழை காலத்தில் நீரைச் சேகரித்து வைப்பதன் அவசியத்தை உணர்த்தி விட்டன.
வரலாறு காணாத வெப்பத்தால் குடா நாட்டு மக்கள் சுருண்டு போய் விட்டனர். நீர் நிலைகள் வற்றிய நிலையில் காணப்படுவதால் நீருக்ககுப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான ஏதுநிலைகள் அதிகளவில் காணப்படுகின்றன. ஏற்கனவே குடா நாட்டின் நிலத்தடி நீர் மாசடைந்து காணப்படும் நிலையில் வெப்பமும், வறட்சியும் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யப் போகின்றன. இந்த வேளையில் மழைபெய்யும்போது சேமிக்கப்படாத நிலையில் பெருமளவு மழைநீர் பாய்ந்து சென்று வீணாகக் கடலில் கலப்பதை எண்ணும்போது வேதனைதான் ஏற்படுகின்றது. மழைநீரைத் தேக்கி வைத்திருந்தால் நீர் ஆதாரம் ஓரளவாவது பாதுகாக்கப்பட்டிருக்கும். வறட்சி நிலையும் குறைந்திருக்கும். ஆகவே சிறு அணைகளைக் கட்டி நீரைச் சேமித்து வைப்பதனால் கோடை காலத்தில் அது பேருதவியாக இருக்கும். அத்துடன் ஊர்கள் தோறும் சிறிய குளங்களை அமைத்து நீரைத் தேக்கி வைப்பதாலும் அதிக பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**தி.சந்திரபாலன், நவாலி**

## பயணிகளை இனியாவது மனிதர்களாக மதித்து நடப்பார்களா?

நேற்றுமுன்தினம் காலை வேளையில் காங்கேசன்துறை வீதியில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினி பஸ் ஒன்றில் ஏறி யாழ். நகருக்குச் சென்று கொண்டிருந்தேன். மினிபஸ்ஸில் ஏக சுவட்டம். மூச்சு விடுவதற்குக் கூட பயணிகளால் முடியாத அளவுக்கு சனநெரிசல் காணப்பட்டது.
அந்த பஸ்சின் சாரதியும் கீழே இறங்கி பயணிகளை அடைத்து விடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். நடத்துநரும் தமது பங்குக்கு பயணிகள் நெருக்கமாக நிற்கும் வண்ணம் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். பஸ்சினுள் இருந்த பயணிகள் மோசமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர். மினிபஸ்காரர்களுக்கு வருமானம் கிடைக்க வேண்டுமென் பதில் மாறுபட்ட கருத்து இல்லை. அவர்களுக்கும் ஏகப்பட்ட செலவுகள் உள்ளன. ஆனால் பயணிகளை வதைத் துப் பணம் சம்பாதிப்பதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஓரளவாவது மனச்சாட்சியுடன் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். மனிதர்களை மிருகங்களை விடக் கேவலமாக நடத்துவது எந்த வகையிலும் தர்மமான காரியமல்ல.
வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்ற மிருகங்களின் நிலை தொடர்பாக இரக்கம் காட்டுகின்ற பொலிசார் மினிபஸ்களில் அவஸ்தைப்படுகின்ற பயணிகள் தொடர்பாகச் சிறிதும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இனிவரும் நாள்களிலாவது பொலிஸார் இதில் கவனம் செலுத்துவதுடன் பயணிகளின் அவலங்களுக்கு முற்றுப் புள்ளியும் இட வேண்டும். இதேவேளை–மினிபஸ்களின் சாரதிகளும். நடத்துநர்களும் பயணிகளை மனிதர்களாக மதித்து நடந்தால் அதுவே போதுமானது.

**பா.சுபாசினி, தாவடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியிலுள்ள குருத்வாரா கோவிலில் குண்டு வெடிப்பு

## மதகுரு உட்பட மூவர் காயம்

பேர்ளின், ஏப்.19

ஜேர்மனியின் கிழக்கு நகரான எஸ்செனில் சீக்கிய குருத்வாரா ஒன்று உள்ளது. இந்த குருத்வாராவில் உள்ளூர் நேரப்படி கடந்த சனிக்கிழமை இரவு சுமார் 7 மணியளவில் திருமண நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. இந்த வைபவத்தில் 200 பேருக்கு மேல் கலந்து கொண்டனர். திருமணத்தில் பங்கேற்றவர்களில் ஒரு பிரிவினர் குருத்வாராவுக்கு உள்ளேயும், மற்றொரு பிரிவினர் குருத்வாராவுக்கு அருகில் இருந்த நடன அரங்கிலும் இருந்தனர். அப்போது குருத்வாராவின் நுழைவாயில் அருகே திடீரென வெடிகுண்டு ஒன்று பயங்கரச் சத்தத்துடன் வெடித்தது. இதில் அந்த நடன அரங்கின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து விழுந்தன. மேலும் அந்த அறையும் முற்றிலும் சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தில் 3 பேர் பலத்த காயமடைந்தனர். இதில் சீக்கிய குரு ஒருவரும் அடங்குவார். மற்றைய இருவரும் திருமணத்துக்கு வந்த விருந்தினர்கள் எனக் கூறப்படுகிறது.

குண்டுவெடிப்பால் அப்பகுதியில் பெரும் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. சம்பவம் குறித்து தகவல் அறிந்து அங்கு வந்த பொலிஸார் மற்றும் அதிகாரிகள் அப்பகுதியில் ஆதாரங்களைச் சேகரித்தனர்.

இதற்கிடையே குண்டுவெடிப்பு நிகழ்ந்தவுடன் முகமூடி அணிந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்து வாகனம் ஒன்றில் ஏறித் தப்பிவிட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

உடனே பொலிஸார் தேடுதலைத் தீவிரப்படுத்தினர். அதன் பயனாக சம்பவ இடத்தில் நின்றிருந்த அந்த வாகனத்தைப் பொலிஸார் பின்னர் கண்டுபிடித்துப் பறிமுதல் செய்தனர். இத்துடன் அதில் இருந்த 3 பேரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். எஸ்சென் நகர குருத்வாராவில் நிகழ்ந்த குண்டு வெடிப்பால் கவலை அடைந்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு வெளிவிவகார துறை அமைச்சு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது. (த-ரி4)



சவூதி அரேபியாவில் ரியாத்தில் உள்ள இரசாயன ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உயிரி
இயங்கிக் கொண்டிருக்கும்போது தீவிபத்து ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது. இரசாயனப் புகை என்ப
காயமடைந்தவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

# சிரியாவில் தாக்குதல் 10 சிறுவர்கள் சாவு

## ஐ.நா. கடும் கண்டனம்

டமஸ்கஸ், ஏப்.19

சிரியாவில் டமஸ்கசில் அமைந்துள்ள பாலஸ்தீன முகாமின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் 10 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.நா. கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த வன்முறைத் தாக்குதல், சிரியாவில் நிலவும் போர் நிறுத்த உடன்படிக்கையைச் சிதைக்கக் கூடியது எனத் தெரிவிக்கப்பட்டது. இத்துடன் சமாதானப் பேச்சுக்களையும் பாதித்துள்ளது.

அலப்போ நகரில் போராளிகளின் ஷெல் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர் என அவதானிப்புக் குழுவினர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். அத்துடன் சிரியாவில் சில நாள்களாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலைமை தொடருமாயின் அமைதிக்கான சூழல் குலைவதுடன், மீண்டும் போர் மூழும் அபாயம் ஏற்பட்டுள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன அகதிகள் முகாமில் 10 ஆயிரம் பொது மக்கள் வசிக்கின்றனர். மனிதாபிமான நிலையில் நம்பிக்கையற்ற நிலை தென்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. யார்மக் பகுதியில் அமைந்துள்ள பாலஸ்தீன அகதிகள் முகாமில், உணவு, குடிதண்ணீர் ஏதுமின்றி மக்கள் ஒருவாரமாகத் தவிக்கின்றனர். இதனால் உயிரிழப்புகளும், உயிராபத்துக்களும் அதிகரித்துள்ளன என ஐ.நா. தெரிவித்துள்ளது. (த-ரி4)

# தீவிர...
# பெல்ஜ...

பிரஸ்சல்ஸ், ஏப்.
பெல்ஜியத் தலை
எதிராக அணி தி
கடந்த மாதம் பி
பெற்ற தாக்குதல
வலம் ஒழுங்குப
இந்த ஊர்வலத்
பேர் பங்கு கொ
தெரிவித்தனர். அ
15 ஆயிரம் பேர்
ட்டமிட்டிருந்தனர்
கொண்டவர்கள்,
எனும் கோஷங்க
கைகளும் தாங்
பிரஸ்சல்ஸ் குண்
களுக்கு இதன்
பட்டது. அத்துட
களுக்கு சொந்த
ரவாதத்திற்கு எ
வலத்தில் பங்கு
பினர்.

## ஈக்குவடோர் நில நடுக்கத்தால் 272 பேர் சாவு, 2,527 பேர் காயம்

குவீட்டோ, ஏப்.19

ஈக்குவடோரில் ஏற்பட்ட நிலஅதிர்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 272 ஆக உயர்வடைந்துள்ளது. 2 ஆயிரத்து 527 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகார பூர்வத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

7.8 ரிச்டர் அளவில் பூமி அதிர்வு பதிவானதால் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நில அதிர்வு தொடர்பில் ஜனாதிபதி ரபேல் குரே தெரிவிக்கையில், மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்புள்ளது. மனாபி மாநிலத்தில் 200 பேர் உயிரிழந்ததுடன், அதிக சேதமும் ஏற்பட்டுள்ளது. மக்கள் தமது அன்புக்குரியவர்களின் உடல்களை மீட்பதைப் பார்க்கையில் மிகவும் வேதனையைத் தருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த நில அதிர்வில் 6 கடற்கரை மாநிலங்கள் பாதிக்கப்பட்டன. மக்கள் பலர் வீதிகளில் உறங்கினர். மீட்புப் பணியில் 10 ஆயிரம் இராணுவத்தினரும், 4 ஆயிரத்து 600 பொலிஸாரும் கடமையாற்றினர். (த-ரி4)



# சர்ச்சையை ஏ...
# ரஷ்யாவின் ஹே...

மொஸ்கோ, ஏப்.19
ரஷ்யாவில் சைபேரியன் நகரில் ச
ஒன்று திறக்கப்பட்டுள்ளது. வெளிய
பார்க்கும் போது சாதாரணமாகத் தெ
வுடன் ரஷ்ய ஜனாதிபதியின் வீட்டி
கொடுக்கும். காரணம் அவரது பட
படுத்தும் விடயங்கள் அங்கு உள்
இந்த ஹோட்டல் புடினின் ரசிகர்க
படுத்தியுள்ளது. புடினின் உருவ
காணப்படும் மெழுகுச்சிலை அங்
கவர்ந்துள்ளது. பலர் இந்தச் சிலை
வது குறிப்பிடத்தக்கது.
அதேவேளை ஒபாமாவையும், ஏ
தலைவர்களையும் கேவலப்படுத்து
உள்ளடக்கியுள்ளது.
கழிப்பறையில் நுழைந்தவுடன் ே
மேர்கலின் படம் மாட்டப்பட்டுள்ளது.
பதித்த கழிப்பறைக் காகிதமும், பி
படுத்தும் படமும் ஹோட்டல் கழிப்
றன. அத்துடன், அமெரிக்க கொடியின்
கால் துடைப் பம் பயன்படுத்தப்படுகி
பத்தில் திறக்கப்பட்டுச் சர்ச்சையை ஏற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிரிழந்ததுடன், 11 பேர் காயமடைந்தனர். இரசாயன ஆலை
என்பதால் அப்பகுதி கரும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.
(த-ரி4)

# மாப்பிள்ளை வீட்டில் கழிப்பறை இல்லை திருமணத்தை நிறுத்தினார் மணப் பெண்

புதுடில்லி, ஏப்.19
கழிப்பறை வசதி இல்லாதால் பெண் ஒருவர் திருமணத்தை நிறுத்தியுள்ளார். இந்தியாவில் லக்னோவைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்தத் துணிகர முடிவை எடுத்துள்ளார்.

25 வயதான பெண், பாடசாலைப் படிப்பை முடித்திருந்தார். கடந்த சனிக்கிழமை அவருக்குத் திருமணம் நடக்க திட்டமிடப்பட்டிருந்தது. இறுதி நேரத்தில் மாப்பிள்ளை வீட்டாரிடம் கழிப்பறை இல்லை என்பதை அறிந்து கொண்டு அவர் திருமணத்தை நிறுத்தியுள்ளார்.

இதன் பின்னர் அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அவருக்குத் தகுந்த வேறு ஒருவருடன் நேற்று முன்தினம் திருமணம் நடைபெற்றது. பெண்ணின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அவர் தனது வீட்டில் கழிப்பறையை ஏற்படுத்திக் கொடுத்தார் என அரச சார்பற்ற தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.



பெண்ணின் இந்த அதிரடி முடிவுக்கு அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் முன்னின்று உதவியது. அவருக்கான வாழ்க்கைத் துணையையும் அவர்களே ஏற்பாடு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# தெற்காசிய நாடுகளின் வறட்சியை போக்க அணையை திறக்கும் சீனா

பீஜிங், ஏப்.19
தெற்காசிய நாடுகளில் நிலவும் வறட்சியைப் போக்க, தமது அணைகளைத் திறந்து உதவ சீனா முடிவு செய்துள்ளது.

குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் எல்-நினோ விளைவால் கடும் வறட்சி நிலவி வருகின்றது. தாய்லாந்தில் கடந்த தசாப்தத்தில் இல்லாத அளவுக்கு, 76 மாகாணங்களில் 14 மாகாணங்கள் வறட்சியால் பாதிப்படைந்துள்ளன. வியட்நாமில் கடந்த 90 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு பஞ்சம் நிலவி வருகின்றது. மேலும் வறட்சியால் நெற்பயிர்கள் அழிவடைந்தததுடன், 1.8 மில்லியன் மக்களுக்கு நீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த நிலையை உணர்ந்த சீனா, தம்மால் இயன்ற உதவியை வழங்க முன்வந்துள்ளது. சீனாவில் விளை நிலங்களில் பெரும்பாலானவை 20 மில்லியன் மக்களின் குடியிருப்பான தால், சீனா தனது அணையைத் திறந்து விடுவதால் அந்த நாட்டுக்கு எதுவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. சீனாவின் தென் மேற்குப் பகுதியில் 39 நீர்மின் அணைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகள் 11 புதிய அணைகளைக் கட்டத் தீர்மானித்துள்ளன. வியட்நாம், மியன்மார், தாய்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகள் சீனாவின் அணை திறப்பால் நன்மையடையும் என சீன வெளிவிவகார ஊடகப் பேச்சாளர் லு-காங் தெரிவித்தார். (த-ரி4)

# ...ிரவாதத்துக்கு எதிராக ...ல்ஜியத்தில் ஊர்வலம்

..., ஏப்.19
... தலைநகரில் ஆயிரக்கணக்கான மக்கள் தீவிரவாதத்துக்கு
...ணி திரண்டு ஊர்வலமாக நகரில் வலம் வந்தனர்.

...தம் பிரஸ்சல்ஸ் நகரில் இடம்
...குதலைக் கண்டித்து இந்த ஊர்
...ங்குபடுத்தப்பட்டது.
...வலத்தில் கிட்டத்தட்ட 7 ஆயிரம்
... கொண்டனர் எனப் பொலிசார்
...னர். ஆனால் ஏற்பாட்டாளர்கள்
...் பேர் பங்குபற்றுவர் எனத் தி
...ந்தனர். ஊர்வலத்தில் கலந்து
...ர்கள், ஐ.எஸ் அமைப்பு ஒழிக
...ஷங்களை எழுப்பியதுடன் பாதா
... தாங்கியிருந்தனர்.
... குண்டுவெடிப்பில் இறந்தவர்
...தன்போது அஞ்சலி செலுத்தப்
...த்துடன், பெல்ஜியம் தீவிரவாதி
...சாந்தமானது அல்ல, நாம் தீவி
...ுகு எதிரானவர்கள் என ஊர்
...பங்கு கொண்டோர் குரல் எழுப்
(த-ரி4)

# ... ஏற்படுத்திய ... ஹோட்டல்

...ரில் சர்ச்சைக்குரிய ஹோட்டல்
...வளியில் இருந்து கட்டடத்தைப்
...கத் தெரிந்தாலும் உள்நுழைந்த
...வீட்டில் நுழைந்த உணர்வைக்
...ு படங்கள், அவரை மேன்மைப்
... உள்ளடக்கப்பட்டுள்ளன.
...சிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்
...ருவ அமைப்பில் உயரத்தில்
... அங்கு வருபவர்களை மிகவும்
...சிலையுடன் படம் பிடித்துச் செல்

...ம், ஏனைய பிரபல அரசியல்
...டுத்தும் விடயங்களையும் அது

...ன் ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா
...ளது. ஒபாமாவின் உருவப்படம்
...ம், பிரிட்டன் பிரதமரை இழிவு
...கழிப்பறையில் காணப்படு கின்
...டியின் அமைப்பிலான கழிப்பறை
...ப்படுகிறது. இந்த ஹோட்டல் சமீ
...பஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2016 உங்களது எண் பலன் எப்படி?

**(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் ஆறாம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. இன்று 7 ஆம் எண்காரர்களுக்கான பலன்கள் பிரசுரமாகிறது)**

## எண் 7

இப்போது இல்லற சந்நியாசிகளான 7ஆம் எண் காரர்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

இந்த 7 எண் மட்டும் இறைவனின் சர்வ வல்லமை மிகுந்த எண்ணாக உள்ளது. இவர்களது பேச்சில் எப்போதும் பரம்பொருள், விதி, இறைவன் என்ற வார்த்தைகள் மிகுந்திருக்கும் 7ஆம் எண்ணானதும் இளமைக் காலத்தில் போராட்டங்களையும், வறுமையையும் (பெரும்பாலோருக்கு)க் கொடுக்கும். ஆனால் நடு வயதுக்கு மேல் பெருத்த யோகங்களையும், பெரும் செல்வத்தையும் கொடுத்துவிடும். இவர்கள் தங்களின் கடுமையான உழைப்பில் வந்த பணத்தை, ஏழைகளின் நல்வாழ்க்கைக்காகவும், ஆலயத் திருப்பணிகளுக்காகவும், பொதுத் தொண்டுக்காகவும் அனாதை ஆசிரமத்துக்காவும் செலவழிப்பார்கள். இவர்கள் உடையிலே எளிமையும், ஆனால் சுத்தமும் இருக்கும். தங்களது கடமையிலேயே மிகவும் கவனமாக இருப்பார்கள். இவர்களதுசெயல்களில்ஒருகடமையும்–கண்ணியமும், கட்டுப்பாடும் இருக்கும். உலகத்தை உய்விக்க வந்த இயேசுகிறிஸ்து, ஆதிசங்கராச்சாரியார், ரவீந்திரநாத தாகூர் ஆகியோரெல்லாம் இந்த 7ஆம் எண்ணில் பிறந்தவர்களே! இவர்களுக்குச் சித்து விளையாட்டுக்கள் எல்லாம் எளிதில் கைகூடும்! இவர்கள் உலகப் பயணம் செய்து, தங்களது அனுபவங்களை உலகத்தாருக்கு அழகுடன் எடுத்துரைப்பார்கள்.

பொருளாதார நிலை 7ஆம் எண் அன்பர்களுக்குத் திருப்திகரமாக இருக்காது! வேதனைகளும், சோதனைகளும் இவர்களைத் தொடர்ந்து வரும். எந்த ஒரு செயல் தொடங்கினாலும் அதை நிறைவேறுவதற்காகப் பல தடைகளைச் சந்திக்க வேண்டி வரும். கேது பகவான் கொடுக்க ஆரம்பித்தால் அதை வேறு எவரும் (கிரகங்கள்) அழிக்கவோ, தடுக்கவோ முடியாது என்பது சோதிட உண்மையாகும். எப்படியும் நல்ல வளமான வாழ்க்கையைத் தங்களது வாழ் நாளில் அடைந்து விடுவார்கள். 7ஆம் எண்ணின் பலம் குறைந்த அன்பர்கள் பலர் உயர் கல்வி அமைந்திருந்தும், திறமைக்கேற்ற ஊதியம் கிடைப்பது மிகுந்த தடைப்படும். பெரும்பாலான 7ஆம் எண்காரர்கள் இதனை நினைத்து வேதனையும், வாழ்க்கையில் விரக்தியும் அடைகின்றனர்.

பல லட்சக்கணக்கான மூலதனத்தைப் போட்டும், செய்தொழிலில் முன்னேற்றத்தைக் காணாத நபர்களின் எண்கள் 7 ஆக இருப்பதைக் காணலாம். ஆனால், இந்த அன்பர்கள் சலிக்காமல் மனோ தைரியத்துடன் வாழ்க்கையில் போராடுவார்கள். 3ஆம் எண்காரர்கள், போன்று இவர்களும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பார்கள்.

அண்ணன் சொத்து எடுத்துக் கொண்டாரா பரவாயில்லை. மனைவி அவமதிக்கிறாளா என் தலைவிதி என்று இருப்பார்கள். உற்றாரும், ஊராரும் மதிப்பதில்லையே என்னை ஒருநாள் மக்களும், உறவினர்களும் பாராட்டு வார்கள் என்ற நம்பிக்கையும், எதையும் தாங்கிக் கொள்ளும் மனோபலமும் உண்டு! மனத்தில் கற்பனை வளரும். பிரபஞ்ச சக்தியுடன் உடனடித் தொடர்பும் இவர்களுக்கும் கிடைக்கும்.

உங்களது வாழ்க்கையில் கடினமாக உழைத்துத்தான் முன்னேற வேண்டுமே தவிர அடுத்தவர்கள், உறவினர்கள் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது! ஒன்பது எண்களிலும் 9ஆம் எண்ணுக்கே முன்கோபம் உண்டு. அதை அடுத்து இந்த 7ஆம் எண்காரர்களுக்கும் முன்கோபம் அடிக்கடி வரும். இந்தக் குணத்தினாலேயே, இவர்களது நல்ல செயல்களும், குணங்களும் மக்களால் மறக்கப்படுகின்றன! பொதுவாகத் தங்கள் மனத்தில் உள்ளதை அப்படியே வெளியில் சொல்லிவிட மாட்டார்கள். இவர்கள் ஆத்மபலம் மிகுந்தவர்கள்.

அடுத்தவர்களின் தூண்டுதலை எதிர்பார்க்க மாட்டார்கள். இவர்கள் நீதிக்கும், தர்மத்துக்கும் போராடுவார்கள், மக்களுக்காக மனம் விரும்பி உழைப்பார்கள். அவர்களின் செய்நன்றியைப் பிரதிபயனாக எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதே இவர்களின் உயர்ந்த குணமாகும்.

---

# முன்னாள் போராளிகளுக்கொரு வேண்டுகோள்

சு.சிவாஜினி (பூவரசி)



**இன்று நாங்கள் படும் துயரங்கள் பல பேருக்கு பொழுது போக்கு, எமது வறுமை பலபேருக்கு பிழைப்பு. எனைதருமைச் சகோதர, சகோதரிகளே தயவு செய்து எவரிடமும் சென்று உதவியென்று கேட் காதீர்கள், அவர்களிடத்தில் உங்களை அடகு வைத்துவிடாதீகள்.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பேர்ராளிகளாக இருந்த நாம் அனைவரும், தமிழ்விடுதலைக்காகவே தலைவன் அணியில் இணைந்தோம், எத்தனை துயரங்கள் சுமந்த போதிலும் நாம் சுமந்த கொள்கையில் உறுதியுடன் இருந்து போராடினோம், எவரிடமும் விலை போகாத தன்மானத்தோடு வாழ்ந்தோம், எத்தனை வறுமை, மருத்துவ வசதியின்மை, எமது உயிருக்கே உத்தரவாதம் அற்ற நிலை வந்தும் எவருக்கும் நாங்கள் விலை போகவில்லை.

நாங்கள் ஒவ்வொருவரும் போர் நடைபெற்றுத் தோற்றுப் போன வேளையில் இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று, எமது குடும்பங்களோடு இணைக்கப்பட்டு வாழ்கின்றோம். கடந்த அரசாட்சியில் எம்மை மீண்டும் மீண்டும் காட்டிக் கொடுத்து நாம் புனர்வாழ்வு பெற்ற போதிலும் பல விசாரணைகளுக்கு உட்படுத்த சிலர் காரணமாக இருந்து எங்களூடாக அவர்கள் பசியாறியும் சொகுசு வாழ்வும் வாழ்ந்தனர். எங்களை வைத்து எத்தனைபேர் காய் நகர்த்தலை மேற்கொண்டனர். எதையும் நாங்கள் மறந்துவிடக்கூடாது.

கடந்த அரசில் நாங்கள் கடத்தப்பட்டு விடுவோம், எங்களுக்கு ஏதேனும் நடந்தால் எங்களது குடும்பத்தை யார் என்ற பயத்துடன் வேதனையோடு வாழ்ந்தோம். அப்படி வாழ்ந்தும் நாம் கண்ட மிச்சம் ஒன்றும் இல்லை.

நிலைமை இப்படியிருக்கையில் அரசு மாற்றம் பெற்ற பிற்பாடு கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சுவிட்டோம். எங்களுக்கு உதவிகள் கிடைக்காது போனாலும் நிம்மதியாக வாழ்கின்றோம்.

ஆனால் எங்களை வைத்து இன்றும் அரசியல் நடத்துபவர்களிடத்தில் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பொருளாதார ரீதியாக நாங்கள் வறுமையோடு இருப்பதை வைத்து எமக்கு உதவுகின்றோம் என்று சொல்லி தமது அரசியல் காரியங்களை நடத்தும் கட்சிகளிடத்திலிருந்து விலகியிருப்பது மிகப் பெரிய காரியமாகும். உண்மையில் அனைவரும் எங்களை வைத்து தமது வேலைகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றனரே தவிர எமது தேவை என்ன? எதைச் செய்து கொடுத்தால் அவர்களின் வாழ் வாதாரம் மேம்பாடடையும்? என்பதில் அக்கறை காட்டுவதில்லை.

இன்று எங்களை வைத்து உலக நாடுகளில் எல்லாம் நிதி வேண்டுவோர் எமக்கு அவற்றை உரிய முறையில் பகிர்ந்து அளிக்கின்றார்களா? உங்களின் பிரச்சினையை எழுத்தில தாங்கோ நாங்கள் செய்கிறோம் என்று ஒரு கூட்டம், கடவுளே இதற்கு யார் பொறுப்பு? பெட்டியிலிருக்கும் பணம் குட்டி போடுமா? அதைப் பகிர்ந்து ஒவ்வொருவருக்கும் கொடுத்து தொழில் ரீதியாக ஊக்குவிப்புச் செய்தால் அந்தக் காசு பெருகி வருவாயைத் தரும்.

இன்று நாங்கள் படும் துயரங்கள் பல பேருக்கு பொழுது போக்கு, எமது வறுமை பலபேருக்கு பிழைப்பு. எனைதருமைச் சகோதர, சகோதரிகளே தயவு செய்து எவரிடமும் சென்று உதவியென்று கேட் காதீர்கள், அவர்களிடத்தில் உங்களை அடகு வைத்துவிடாதீகள்.

நாங்கள் புண்பட்டவர்கள் தான். ஆனால் புண்ணைக்காட்டி இரந்து பிச்சை எடுக்கும் இனமல்ல, பட்டுப்பட்டே பணியப்பட்டவர்கள் தான் நாங்கள். சகல வலிகளும் உணர்ந்தவர்கள், சாப்பாடு இல்லாமல் இருந்து, மருந்து இல்லாமல் இருந்து, ஏன் மாற்றுத்துணியின்றி மலசலம் கழிக்க மறைவின்றியும் பிணக்குவியல்களுக்குள் படுத்துறங்கியும், உறவுகளை சாவு கொடுத்தும், பிள்ளையை இழந்தும், புருசனை இழந்தும். சகல துன்பமும் பட்டவர்கள் தான் நாம். இவை யாவும் எம்மை பட்டுப் போக விடவில்லையே! இனிமேல் நாம் அனுபவிக்க என்ன தான் இருக்கிறது?

புனர்வாழ்வு பெற்ற எம்மை இராணுவம் சும்மா விட்டவனா என்று எம்மை கெட்டுப்போன பெண்களாக பார்க்கும் சமூகத்தின் வசைபாடலின் வலிகளை விடவா கொடுமை இருக்கு, எல்லாம் முடிந்து போய் வெறும் கூடாக அலையும் எமக்கு எதுவும் இல்லாதபோதும் எவரிடமும் கையேந்தாதீர்கள். அண்ணன் வழியில் அவன் தலைமையில் வாழ்ந்த நாம் எதையும் உழைத்துப் பெறுவோம். முயன்றிடுங்கள். முடியாதது ஒன்றும் இல்லை. எமது நெஞ்சுரம் எதற்கும் வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மறவர் வரலாற்றை உணராத மாணவர்கள்

# கல்விப் பண்பாட்டை இழக்கின்றனர்

■ அனந்தன்

தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறுவதற்கான முக்கிய காரணிகளில், 1970 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியில் விகிதாசார முறைகொண்டு வரப்பட்டமையும் ஒன்றாகும். இதனால் தோன்றிய இயக்கங்கள் பலவற்றில் மாணவர்கள்பலர் இணைந்து ஆயுதப் போராட்டம் மேற்கொண்டதுடன், சிலர் அகிம்சைப் போராட்டம், எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றையும் மேற்கொண்டனர். இதில் தமிழ் மாணவர் பேரவை எனும் அமைப்பை உருவாக்கி, மாணவர் சார்பாகக் களமிறங்கிய சிவகுமாரன் மிகவும் முக்கியமானவர். 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டின் குழப்பங்களுக்கும் சாவுகளுக்கும் காரணமான மேயர் அல்பிரட் துரையப்பா, ஏ.எஸ்.பி.சந்திரசேகரா போன்றோரைப் பழி தீர்க்கப் புறப்பட்டார் முடியவில்லை. பின்னர் 1974 ஆனி 5 ஆம் திகதி கோப்பாயிலுள்ள வங்கியொன்றைக் கொள்ளையடித்துச் செல்லும்போது சுடப்பட்ட சிவகுமாரன் தப்பியோட முடியாமல் ஈழப் போராட்ட வரலாற்றில் முதலாவதாக சயனைட் அருந்தி வீரகாவியமானார். பல்கலைக்கழக மாணவனான சத்தியசீலன் தமிழ் மாணவர் கழகம் என்ற அமைப்பையும் உருவாக்கினார். இவ்வாறு பல மாணவர்கள் ஆயுதம் தரித்தும் அகிம்சை வழியிலும் போராட்டம் நடத்தக் காரணம் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். ஆனால் 25 மாவட்டங்களைக் கொண்ட இலங்கையில் க.பொ.த (சா/த)பரீட்சையில் யாழ்ப்பாணம் 21 ஆவது இடத்தில் இருக்கின்றது. இது கல்விக்குப் பேர்போன யாழ்ப்பாணத்தில் கல்விக் கலாசாரத்தில் மாணவர்களின் இயலாமையையும், அசண்டையீனத்தையும் வெளிப்படுத்துகின்றது.

அன்று இலங்கையின் கல்வி நிலையில் முதலாவதாக இருந்த யாழ்ப்பாணம் இன்று 21ஆம் நிலைக்குவரக் காரணம் என்ன? தமக்கு நேர்ந்த அநீதி, அவலம் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு வரக்கூடாது என்று சமராடிக் காவியமானவர்களுக்கு எமது மாணவர்கள் செலுத்தும் காணிக்கை இதுதானா? அல்லது திறமையற்ற சந்ததியாகிய எம் வாழ்வுக்காக விதையானது உங்கள் முட்டாள் தனம் என்பதற்கான சமிக்ஞையா இந்த மாணவர்களது கல்வி நடவடிக்கை? கல்விக்குப் பேர்போன யாழ்ப்பாணத்து மாணவர்கள் புத்திசாலித் தமிழர்கள். தரப்படுத்தலுக்கு முன்பு பல்கலைக்கழகத்துக்கு தேசிய ரீதியில் நடைபெற்ற பரீட்சை மூலம் இவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.



எந்தவொரு பாகுபாடுமின்றி புள்ளியடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.ஆனால் யாழ். கொழும்பு தமிழர்கள் அதிகளவில் தெரிவாகினர். 1966 - 1970 ஆம் ஆண்டு களில் வைத்தியத்துறையில் தமிழர்கள் 45 வீதத்தைத் தமதாக்கியதுடன் விஞ்ஞான, பௌதிகப் பிரிவில் 35 வீதத்தையும் தமதாக்கினர்.

இதனால் அரசு தரப்படுத்தலை நடைமுறைப்படுத்தியது. 1971 இல் விகிதாசார அடிப்படையில் புதுப் பல்கலைக்கழக தரப்படுத்தல் கொள்கை அறிமுகமானது. இதனால் 1970 இல் 35 வீதமாக இருந்த விஞ்ஞானப் பிரிவு, 1975 வரையில் 19 வீதமாகக் குறைந்து சிங்களவர் அதிகளவில் சென்றனர்.

பல்கலைக் கழகத்துக்கு அதிகமாக தமிழர்கள் சென்றதைப் போன்றே அரச வேலைகள் அனைத்திலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் முன்னிலை வகித்தனர். இதனாலேயே சிங்களவர்கள் 1981 இல் யாழ். நூலகத்தை எரித்து நாசமாக்கி கல்வியைச் சீர்குலைக்க முற்பட்டனர்.

அனைத்திலும் கொடிகட்டிப் பறந்த யாழ்ப்பாணம், இன்று இந்த நிலைக்கு வரக் காரணம், பெற்றோர்களின் கவனவீனம், மது, போதைப் பொருள், புகைத்தல் பழக்கம், ஆபாச மற்றும் சினிமா, சமூகவலைத்தளங்கள் சிதைக்கப்பட்ட கூட்டுக்குடும்ப வாழ்வு, வீணாய்ப்போன தறுதலைக் காதல், தட்டிக்கேட்க எவரும் இல்லையென்ற துணிச்சல் ஆகியனவே.

அன்று கல்விக்காக உயிர்விட்ட மாணவர்கள், இன்று வாள்வெட்டு, கோஷ்டி மோதல், களவு, கொள்ளை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் கல்வியில் கொடிகட்டிப் பறக்கப் பிரதான காரணம் அன்றைய மாணவர்கள் குருவைத் தெய்வமாக மதித்தமை இன்னும் சொல்வதானால் தெய்வத்தை விட அதிகமாக ஆசிரியர்களில் பக்தி வைத்தனர். பயம் கலந்த பக்தியால் நன்றாகக் கற்றனர். ஆனால் இன்றைய மாணவர்களுக்கு ஆசிரியர்களே பயம். ஆசிரியர்கள் ஏன் தேவையில்லா பிரச்சினை என்று புனிதமான ஆசிரியத் தொழிலைக் கடமைக்காகச் செய்கின்றனர். ஆசிரியர்கள் கல்வியை வியாபாரமாக மாற்றிவிட்டனர். ஏணியாய் இருந்து மாணவர்களைச் சிகரத்தில் ஏற்றிவிட்ட ஆசிரியர்கள் இன்று சம்பளஉயர்வு வேண்டி பணிப் புறக்கணிப்பு, சட்டப்படி வேலை செய்தல் போன்ற போராட்டங்களை மேற் கொண்டு வருகின்றனர்.

குருவை, தெய்வத்தைவிட அதிகமாக, பயத்துடன் கூடிய பக்தியுடன் மதித்த மாணவர்கள், ஆசிரியத் தொழிலைப் புனிதமாக மேற்கொண்டு மாணவர்களின் வெற்றிக்குக் காரணமான ஆசிரியர்கள், பிள்ளைகளின் கல்விக்காக தம் வாழ்வில் அனைத்துச் சுகங்களையும், சந்தோசங்களையும் தியாகம் செய்த பெற்றோர்கள், பிள்ளைகளின் செயல்களை, நடவடிக்கைகளைக் கண்காணித்துத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த உறவினர்கள், தமிழர் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்ட அரசியல் தலைமைகள், சமூக நலனில் அக்கறை கொண்ட சமூக அமைப்புக்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்ற மாணவர்கள், இனமத வேறுபாடின்றித் திறமைக்கு முக்கியத்துவம் கொடுத்த கல்விச் சட்டம் என்பவையே தமிழனின், யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி முன்னிலைக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமாக விளங்கியது. முதல் நிலையிலிருந்த யாழ்ப்பாண மாணவர்கள் 21 ஆம் நிலைக்கு வரக் காரணம் முதல் நிலையில் இருக்க உதவிய காரணிகள் அனைத்தும் சிதைந்தமையே ஆகும். எனவே மீண்டும் முதலிடத்துக்கு யாழ்ப்பாண மாணவர்கள் வருவதற்கு மேற்படி சம்பந்தப்பட்ட அனைவரும் சிறப்பாகச் செயற்பட வேண்டும். அப்போதுதான். எதிர்காலச் சந்ததியின் நலனுக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்து காவியமானவர்களின் கனவு இலட்சியம் பூர்த்தியாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1677 - ஸ்பானிஷ் படை வசமிருந்த காம்ரி நகர், பிரான்ஸ் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1770 - கப்டன் ஜேம்ஸ்குக் என்பவரால் தற்போது ஆஸ்திரேலியா என்று அழைக்கப்படும், கிழக்குக் கரை கண்டு பிடிக்கப்பட்டது.

1865 - வெள்ளை மாளிகையின் கிழக்கு அறையில் அபிரகாம் லிங்கனின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன.

1919 - அமெரிக்காவைச் சேர்ந்த லெஸ்லி இர்வின் புதுவித பரசூட்டைப் பயன்படுத்திக் குதித்தார்.

1928 - 125 ஆவது பதிப்பாக ஒக்ஸ் போட் ஆங்கில அகராதி பிரசுரிக்கப்பட்டது.

1948 - ஐக்கிய நாடுகள் சபையில் பர்மா இணைந்து கொண்டது.


1954 - உருது மற்றும் வங்காள மொழிகள் தேசிய மொழிகளாக பாகிஸ்தான் அரசமைப்பு சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

1993 - லோவாவில் அரச விமானம் விபத்துக்கு உள்ளாகியதில் ஆளுநர் ஜோர்ஜ் மைக்கல் சன் மற்றும் 7பேர் சாவு.

1995 - ஒக்லஹோமா நகர் குண்டு வெடிப்பு; அமெரிக்க ஒக்லஹோமாவில் இடம்பெற்ற கட்டடக் குண்டு வெடிப்பில் 168 பேர் சாவு.

2011 - பிடல் காஸ்ரோ கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிலிருந்து 45 ஆண்டுகளின் பின் விலகினார்.

2013 - பொஸ்ரன் மரதன் குண்டு வெடிப்புச் சந்தேக நபர் தாமரியன் சர்னீவ், பொலிஸாருடன் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டார். அவருடைய சகோதரன் மசாசூட் வோட்டர் நகரில் படகு ஒன்றில் பதுங்கியிருந்தவேளை கைதுசெய்யப்பட்டார்.



# வர்ணம் தீட்டுவோம்வாங்க....



# தங்கத் தூண்டில்

முன்னொரு காலத்தில் ஒரு தீவை ஆண்டு வந்த மன்னனுக்கு மகன்ஒருவன் இருந்தான். அவன் நல்ல மனம் கொண்டவன் அல்லன். முரட்டுத் தனமானவன். தான் இளவரசன் என்ற ஆணவத்துடன் மற்றவர்களைத் துன்புறுத்தி வந்தான். அந்த மன்னனுக்கு ஒரு மந்திரி இருந்தார். அவனுக்கு கோஜோ என்ற ஒரு மகன் இருந்தான். அவன் நல்ல மனமும் குணமும் உள்ளவன்.

இளவரசனும் மந்திரிக் குமாரனும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் பல நேரங்களில் ஒன்றாகவே இருப்பர். ஒருநாள் இருவரும் கடற்கரையில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். இளவரசன் தங்கத் தூண்டிலைக் கொண்டு மீன் பிடித்தான். கோஜோவின் தூண்டிலில் ஏராளமான மீன்கள் அகப்பட்டன. ஆனால் இளவரசன் தூண்டிலில் ஒன்று கூட அகப்படவில்லை.

இதனால் அவன் பெரிதும் வருத்தமுற்றான். கோஜோ இளவரசனின் வருத்தத்தைப் போக்க எண்ணி அவன் தூண்டிலை வாங்கி மீன் பிடித்துத் தரமுன் வந்தான். அவனுடைய தங்கத் தூண்டிலைக் கடலில் வீசி மீனுக்காகக் காத்திருந்தான். திடீரென்று தூண்டில் இழுபடுவதை உணர்ந்து கயிற்றை இழுத்தான். அப்போது கயிறு அறுபட்டு வெளியே வந்தது. தூண்டில் வரவில்லை. அதனால் கோஜோ நீரில் மூழ்கி தூண்டிலைத் தேடிப் பார்த்தான். தூண்டில் அகப்படவில்லை.

இதைக் கண்ட இளவரசனுக்கு கோபம் ஏற்பட்டது. 'என் தங்கத் தூண்டிலை எப்படியாவது ஒரு வாரத்துக்குள் எடுத்துத் தரவேண்டும். இல்லாவிட்டால் உன் தலையை வெட்டி விடுவேன்" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குச் சென்றான்.

அப்போது வானிலிருந்து நிலா கீழே இறங்கி வந்தது. அதைக் கண்டு கோஜோ திடுக்கிட்டு எழுந்தான். "உன் கவலை எனக்குத் தெரியும். அதோ தெரியும் அந்தப் படகில் ஏறிக் கடலில் செல். கடல் அரசனின் அரண்மனையை நீ அடைவாய். அவனிடம் கேட்டால் தங்கத் தூண்டில் கிடைக்க வழி செய்வான் என்று கூறிவிட்டு நிலா மீண்டும் வானத்துக்கே சென்றுவிட்டது.

கோஜோ அவ்வாறே கரையிலிருந்த படகில் ஏறிக் கடலில் நீண்ட தூரம் பயணம் செய்து கொண்டிருந்தான். அப்போது சற்றுத்தூரத்தில் பெரிய மாளிகையும் அதைச் சுற்றி பெரிய பூந்தோட்டமும் தெரிந்தது. அவன் பூந்தோட்டத்தில் இறங்கி நடந்தான். அந்தத் தோட்டத்தில் ஒரு பளிங்கு மேடையில் அழகிய பெண் ஒருத்தி உட்கார்ந்திருப்பதைக் கண்டு அருகில் சென்றான். அவளும் அவனைப் பார்த்தாள். அவள் தோற்றத்திலே அவன் தன் மனதைப் பறி கொடுத்தான். அவள் அவனை யார் என்று கேட்டாள். அவன்தான்யார் என்பதையும் தான் வந்த நோக்கத்தைப் பற்றியும் சொன்னான்.

அவள் 'நான் உங்களுக்கு உதவுகிறேன்" என்று சொல்லிக்கொண்டிருந்த போது அவளுடைய தோழிகள் இளவரசி என்று அழைத்துக்கொண்டே அங்கு வருவதைக் கண்ட அவள் கோஜோவை ஒரு மாலையாக மாற்றி தன் கழுத்திலே அணிந்துகொண்டாள். அவளது தோழிகள் தோட்டத்தில் ஒரு பக்கமாக படகு நிற்பதைக் கண்டு யாரோ வந்திருப்பதைத் தெரிந்துகொண்டனர். "இளவரசி! யாரோ நம் தோட்டத்துக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது என்று வியப்புடன் கூறினர். ஆனால் அவள் யாரும் வந்திருக்க முடியாது என்றுகூறி மழுப்பிவிட்டு அவர்களை அரண்மனைக்கு அழைத்துச் சொன்றாள்.

அன்றிரவு அனைவரும் உறங்கியபிறகு கோஜோவை உருவெடுக்கச் செய்தாள். இருவரும் நீண்டநேரம் பேசினர். அவன் வந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்ய விரும்பிய அவள் மறுநாள் தன் தந்தையிடம் அழைத்துச் சென்று அவனுக்கு உதவும்படி வேண்டினாள். கடல் அரசனும் சம்மதித்தான்.

பிறகு கடல் அரசன் மீன்களை எல்லாம் அழைத்து தங்கத் தூண்டிலைக் கொண்டு வரும்படி சொன்னான். இரண்டு நாளில் மீன்கள் தங்கத் தூண்டிலைத்தேடிக் கொண்டுவந்து கொடுத்தன. இளவரசி கோஜோ விடம்தூண்டிலையும் இரண்டு வைரங்களையும் தன் காதல் பரிசாக அளித்தாள். அந்த வைரங்கள் சக்தி வாய்ந்தவை. ஒன்றை அவன் கையில் வைத்துக்கொண்டு நினைத்தால் கடல் கன்னி தோன்றுவாள். இன்னொரு வைரம் அவனுக்கு எந்த ஆபத்தும் நேராதவாறு காப்பதோடு வெற்றியைத் தேடித் தரும் என்று அவனிடம் கூறி அனுப்பி வைத்தாள்.

கோஜோ அரண்மனைக்குச் சென்று இளவரசனிடம் தங்கத் தூண்டிலை கொடுத்துவிட்டான். சில நாள்களுக்குப் பிறகு அவனுக்கு வைரங்களின் நினைவு வந்தது. அதனால் கடற்கரையில் ஒரு மாளிகையைக் கட்டினான். பின் ஒருவைரத்தின் துணையால் கடல் கன்னியை நினைக்க அவள் வந்தாள். அங்கு இருவரும் சந்தோசமாக இருந்தனர். இளவரசன் அதைப் பார்த்து விட்டான். அவனுக்கு கடல் கன்னியின் மீது ஆசை ஏற்பட்டது. அதனால் படையுடன் கோஜோவை சிறை பிடிக்க வந்தான்.

கோஜோ இன்னொரு வைரத்தை எடுத்தான். அதன் மகிமையால் கடல் நீர் பொங்கிக்கொந்தளித்தது. இளவரசன் உட்பட படைவீரர்அனைவரும் நீருக்குள் சிக்கித் தவித்தனர். பின் உயிர் பிழைத்தால் போதுமென்று அங்கிருந்து ஓடிவிட்டனர். மீண்டும் இளவரசன் அந்தப் பக்கம் கூட வருவதில்லை. கோஜோவும் கடல் கன்னியும் அங்கேயே சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது அரசினால் சுமத்தப்படும் வரிச் சுமை

வாழ்க்கைக் கஷ்டங்களை மறந்து தமிழ்-சிங்கள புத்தாண்டைக் கொண்டாடி ஏறத்தாழ ஒருவார கால விடுமுறையையும் மகிழ்ந்தனுபவித்துவிட்டு, மீண்டும் வழமைக்குத் திரும்பும் பலருக்கும் அடுத்தடுத்த வாரங்களில் பல சவால்கள் எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக, பொருளாதார ரீதியில் கஷ்டமான சூழ்நிலைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படப்போகின்றது என்பதை நகர்வுகள் கோடிட்டுக்காட்டி நிற்கின்றன.

மே மாதம் 2ஆம் திகதி முதல் பெறுமதிசேர் வரி (வற்) 15 வீதமாக அதிகரிக்கப்பட உள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. முன்னதாக, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 15வீதமாக அதிகரிக்கப்படவிருந்த வற் வரி மறு அறிவித்தல் வரும்வரை இடைநிறுத்தப்படுவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க ஏப்ரல் முதலாம் திகதி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வற் வரி அதிகரிப்பால் தமிழ்-சிங்கள புதுவருடக்காலத்தில் விலைவாசிகள் உயர்வடைந்து மக்களின் எதிர்ப்பை எதற்காகச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த வற் வரி உயர்வு அடுத்தமாதம் முதல் நடைமுறைக்குவருவது நிச்சயமாகிவிட்ட நிலையில், மக்களின் வாழ்க்கைச்சுமை சடுதியாக அதிகரிக்கப் போகின்றது என்பது நிச்சயம்.

பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கை அரசு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (ஏறத்தாழ 20,000 கோடி இலங்கை ரூபா) பெறுமதியான கடனைப் பெற்றுக்கொள்வதற்காகப் பேச்சுகளில் இறங்கியுள்ள நிலையிலும், அடுத்துவரும் இருவாரகாலப்பகுதிக்குள் இது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், வற் வரி அதிகரிப்பை எந்தக்காரணம் கொண்டும் அரசால் தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசொன்று கடன் பெறும்போது நிபந்தனைகளுக்குக் கட்டுப்படவேண்டும். அனேகமாக மக்களுக்கு வழங்கப்படும் மானியங்களைக் குறைத்தல், வரிகளை அதிகரிப்பதனூடாக வருமானத்தைப் பெருக்குதல், செயற்றிறனற்றுக் காணப்படும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல் போன்ற பொதுவான நிபந்தனைகள் அடங்கியிருக்கும் என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுவிடவேண்டும் என்பதற்காக அரசு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பது பற்றி எவ்வித கரிசனையுமின்றி நிபந்தனைகளுக்கு தலையசைக்கவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படும் பட்சத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என்பது நிச்சயமானது. ஆனால், எந்தளவுக்கு வரி உயர்வின் காரணமாக மக்கள் பாதிக்கப்படப்போகின்றனர் என்பதே பலருக்கும் முன்பாக உள்ள கேள்வியாகவிருக்கும்.

சராசரியாக குறைந்தவருமானம் பெறும் அன்றேல் மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்த குடும்பமொன்று வரி உயர்வு காரணமாக தற்போது எதிர்நோக்கியிருக்கும் மாதாந்த செலவினத்திலும் பார்க்க மேலதிகமாக 10,000 ரூபாவை அன்றேல் அதற்கும் அதிகமாக செலவழிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

தற்போதைய நிலையில் தொலைபேசிக்கட்டணமாக 2,500 ரூபாவை செலுத்தும் குடும்பமொன்று வரி உயர்வின் பின்னர் மேலதிகமாக 375 ரூபாவை செலுத்த நேரிடும். அதேபோன்று தற்போது மின்சாரக் கட்டணமாக 5,000 ரூபாவை செலுத்தும் குடும்பம் மேலதிகமாக 750 ரூபாவை செலுத்த நேரிடும். நீர்க்கட்டணமாக மாதாந்தம் 1,500 ரூபாவை செலுத்தும் குடும்பம் மேலதிகமாக 225 ரூபாவைச் செலுத்த நேரிடும்.




இவற்றைத்தவிர போக்குவரத்து, தனியார் வைத்திய சேவை, தனியார் வகுப்புகள், உணவகங்கள் போன்றவற்றுக்காக செலவுகளும் மேலும் அதிகரிக்கும் என்பதால் வாழ்க்கைச்சுமை சடுதியாக அதிகரிக்கும் என்பது நிச்சயம். இதில் அன்றாடம் கஷ்டப்பட்டு உழைக்கின்ற மக்களும், அரச தனியார் தொழிற்றுறைகளில் குறைந்த மட்டத்திலுள்ள ஊழியர்களுமே அதிகமாக பாதிக்கப்படப்போகின்றனர் என்பது கவலைக்கிடமானது.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக மக்களின் மீது வரிச்சுமையை அதிகரிக்கின்ற அரசு, தொலைநோக்குமிக்க திட்டங்கள[illegible] முறைப்படுத்தி, விரைவாக மக்களுக்கு நிவாரண[illegible] பெற்றுத்தர முன்வரவேண்டும்.



# அயராத சேவையால் மதிக்கப்பட்ட கனவான்

## 100 ஆவது ஜனன தினம் கண்ட கலாநிதி ஆ.தியாகராஜா

மருத்துவர் எஸ்.சுவாமிநாதன்

காரைநகர் இந்துக் கல்லூரியின் அதிபராக 1946 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரை 24 ஆண்டுகள் சேவையாற்றிய கலாநிதி ஆ.தியாகராஜாவின் 100 ஆவது ஜனன தினம் கடந்த 17 ஆம் திகதியாகும். தன்னல மற்ற அர்ப்பணிப்பற்ற அயராத சேவையால் எமது மக்களால் போற்றப்படும் கலாநிதி தியாகராஜா வட்டுக்கோட்டையைச் சேர்ந்த துணவி என்னும் ஊரை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் தனது பட்டப் படிப்பை இந்தியாவில் கற்ற பொழுது கர்நாடக சங்கீதம், உதைபந்தாட்டம், மல்யுத்தம், ஹொக்கி போன்வற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

பன்னாங்கினால் சுவரும், கிடுகினால் கூரையும் அமைந்த ஒன்பது வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதிகளை இந்தப் பாடசாலை கொண்டிருந்தது. வெளிநாடுகளில் வதியும் எம்மவர்களின் உதவி மிகவும் சொற்பமாக இருந்த காலத்தில் மலேசியா, சிங்கப்பூர் சென்று அந்த நாடுகளில் கோலாலம்பூர், ரவுப், மென்ரகாப், செரம்பான், ஈப்போ, பினாங், குவாந்தன் போன்ற பெரிய சிறிய நகரங்களில் பரந்து வாழ்ந்த எமது ஊர் மக்களிடம் சிரமம் கருதாது சென்று நிதியுதவி பெற்று வந்து பாடசாலைக் கட்ட டம் பூர்த்தி செய்யப்பட்டு மிக எளிமையாகத் திறப்பு விழா கொண்டாடப்பட்டது.

அன்னார் எமது மக்களின் கல்வியில் மிகவும் ஆர்வம் காட்டியது மட்டுமன்றி, கால்பந்து, கைப்பந்து, தடகளப் போட்டி, கர்நாடக சங்கீதம், கலாசாரம், சமயநெறி ஒழுக்கம் என்பவற்றிலும் மிகவும் அக்கறை காட்டினார். பாடசாலை மாணவர்களும், பழைய மாணவர்களும் விளையாட்டுக்களிலும் பங்கு பற்ற வேண்டும் என்பது இவரது நோக்கமாக இருந்தது. இவரது காலத்தில் கல்லூரியில் இருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இருந்த தச்சன் பனை என்னும் இடத்துக்கு நடந்து வந்து கால்பந்து விளையாடுவதும் விளையாட்டுப் போட்டி நடத்துவதும் நிறுத்தப்பட்டு, தற்போதுள்ள மைதானத்தின் பக்கத்திலுள்ள காணிகளின் பகுதிகள் வைத்தியசாலை நிலத்தின் ஒரு பகுதி என்பன இவரது முயற்சியால் பெறப்பட்டு நிரவப்பட்டு அமைக்கப்பட்டது.

டயானா நிறுவன விற்பனை வாகனம் கொழும்பிலிருந்து வரும்போது விளையாட்டு ஆசிரியர் விளையாட்டுக் குழுத் தலைவர்களுடன் ஆலோசித்து தேவையான பொருள்களை வாங்குவது இவரது வழக்கம்.

வாழ்நாள் முழுவதும் மது, மாமிசம், வெற்றிலை, புகையிலை முதலியவற்றை தவிர்த்தே வாழ்ந்துள்ளார். முற்கோபி, பிழைகளை நேரடியாகக் கண்டிக்கிறவர் என்று சிலர் கூறுவர். எல்லாத் தெய்வங்களிலும் பக்தி கொண்டிருந்தாலும் மணற்காடு முத்துமாரி அம்பாளில் மிகுந்த பக்தி கொண்டவர். சமய சரித்திர திரைப்படங்களைப் பார்க்குமாறு கூறுவார். தற்போது அத்தகைய படங்கள் வருவதில்லை.

காரைநகர் கிழக்குக் கடற்கரையில் வேணன் அணை அமைப்பதற்கு இவரே முன்னோடியாக இருந்தார். இதனால் புற்றரை நன்னீர் என்ற நன்மைகள் உண்டாகும் எனக் கூறினார். பிரதான வீதிகள் ஒழுங்கைகளை அண்மித்த வீட்டு வளவுகளில் நிழல் மரங்கள் நட வேண்டும் என்றும் - இது சுயநலத்துடன் கூடிய பொதுநலம் என்றும் கூறினார். எல்லாச் சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது இவரது கொள்கை.

காரைநகர் மக்கள் அவர் மீது வைத்திருந்த மதிப்புக்கும் அபிமானத்துக்கும் அவரது வைர விழா ஒரு எடுத்துக்காட்டு. மத்தியானத்துக்கு சிறிது நேரம் செல்ல ஆரம்பமான ஊர்வலம் காரைநகர் பிரதான வீதியைச் சுற்றி கல்லூரி மைதானத்தை அடைய சூரிய அஸ்தமனம் ஆகிவிட்டது. வழிநெடுக மாவிலை, தோரணம், மலர் மாலைகள், நிறைகுடங்கள். கலந்து கொண்டோருக்கு கரை கடந்த உற்சாகம். கல்லூரி மைதானத்தில் இதற்கு முன்பு ஒரு நாளும் இத்துணை மக்கள் கூட்டம் கூடியதில்லை. இனிமேலும் கூடப்போவதும் இல்லை.

இதன் பின்பு இவர் இந்த மக்களின் ஆதரவுடன் தமிழ் காங்கிரஸில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும், இந்தக் காலத்துக்கு முன்பிருந்த அரசை சார்ந்தவர்களுக்குத்தான் உத்தியோகம் நன்மை என்ற நிலை மேலும் தீவிரம் அடைந்து எமது மக்கள் இன்னலுற்றதால் செல்லையா குமாரிசூரியருடன் அரசியலில் சேர்ந்து தனது தொகுதி மக்களுக்கு மாத்திரம் அல்லாமல் யாழ்.மாவட்ட வேறு தொகுதி மக்களுக்கும் உத்தியோகம் வேலைவாய்ப்பு அடிப்படை வசதி போன்ற நன்மைகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இதற்காக ஒருவித இலாபத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. சொத்து, சுகம், வாகன வசதி தேடவில்லை. புகையிரதத் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆணைச் சீட்டுகளையே பிரயாணத்துக்குப் பயன்படுத்தினார். அவரது மைத்துனரால் அன்பளிக்கப்பட்ட காரைத் தான் பயன்படுத்தினார். தலைநகரத்தில் அவரது உறைவிடமாகவும் கந்தோராகவும் மைத்துனரின் வீட்டின் ஒரு பகுதியை உபயோகித்தார்.

எல்லோரும் கல்வி கற்று முன்னேற வேண்டும் என்ற நோக்கம் கொண்டவரான இவர், கல்லூரிக் கூரையில் ஒழுக்கு உண்டான பொழுது தனது வீட்டிலிருந்த ஓடுகளை தானே கொண்டு வந்து உதவினார். ஒரு முறை கல்லூரியில் நடந்து கொண்டிருந்த இரவு வகுப்புக்களுக்குத் தனது வீட்டிலிருந்த பெட்ரோ மாக்ஸ் கொண்டு வந்து கொடுத்தார். ஏன் சேர் என்று கேட்டபோது வீட்டுக்கு அரிக்கன் விளக்கு போதும் -என்றார். அந்தக் காலத்தில் மலைநாட்டுப் பகுதியிலிருந்து வந்து வீட்டுவேலை செய்யும் சிறுவர்கள் கல்வி கற்கவும் வருவதுண்டு. அப்படிக் கல்வி பயின்ற பெரியசாமி என்னும் மாணவனின் திறமையைக் கண்ட தியாகராஜா ஐயா அந்த மாணவன் இருந்த வீட்டுக்காரரை அணுகி அவரின் கல்வியில் கூடிய அக்கறை எடுக்கச் செய்து பின்னர் அவரை மருத்துவக் கல்லூரி பிரவேசம் செய்வதற்கு பாடசாலையில் அனுமதி வாங்கிக் கொடுத்து உதவிகள் செய்தமையால், அவர் ஒரு மருத்துவர் ஆனார். அவரது பகுதியைச் சேர்ந்த 2 ஏழைச் சிறுமிகளுக்கு படிப்புக்காகத் தனது சொந்தப் பணத்தைச் செலவு செய்தார் என்று கூறுவார். அன்னார் மிகவும் எளிமையாக வெள்ளை வேட்டி வெள்ளை நஷனல் என்பவற்றையே அணிவார். சரசரவென்று சத்தமிடும் ஒரு செருப்பைத் தான் அணிவார்.

ஒரு முறை உபஅதிபராகக் கடமையாற்றிய ஆங்கில ஆசிரியர் என்.சபாரத்தினம் டெயிலி நியூஸ் பத்திரிகையுடன் எங்கள் வகுப்புக்கு வந்தார். அதில் இடைக்கால பிரதமராக இருந்து பதவி விலகிச் செல்லும் காலி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுதியான சிராவஸ்தியில் இருந்து ஒரு றங் பெட்டியுடன் வீட்டுக்குச் செல்லும் படம் முன்பக்கத்தில் போடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனக் குழப்பத்துக்கு ஆளாக நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழி வகுக்கும்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விலகிச் செல்வது நல்லது. தொழிலில் தடைகள் குறுக்கிடலாம். ஆதாயம் மிதமாக இருக்கும். வாகன பயணத்தில் மிதவேகத்தை பின்பற்றவும்.

**மிதுனம்:** நியாய தர்மத்தை வாழ்வில் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்துடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** எதிரிகளை அடையாளம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்சாகமுடன் பணியாற்றி ஆதாயம் காண்பீர்கள். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** இனிய எண்ணத்தால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் தடை விலகும். வருமானம் படிப்படியாக உயரும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மற்றவரின் சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். இஷ்ட தெய்வத்தை வழிபடவும்.

**துலாம்:** பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். இலாபம் பன்மடங்கு உயரும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். தொழில், வியாபார வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். வருமானம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** மனம் வருந்தும் வகையில் சிலர் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைக் கைவிடுவது நல்லது. க்ண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**மகரம்:** சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை உருவாகும். ஆதாயம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**கும்பம்:** வெகுநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். புதிய சொத்து வாங்க யோகமுண்டாகும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** செயல்களில் திறமை வெளிப்படும். தொழிலில் எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பெண்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு நல்ல முறையில் கிடைக்கும்.

# நான்கு பாகங்களை தொடும் அவதார்




ஜேம்ஸ் கேம்ரூன் இயக்கத்தில் 2009 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் அவதார். பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலக அளவில் அதிக வசூல் செய்த படமாக இன்று வரை நிலைத்துள்ளது. அவதார் அள்ளிய வசூலை இதுவரை வேறு எந்தப் படத்தாலும் முறியடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் அவதார் படம் மேலும் 4 பாகங்களாக வெளியாகும் என அந்தப் படத்தின் இயக்குநர் ஜேம்ஸ் கேம்ரூன் தெரிவித்துள்ளார். அவதார் படத்தின் இரண்டாம் பாகம், 2018 கிறிஸ்துமஸ் தினத்திலும், அதேபோல அடுத்தடுத்தப் பாகங்களை 2020, 2022, 2023 ஆகிய வருடங்களில் வெளியிடவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக நான்கு முன்னணி திரைக்கதையாசிரியர்களுடன் இணைந்து அவதார் படத்தின் கதை தொடர்பாகப் பணியாற்றி வருகிறேன். நான் காணும் கலை என்பது, துல்லியமான கற்பனை உலகம். வரவிருக்கும் பாகங்கள் முதல் பாகத்தை விடவும் சிறப்பாக அமையும். மிகச்சிறந்த காவியமாக உருவாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது அவதார் இரண்டாம் பாகத்துக்கான படப்பிடிப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. படத்தின் சில காட்சிகள் ஆள் கடலில் எடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காஸ்ட்லி போனை அடுத்தவன்கிட்ட குடுத்து, போட்டோ எடுக்க பயந்த எவனோ ஒருத்தன்தான், இந்த \'SELFIE\' யை கண்டுபுடிச்சிருக்கனும் !!



வீடு வாங்கி இருக்கிறேன்.. கார் வாங்கி இருக்கிறேன் என்று சொல்லுகிறார்கள்.
ஆனா, அதை கடனுக்கு தான் வாங்கி இருக்கிறேன் என்று ஒருத்தரும் சொல்லமாட்டான்

மண்ணை தொடாமல்
மரத்தை தொடாமல்
தண்ணீரை தொடாமல்



உலகிலேயே அதிசயமாக
மரகன்றை நட்டார்

*கம்பர் காலத்தில் மாநகராட்சி*
*பொதுக் கழிவறைகள்*
*இருந்திருந்தால்*
*"காலைக்கடன் பட்டார்*
*நெஞ்சம் போல் கலங்கி நின்றான்*
*இலங்கைவேந்தன்" எழுதியிருப்பார்.*

படித்ததில் பிடித்தது

**"என்னங்க" என்பது வார்த்தையல்ல,**
**அது ஆண்களின் "வாழ்க்கை".!**

கணவனை "என்னங்க" என்று மனைவி அழைத்தால், அந்த வார்த்தையில் பல அர்த்தங்கள் அடங்கும்.

வீட்டு வாசலில் நின்று நண்பனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது "என்னங்க" என்று அழைப்பு வந்தால் "மரியாதையாக உள்ள வாறியா இல்லை கதவை சாத்தட்டா" என்று அர்த்தம்.

கல்யாண வீட்டில் "என்னங்க" என்று சத்தம் கேட்டால் "என் சொந்தக்காரர்கள் வந்திருக்கிறார்கள், சீக்கிரம் வாங்க" என்று அர்த்தம்.

ஹோட்டலில் சாப்பிட்டு முடித்த பின் "என்னங்க" என்று அழைப்பு வந்தால் "சீக்கிரம் பில்லை செலுத்தி விட்டு வா" என்று அர்த்தம்.

இருவரும் பைக்கில் போகும் போது "என்னங்க" என்று அழைப்பு வந்தால் "கடை வருகுது, வண்டிய நிறுத்து" என்று அர்த்தம்.

உடுப்புக் கடையில் நின்று "என்னங்க" என்று அழைப்பு கேட்டால் "நான் தேடின புடைவை கிடைத்து விட்டுது. பில் போடணும் உடனே வாங்க" என்று அர்த்தம்.

வீட்டில் பீரோ முன் நின்றுகொண்டு "என்னங்க" என்று மனைவி ஆசை யோடு அழைத்தால் "இன்று உனக்கு பணச்செலவு செய்யப்போறா" என்றுஅர்த்தம்.

மதியம் "என்னங்க" என்று அழைப்பு வந்தால் "சோறு போட்டாச்சு. வந்து வயிறு நிறைய கொட்டிக்கோ" என்று அர்த்தம்.

பக்கத்து வீட்டு சண்டையில் நாம தலையிடும் போது "என்னங்க" என்று மனைவியின் சத்தம் வேகமாக கேட்டால் "உன் வேலைய பார்த்துக்க. தேவையில்லாத பிரச்சினையில் மூக்கை நுழைக்காதே" என்று அர்த்தம்.

இரவு தூங்குவதற்கு முன் ''என்னங்க'' என்று அழைப்பு வந்தால் ''மொபைல்ல நோண்டியது போதும். மரியாதையாக [illegible] விட்டு தூங்கு" என்று அர்த்தம்.

இப்படி பல அர்த்தங்களை உள்ளடக்கி கொண்டது தான் "என்னங்க".

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | | | | |
| | 2 | | 9 | | 4 | | | 8 |
| 5 | | | | | 3 | 4 | | |
| | | | | | | 6 | | 7 |
| 7 | 9 | 1 | | 6 | | 8 | 5 | 4 |
| 3 | | 8 | | | | | | |
| | | 9 | 2 | | | | | 3 |
| 8 | | | 6 | | 5 | | 2 | |
| | | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 5 | 7 | 2 | 9 | 6 | 8 | 1 |
| 8 | 9 | 6 | 1 | 4 | 5 | 3 | 7 | 2 |
| 2 | 7 | 1 | 6 | 8 | 3 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 9 | 5 | 6 | 2 | 7 | 1 | 8 |
| 5 | 8 | 7 | 9 | 3 | 1 | 4 | 2 | 6 |
| 1 | 6 | 2 | 4 | 7 | 8 | 5 | 9 | 3 |
| 7 | 1 | 3 | 8 | 5 | 4 | 2 | 6 | 9 |
| 9 | 5 | 4 | 2 | 1 | 6 | 8 | 3 | 7 |
| 6 | 2 | 8 | 3 | 9 | 7 | 1 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 750 | 800 | 500 | 800 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 400 | 200 | – |
| கணவாய் | 600 | 650 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 600 | – |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | – | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 500 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 450 | 500 | 400 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 600 | 400 | – |
| ஒரா | 400 | 350 | – | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 250 | 200 | 250 | 400 | 200 | 300 |
| நகரை | 250 | 250 | – | 300 | 350 | 300 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 350 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 170 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 350 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 50 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 500 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | 300 | – |

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 50 | 60 | 50 | 60 | 20 | 50 |
| கத்தரி | 80 | 60 | 80 | 60 | 50 | 40 | 40 | 30 |
| கரட் | 100 | 100 | 80–200 | 120 | 70 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 120 | 60 | 40 | 70 | 40 |
| பாகல் | 100 | 120 | 100 | 120 | 100 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | – | 70 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 90 | 100 | 60 | 120 | 100 | 60 |
| பூசணி | 50 | 25 | 40 | 40 | 20 | 50 | 15 | 20 |
| தக்காளி | 100 | 70 | 100 | 120 | 80 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 15 | 30 | 20 | 25 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 30 | 20 | .10 |
| பச்சை மிளகாய் | 100 | 140 | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 50 | 40 | 20 | 50 |
| கோவா | 50 | 80 | 70 | 80 | 50 | 100 | 60 | 60 |
| வெண்டி | 100 | 80 | 80 | 80 | 80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 150 | 110 | 120 | 140 | 120 | 120 | 130 | 180 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 140 | 120 | 120 | 110 | 100 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 40–50 | 40 | 20 | 20–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 80 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 300 | 350 | 450 | 300 | 340 | 200 | 300 | 350 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 100 | 120 | 120 | 70 | 40 |
| இராசவள்ளி | 140 | – | 140 | 160 | 140 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300–500 | 300 | 260 | 300 | 300 | 350 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

## முட்டை அல்வா



### தேவையான பொருள்கள்

முட்டை – 1
நெய் – கால் ரம்ளர்
சீனி – கால் ரம்ளர்
ஏலப்பொடி கால் கரண்டி

### செய்முறை

முட்டை, சீனி, நெய் ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொள்ளுங்கள்.
இதை அடுப்பில் வைத்து மிதமான சுவாலையில் கிளறிக் கொண்டே இருந்தால் ஐந்தே நிமிடங்களில் முட்டை அல்வா தயார்.
இறக்கி வைக்கும் சமயம் ஏலப்பொடியைப் போட்டுக் கிளறினால் முட்டையின் வாசனை வராது.
உங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினர்கள் அசைவப் பிரியர்களாக இருந்தால் சில நிமிடங்களில் இதைச் செய்து பரிமாறலாம்!




## வைபை ரவுட்டர்

பொக்கட் வைபை ரவுட்டர் அறிமகமாகியுள்ளது. இதன் மூலம் இணைய இணைப்பை கொண்டு செல்ல முடியும். இணையத் தளச் சாதனங்களையும் இயக்க முடியும். இந்த சாதனம் 8,000 ரூபாவில் இருந்து 9,000 ரூபா ஆகும்.

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!


- தேங்காயை சரிபாதியாக உடைக்க, தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.
- குளிர்ந்த நீரில் சில சொட்டுகள் எலுமிச்சை சாற்றை விட்டு அதில் காய்கறிகளைப் போட்டு வைத்தால் காய்கறிகள் அப்போது பறித்தது போல் புதிதாக இருக்கும்.
- உப்பு வைத்திருக்கும் பாத்திரத்தினுள்ளே ஒரு பிளாஸ்ரிக் பேப்பரை போட்டு அதன் மீது உப்பைக் கொட்டி வையுங்கள். உப்புக்கல் கசியாமல் அப்படியே இருக்கும்.
- குடிக்கும் தண்ணீர் மணமா இருக்கணுமா? வாட்டர் பில்டரில் சிறிதளவு துளசியை போட்டு வையுங்கள்.
- முதல் நாள் சாதம் மீதி இருந்தால் கவலை வேண்டாம். அதை மிக்ஸியில் நன்கு அரைத்து எடுத்து இரண்டு பிடி கடலை மா, பச்சை மிளகாய் துண்டுகள், உப்பு, கறி வேப்பிலை, கொத்தமல்லி, ஒரு கரண்டி தயிர் விட்டு தண்ணீர் சேர்த்து தோசையாக வார்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்.
- சப்பாத்தி எப்போதும் சூடாக இருக்க, அதை சில்வர் பேப்பரில் சுற்றி வைக்கவும்.
- மழைக்காலங்களில் தீப்பெட்டியிலுள்ள குச்சிகள் நமத்து போகாமல் இருக்க பெட்டியினுள் நான்கைந்து அரிசியைப் போட்டு ஒரு டப்பாவில் போட்டு மூடிவிட்டால் குச்சிகள் எளிதில் தீப்பற்றும்.
- உருளைக்கிழங்கு போண்டா செய்வது போல, எல்லா காய்கறிகளையும் ஒன்றாக வதக்கி உருட்டி கடலை மாவில் தேய்த்து எண்ணெயில் பொரித்தெடுக்க வெஜிடபிள் போண்டா செய்யலாம். குழந்தைகள் காய்களையும் சாப்பிட ஒரு சந்தர்ப்பம்.
- தானியம் மற்றும் பயறு வகைகளை எட்டு மணி நேரம் ஊற வைத்து தண்ணீர் வடித்து ஹாட் பேக்கில் போட்டு மூடி மறுநாள் திறந்து பார்த்தால் முளை கட்டிய தானியம் தயார். தானியங்களை முளை கட்டுவதற்கு ஒரு எளிய வழி.
- கோதுமையை நன்கு கழுவி நான்கு மணி நேரம் ஊற வைத்து உலர்த்தி பின் மிஷினில் அரைத்து சப்பாத்தி செய்தால் மிகவும் மிருதுவான சப்பாத்தி கிடைக்கும்.
- சமையலில் உப்பு சற்று கூடுதலா? கவலை வேண்டாம். பால், கிறீம், தயிர் இவற்றில் ஏதோ ஒன்றினைச் சேருங்கள். சரியாகிவிடும்.

### நாளை
### சித்திரை-07

புதன்கிழமை 20.04.2016
திதி: திரயோதசி கா.07.04 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ.04.47 வரை
ராகுகாலம்: 12.02-01.32 வரை
சுபநேரம்: 04.32-06.02 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்



## ரோபோ கைபேசி

இலத்திரனியல் சாதனங்களின் வடிவமைப்பில் பெயர் பெற்ற நிறுவனங்களுள் ஒன்றான ஷார்ப் புதிய வகை தொடுதிரைக்கைபேசி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

முற்றிலும் ரோபோவைப் போன்ற தோற்றம் கொண்ட இந்தக் கைபேசியானது நடக்கக் கூடியதாகவும், குறுஞ் செய்திகளை வாசிக்கக் கூடியதாகவும், அழைப்புக்களை ஏற்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படும் இந்த ரோபோ கைபேசியானது 2 அங்குல அளவுடைய திரையைக் கொண்டுள்ளது.

அது தவிர வீடியோ, புகைப்படங்களைப் பெரிதாக்கிக்காண்பிக்கக்கூடிய புரொஜெக்டரையும் கொண்டுள்ளது.



## ஒளிக்கற்றையூடு இணையம்

நவீன தொழில்நுட்பத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொண்டுள்ள கூகுள் நிறுவனம் மேலும் பல ஆராய்ச்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றது.

இந்த நிறுவனமானது கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் பைபர் புரோட்பேண்ட் சேவையை அமெரிக்காவின் தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் அறிமுகம் செய்திருந்தது.

அதனைத் தொடர்ந்து தற்போது கூகுள் லூன் எனப்படும் பலூன் மூலமான இணைய இணைப்பை வழங்கும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில் மற்றுமொரு திட்டத்தில் ஆர்வம் காட்டி வருகின்றது.

அதாவது ஒளிக் கற்றையினூடாக வயர்லெஸ் முறையில் ஒவ்வொரு வீடுகளுக்கும் அதி வேக இணைய இணைப்பை வழங்குவதாகும்.

இது தொடர்பான தகவலை கூகுளின் அக்செஸ் தலைமை அதிகாரி உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளதுடன், இவ் இணைய வேகமானது 1ரிபிபிஎஸ் இலும் அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு ஸ்மார்ட் கைத்தொலைபேசியிலும் இப்போது டயலொக் தொலைக்காட்சி சேவை




எந்த நேரத்திலும் எங்கிருந்தவாறும் எந்தவொரு கைத்தொலைபேசி வலையமைப்பின் ஊடாகவும் டயலொக் தொலைக்காட்சி அலைவரிசைகளைக் கண்டு களிக்கும் வசதிஇலங்கையின் முதன்மையான, கட்டணம் செலுத்தும் டிஜிட்டல் தொலைக்காட்சி அலைவரிசையாகத் திகழும் டயலொக் டெலிவிசன் ஆனது Dialog TV GO என்ற கையடக்கத் தொலைபேசி பிரயோக மென்பொருளை அறிமுகப்படுத்தியதன் மூலம் தன்னுடைய சேவை வழங்கலில் திடீரென பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.

டயலொக் டெலிவிசன் வாடிக்கையாளர்கள் தமது ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி மிகச் சிறந்த தரத்திலான களிப்பூட்டல் அலைவரிசைகளைக்கண்டு களிக்கக் கூடிய வசதிவாய்ப்பை இந்த மொபைல் பிரயோக மென்பொருள் வழங்குகின்றது.


Dialog TV GO சேவையானது எவ்வேளையிலும் எந்த இடத்தில் இருந்தாலும் களிப்பூட்டலை வழங்கும். அதன்படி வாடிக்கையாளர்கள் தமது கையிலுள்ள ஸ்மார்ட் தொடர்பு சாதனங்களின் ஊடாக 42 சர்வதேச அலைவரிசைகள் மற்றும் உள்நாட்டு அலைவரிசைகளை பார்க்கக் கூடியதாக இருக்கும்.

இந்தப் பிரயோக மென்பொருளில் உள்ளடங்கியுள்ள அலைவரிசைகள், குறித்த வாடிக்கையாளர் தற்போது பயன்படுத்துகின்ற டயலொக் டெலிவிசன் இணைப்புப் பொதியுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கும் வேளையில், நேரடித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கக் கூடிய ஒரு வசதியை இந்த மொபைல் பிரயோக மென்பொருள் அதன் பயன்படுத்துனர்களுக்கு வழங்கும்.

Dialog TV GO ஆனது டயலொக் டெலிவிசன் சந்தாவாடிக்கையாளர்களுக்கே பிரத்தியேகமாகக் கிடைக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

ஆனாலும், இலங்கையிலுள்ள எந்தவொரு கையடக்கத் தொலைபேசி வலையமைப்பில் இருந்தும் இச் சேவையை அணுகிப் பெற்றுக் கொள்ள முடியும். Dialog TV GO பிரயோக மென்பொருளை, அனைத்து அன்ட்ரோயிட் மற்றும் ஐ.ஓ.எஸ் தொழில்நுட்பத்தைக் கொண்ட தொடர்பு சாதனங்களின் மூலம் அணுகிப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் அதேவேளை, டயலொக் டெலிவிசன் வாடிக்கையாளர்கள் அனைவரும் தமது டயலொக் தொலைக்காட்சிக் கணக்குடன் 2 வரையான ஸ்மார்ட் தொடர்பு சாதனங்களைத் தொடர்புபடுத்தி இணைத்து வைத்திருக்க முடியும். Dialog TV GO மென்பொருள் அனைத்து டயலொக் டெலிவிசன் வாடிக்கையாளர்களுக்கும் அவர்களுடைய வழக்கமான இணைப்புப் பொதிக்கு அமைவாக இலவசமாகக் கிடைக்கின்றது. (து)

# முன்னணி மோட்டார் தொழில்நுட்பக் கண்காட்சி மூலம் தொழிற்துறையில் புரட்சி செய்யும் டொயோடா லங்கா



மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பில் 2016 மார்ச் மாதம் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் மையத்தில் Future World கண்காட்சியை டொயோடா லங்கா முன்னெடுத்திருந்தது. நாட்டில் முன்னெடுக்கப்படும் முதலாவது பரிபூரண மோட்டார் தொழில்நுட்பக் கண்காட்சியாக இது அமைந்திருந்ததுடன், டொயோடா தொழில்நுட்பம் தொடர்பில் சகல வாடிக்கையாளர்கள் மற்றும் வாகனப் பிரியர்களுக்குச் சகல விதமான விவரங்களையும் பெற்றுக் கொள்வதற்கு உதவியாகவும் அமைந்திருந்தது. விருந்தினர்களைப் பல மணிநேரம் பரவசத்தில் ஆழ்த்தும் வகையில் இலத்திரனியல் நேரடி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆர்வமுள்ள நபர்கள் இலவசமாகத் தம்மை ஒன்லைனில் பதிவு செய்து கொள்ள முடியும் என்பதுடன், அன்பளிப்புகள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் பொருள்கள் மீது விலைக்கழிவுகள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டனர். இரு நாள் கண்காட்சியின் போது, பன்முகப்படுத்தப்பட்ட விடயங்கள், எதிர்கால தொழில்நுட்பம் மற்றும் சூழல் பாதுகாப்பான ஹைபிரிட் தொழில்நுட்பம் போன்ற டொயோடா என்ஜினியரிங் தொடர்பான அம்சங்கள் காண்பிக்கப்பட்டன.

இவற்றின் மூலமாக டொயோடா வாகனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய உச்ச பயன்பாடு பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. அடுத்த சில மாதங்களில் இலங்கையின் வெவ்வேறான 6 பிரதேசங்களுக்கு Future World பயணிக்கவுள்ளது.

டொயோடாவின் புதுமையான அனுபவத்தை வழங்கும் Future World கண்காட்சிக்கு மக்கள் வரவேற்கப்பட்டிருந்தனர். டொயோடா லங்கா துறையில் எப்போதும் ஒரு படி முன்னிலையில் திகழ்வதுடன், இலங்கையின் கார் பிரியர்கள் மத்தியில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள ஒரு வர்த்தக நாமமாக உயர்ந்துள்ளது.

டொயோடா வாகனங்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்படும் அலங்காரங்கள் மற்றும் காண்பிக்கப்படும் அர்ப்பணிப்புக்கள் தொடர்பில் மக்களுக்கு அறியத்தரும் டொயோடா லங்காவின் வெளிப்பாடாக Future World அமைந்துள்ளது.

இந்தக் கண்காட்சியின் வெற்றியானது தொடர்பில் எமக்கு ஏற்கனவே பெருமளவு வரவேற்புக் கிடைத்துள்ளது. வாகனப் பிரியர்களை Future World கண்காட்சிக்கு வருகை தருமாறு நாம் அழைக்கிறோம். பார்வையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் டொயோடா ஊழியர்கள் தயார் நிலையில் இருந்ததுடன், டொயோடா தொழில்நுட்பத்தை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்வதற்கு உதவும் வகையில் அமைந்திருந்தது.

வணிகம்

Future World இன் அலங்காரம் மற்றும் வடிவமைப்பு ஆகியன சர்வதேச மோட்டார் தொழில்நுட்பத்துக்கமைய அமைந்துள்ளதுடன், விருந்தினர்களை ஈடுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. டொயோடா ஒன்றை செலுத்துவதற்கு இது போதுமானதாக இருக்காது என நாம் கருதுகிறோம்.

தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் ஏன் டொயோடா வாகனம் ஒன்றை தெரிவு செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

டொயோடா தொழில்நுட்பத்தின் பின்புலத்தில் அமைந்துள்ள விஞ்ஞான ரீதியான செயற்பாடுகளைப் புரிந்து கொள்வதன் மூலமாக அதிகளவு அறிவுடன் கூடிய கொள்வனவு தீர்மானத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். Future World இல் இரு நவீன டொயோடா மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டன. இது வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கண்காட்சியாக அமைந்திருந்தது.

பெருமளவான சந்தர்ப்பங்களில், பெருமளவான வாகன கொள்வனவாளர்கள், வாகனங்கள் பற்றிய பொதுவான உள்ளம்சங்கள் பற்றிக் கேட்டுத் தமது தீர்மானத்தை மேற்கொள்கின்றனர். குறித்த என்ஜின் அல்லது தொழில்நுட்பம் பற்றி பெருமளவு கவனம் செலுத்துவதில்லை. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரிகள்

'நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை 6 மாத காலத்தினுள் மீளக் குடியமர்த்துவேன் என்று வாக்குறுதி வழங்கிவிட்டேன். அதனை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் அதிக சிரத்தை எடுத்துச் செயற்பட வேண்டும்' என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்ததாக, கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் 8 மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் கலந்துகொண்ட கூட்டம் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இதில், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா, அமைச்சர் ஜோன் செனவிரட்ண மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், ஜனாதிபதியின் செயலாளர், முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மீள்குடியமர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட செயலணியின் மூன்றாவது கூட்டத் தொடரான நேற்றைய தினம், ஜனாதிபதி கடந்த இரண்டு கூட்டங்களில் சொல்லப்பட்ட விடயங்களை மீளாய்வு செய்தார்.

ஒவ்வொரு மாவட்ட அரச அதிபர்களும் தமது மாவட்டப் புள்ளி விவரங்களைச் சமர்ப்பித்தனர். பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகள் எவ்வளவு, அதில் பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்பு தேவைக்கு வைத்திருக்கும் காணி எவ்வளவு ? அதன் காரணமாக எவ்வளவு மக்கள் இடம்பெயர்ந்து எங்கிருக்கின்றனர், நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களின் காணிகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன, உடனடியாக விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

இதன் பின்னர் மாகாண ரீதியாக தொகுக்கப்பட்ட விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். இந்த விவரங்கள் தயாராக இருக்கவில்லை. இதனால் ஜனாதிபதி அதிகாரிகளிடத்தில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். கடந்த கூட்டங்களின்போது, இந்த விவரங்களைத் தயார்படுத்துமாறு கூறியதை அதிகாரிகள் செயற்படுத்தவில்லை என்று ஜனாதிபதி அதிகாரிகளைக் கடிந்து கொண்டுள்ளார்.

மக்களை 6 மாத காலத்தினுள் மீளக் குடியமர்த்துவதாக வாக்குறுதி வழங்கி விட்டேன். அதனைச் செயற்படுத்த அதிகாரிகள் அதிக சிரத்தை எடுக்க வேண்டும்.

'காணிகள் தொடர்பிலான முழு விவரங்களையும் நான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எனவே அதனை பொதுவான ஒழுங்கில் திரட்டுவதற்காக விண்ணப்பப்படிவம் நாளை (இன்று) அனுப்பி வைக்கப்படும். அதனை சகல மாவட்டச் செயலர்களும் பூரணப்படுத்தி உடனடியாக அனுப்ப வேண்டும். 28 ஆம் திகதி இடம்பெறும் அடுத்த கூட்டத்துக்கு சகல விடயங்களும் தயாராக இருக்க வேண்டும்' என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த கூட்டங்களின்போது, வடக்கு - கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட வேண்டிய இடங்கள் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தேன். அந்த அறிக்கையும் வழங்கப்படவில்லை என்று ஜனாதிபதி இதன்போது சாடியுள்ளார். அடுத்த கூட்டத்தில் அந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண் டும் என்று பணித்துள்ளார். (த-வ-5-10ʃ)

## கரந்தாயில்

யில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில், தென்னை பயிர்ச்செய் கைச் சபையினர், மக்கள் வசித்து வந்த காணிகள் தமக்குச் சொந்தமானவை என்று தெரிவித்து அங்கிருந்த மக்களை வெளியேற்றியதுடன், அவர்களது வீடுகளையும் இடித்தழித்தனர்.

இதன் பின்னர் அந்தக் காணிகளுக்குள் மீளவும் குடியமர முற்பட்ட மக்களை, அத்துமீறி தமது காணிகளுக்குள் பிரவேசித்ததாகத் தெரிவித்து பொலிஸார் ஊடாக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இருப்பினும் மக்கள் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறானதொரு நிலையில் ஜனவரி - பெப்ரவரி மாதங்களில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில், இந்த விடயம் ஆராயப்பட்டது. இதன் போது, அந்தக் காணிகளில் வாழ்ந்த மக்களுக்கே அவை திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைமைகளினால் எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினர், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும், இந்தக் காணிகளில் தாம் முதலீடு செய்துள்ளதால், அந்த மக்களுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தனர். ஆனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமைகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

மக்களை அந்தக் காணிகளில் மீள்குடியமர்த்தவேண்டும் என்ற தீர்மானம் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அந்தக் காணிகளில் குடியிருந்த மக்களை அழைத்துக்கொண்டு, அந்தப் பகுதியினுள் நேற்றுக் காலை பிரவே சித்திருந்தார்.

மக்களைக் காணிகளின் வேலிகளை அடைத்து நட வடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்திருந்தார். இதற்கமைய மக்கள் வேலைகள் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த பளைப் பொலிஸார் இவற்றை உடனடியாக நிறுத்துமாறு தெரிவித்தனர்.

பொலிஸாரின் கருத்தைக் கேட்காமல் மக்கள் தமது வேலைகளைத் தொடர்ந்தனர். இதன்போது பொலிஸ் அதிகாரிகள், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் அதிகாரிகளையும் அழைத்து கலந்துரையாடல் நடத்தினர்.

இந்தக் காணிகளை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் தாம் முடிவெடுக்க முடியாது என்றும், சபையின் பிராந்திய முகாமையாளரே முடிவெடுக்க முடியும் என்று தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் அதிகாரி தெரிவித் துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார், அரச அதிபர் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து இரண்டு வாரங்களினுள் பிரச்சினையைத் தீர்ப்பதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து மக்கள் அந்தக் காணிகளிலிருந்து தற்காலிகமாக வெளியேறினர். (த-வ-5-ரி3)

## விடுவித்த

யின் ஊடாகப் பிரவேசிக்கும் போது, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலிருந்து 200 மீற்றர் தூரத் திலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியைத் தாண்டியே உள்நுழைய முடியும்.

இந்த இராணுவச் சோதனைச் சாவடி இன்னமும் அகற்றப்படாத நிலையிலேயே உள்ளது. இதனால் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை மீள ஆரம்பிப்பதில் தடங்கல் நிலை காணப்படுகின்றது. நடேஸ்வராக் கல்லூரிக்கு உள்நுழைவதற்கு ஏதுவாக, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள சோதனைச் சாவடி அகற்றப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் கீரிமலை நகுலேஸ்வரத்தில் 6.4 ஏக்கர் காணி கடற்படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தது. அந்தக் காணி விடுவிக்கப்பட்ட அன்றைய தினம் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டிருந்தனர். அந்தக் காணிகளுக்குப் பிரவேசிக்கும் வாயிலில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த முகாம் இன்னமும் அகற்றப்படவில்லை. இதனால் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குச் செல்வதிலும் பொதுமக்கள் தடங்கல் களை எதிர்கொள்கின்றனர். (த-வ-5-10ʃ)

## மரண அறிவித்தல்கள்

### ஆனந்தலட்சுமி பூபாலசிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, காரைக்காட்டு லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தலட்சுமி 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - கனகம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பூபதி தம்பதியினரின் மருமகளும் கிருபானந்தா, பிரபானந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் கன்னிகா, பிரதீபா ஆகியோரின் மாமியும் கலைஅமுதன், தமிழ்அமுதன், லோகப்பிரியா, துசாந், மிதுலா ஆகியோரின் பேர்த்தியும் விமலநாதன், மங்கையற்கரசி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.04.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18,காரைக்காட்டுலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தவமணிதேவி நவரத்தினம்



தோற்றம் : 21.02.1947
மறைவு :16.04.2016

யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட தவமணிதேவி நவரத்தினம் 16.04.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பகீரதன் மற்றும் பரதன் (லண்டன்), பாலநந்தினி (கொழும்பு), பத்மிலன் (லண்டன்) பிராபாஞ்ஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்வராசா, வேலுப்பிள்ளை, இராசம்மாதேவி, பத்மாதேவி, விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுதாயினி (லண்டன்), வேல்முருகன் (கொழும்பு), சுபாசினி( லண்டன்), காலஞ்சென்ற ஹரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சின்னம்மா மற்றும் செல்வராசா, சபாபதிப்பிள்ளை, தவமணிதேவி, செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆகிஸ், அஸ்மிதா, அபினிஷ், அபிலாஸ், ஆகித்தன், ஆருயன், அக்ஸ்சிதா, அக்ஷ்சரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2016) புதன்கிழமை மு.ப. 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: நவரத்தினம்(இலங்கை)+94115789137,
[illegible] 4849
பரதன்- பிரித்தானியா- +447 512714508
பத்மிலன்- பிரித்தானியா- + 447512703654'
பிராபாஞ்ஜினி- பிரான்ஸ் - +3360 571 4184

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லக்ஷ்மி இராமலிங்கம்

அன்னை மடியில்
09 . 12 . 1930



இறைவன் அடியில்
18 . 04 . 2016

பண்டத்தரிப்பு, செட்டிக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும், நல்லூர், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லக்ஷ்மி இராமலிங்கம் நேற்று (18.04.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கைலாசபிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவும், மனேஜருமான காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அமுதவல்லி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்புச் சகோதரியும்,ஸ்ரீதேவி, கௌசலாதேவி, சறோஜினிதேவி, ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானரெட்ணம், விக்னராஜா, காலஞ்சென்ற குமரகுருநாதன் மற்றும் அருட் சோதிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிலன், தாரணி, குகநேசன், அனுஷா, தீனதயாளன், கவிந்த பெரேரா, இரட்ணகலா, பவித்திரா, ஹேமபிரணவன், மாதங்கி, வேழவிநாயகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காவ்யா, ஹன்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

278, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஜே/451)
(11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 6189

### எட்வேட் பிலோமினா



மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், இல. 68, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் பிலோமினா நேற்று (18.04.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுரு எட்வேட்டின் ( ஆயுர்வேத வைத்தியர்) மனைவியும், எ.விக்ரர், எ.கருணாகரன், எ.சுதர்சன், எ.கிருபாகரன், பீ.ஜெயந்தி ஆகியோரின் தாயாரும், இ.பீற்றர் (தூதி உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), வி.ஜனிதா விளோறி, க.விஜி, சு.அனித்தா, கி.கோப்பெருந்தேவி ஆகியோரின் மாமியாரும், வி.டிலக்சன், வி.விநுறா, பீ.அன்ரனி பேதுருஷன், பீ.லூட்ஸ்கிளாரா, பீ.டயஸ் அனோல்ட், கி.கிளைவ், கி.யுவான், சு.ஆர்த்திகன், சு.ஜெனீபர், க.சுரேகா, க.தானியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.04.2016) செவ்வாய்க்கிழமை இலக்கம் 68, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் லூர்து அன்னை தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழிபாட்டின் பின்பு மட்டுவில் லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.68, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(ஜே/454)
(11,18)

தகவல்: எ.விக்ரர் (மகன்),
இ.பீற்றர் (மருமகன்)
(போதனா வைத்தியசாலை -
யாழ்ப்பாணம்.

021 222 8994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED

A leading Construction company is seeking highly motivated and skilled individuals for a Project team.

1. **Quantity Surveyor**
   *Required Qualifications:* Bachelors in Quantity Surveying- with minimum three years experience in contract claim management. Strong technical back ground would be a big plus, Leadership and Interpersonal skills, who can work independently with little supervision and assistance and willing to travel as required.
2. **Assistant Quantity Surveyor**
   *Required Qualifications:* HND/NCT Quantity surveying with five years experience in Contract claim management is essential.
3. **Draughtsman**
   *Required Qualifications:* NCT- Draughtsmanship with five years hands-on experience in Auto CAD is essential. Experience in Surveying is added qualification.

Interested applicants may drop in their applications along with resume by post to:

**Advertiser,**
**45, Forest Office Lane, Jaffna.** (C/21210) (10.17)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராசரத்தினம் அன்னலட்சுமி**

தோற்றம் 23 . 08 . 1941
மறைவு 23 . 04 . 2013

ஆண்டுகள் மூன்று போனாலும்
ஆறவில்லை எமது துயரம்
தாங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(J 473)(10)

41, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 15 . 01 . 1945



மறைவு 19 . 04 . 2003

திதி: திருதியை - 25.04.2016

அமரர் திருமதி **கந்தசாமி சிவநாயகி (கிளி)**
**(திருநெல்வேலி கிழக்கு)**

அன்போடு அரவணைத்து பண்போடு எமை வளர்த்த
அன்புத் தெய்வமே! ஆலம் விழுதுகள் போல் ஆயிரம்
உறவுகள் இருந்தென்ன அம்மா என்று அழைக்க நீங்கள் இல்லையே!

**உங்கள் ஆத்ம சாந்திக்காக வெள்ளைப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.**

20, முதலாம் ஒழுங்கை,
சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
எஸ்.சாம்பவி, எஸ்.சாகித்தியன்,
எஸ்.பானுஷா

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**நாகரட்ணம் பிரேமதாஸ்**

தோற்றம் 17.06.1964

மறைவு 20.03.2016

கடந்த 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.04.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் வீதி,
மல்வம், உடுவில்.

மகன்
ஜனோஜன் (பிரான்ஸ்)

## மக்களுக்கு

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன.

மலர்ந்த தமிழ் - சிங்கள புதுவருடத்துக்காக, புலத்திசிபுர மக்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்கு நேற்று முற்பகல் பொலன்னறுவை புத்தி மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி தனது உரையில்,

வற் வரி திருத்தத்துக்கு அரசு தயாராவதாக அண்மையில் சில ஊடகங்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டிருந்தன. நாட்டின் ஏழை மக்களுக்கு இன்னல் தரும் எந்த விதமான வரி அதிகரிப்புக்கும் நான் இடமளிக்கப் போவதில்லை.

பொதுமக்களின் அரசு என்ற ரீதியில், பொதுமக்களுக்குக் கூடுதலான பொருளாதார நன்மைகளை வழங்கி அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தற்போதைய அரசின் கொள்கையாகும். மக்கள்நேய அரசு என்ற வகையில் முன்னோக்கிப் பயணித்த அரசு தொடர்ந்தும் முன்னோக்கிப் பயணிக்குமே தவிர, பின்னோக்கிப் பயணம் செய்யாது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற மாற்றத்தைத் தொடர்ந்து ஊழல், மோசடி, திருட்டு, சர்வாதிகாரம் போன்ற குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, மக்கள்நேய அரசு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

ஊழல், மோசடி, சண்டித்தனம், சர்வாதிகாரம் மற்றும் குடும்ப ஆட்சி என்பன காரணமாக நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச்சென்ற சக்திகள் மீண்டும் ஆட்சி செய்வதற்கு இடமளிக்காது, நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு உயர்ந்தபட்ச அர்ப்பணிப்பினை மேற்கொள்வேன்.

இந்த நாட்டைச் சிறந்த மற்றும் அபிவிருத்தி அடைந்த ஒரு நாடாக முன்னேற்றுவதற்குப் புதிய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இந்தவேளையில் தோல்வியடைந்த ஒரு சில அரசியல் சக்திகள் இன்னோரன்ன போலி முகங்களுடன் களத்தில் குதித்துள்ளன.

இந்தப் போலி முகங்களை என்னால் தெளிவாக இனங்காண முடிகின்றது. அரசியல் மன நோயாளர்களின் கூற்றுக்கள் மற்றும் பொய்ப் பரப்புரைகள் அரசின் பயணத்துக்குத் தடையாக அமையாது - என்றார். (த-வ-5)

# பதவி வெற்றிடம்

எமது அமெரிக்க DMI நிறுவனம் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்க இருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள், யுவதிகள் தேவை.

பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும், வெளிநாட்டு வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.

* வயதெல்லை 18-30
* அனுபவம் அவசியமற்றது
* தங்குமிட வசதிகள் உண்டு

இன்றே அழையுங்கள் : 077 5566224, 077 2302795

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர்
ஐ.சிவானந்தராஜா அவர்களின்
தந்தையார்
**சின்னப்பா ஐயாத்துரை**
அவர்கள் காலமானதையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையின் மலேரியா தடைப் பிரிவினுடைய பொது சுகாதாரப் பரிசோதகர்

**குணசிங்கம் கருணாநிதி**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.** (C/21209)(10)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஓராண்டு நினைவில்

**தர்மலிங்கம் விஜயகுமார் (சங்கர்)**

மண்ணுலகில் **1969.03.09**
விண்ணுலகில் **2015.05.02**

திதி: சதுர்த்தசி (20.04.2014)



பாசம் மிக்க மகனாக
அன்பு நிறைந்த கணவராக
வழிகாட்டிய தந்தையாக
வாழவைத்த சகோதரனாக
மதிப்பு மிக்க உறவினனாக
மரியாதைக்குரிய நண்பனாக
எல்லோருக்கும் எல்லாமுமாய்
வாழ்ந்த எங்கள்
குலவிளக்கே......
புன்னகைக்கும் உந்தன்
வதன முகமும்
கலகலப்பான உந்தன்
சிரிப்பொலியும்
பார்க்காமலேயே கேட்காமலேயே
இன்றைய நாள்கள்
இருள் படிந்து நகர்கின்றன......
காலநதிக் கரையில்
நகரும் வாழ்க்கைப்
பயணத்தில் எல்லாம்
கடந்து போகும்
என்பதுவும்
இணைவதும் பிரிவதும்
[illegible]
[illegible]
மெய் உணர மறுக்கின்றது

" எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு " எனும்
கிருஷ்ணரின் வரிகளை
தத்துவமாய்ச்
சொன்னாலும்
நேற்றைய நாள்களில் எம்
கூட நடந்தவரே
நாளைய எங்கள் பயணத்திலும்
நீங்கள் நம்பிக்கையாய்
இருப்பீர்கள்

நாளை (20.04.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

( இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும் )
என்றும் உங்கள் நினைவைச் சுமந்து வாழும்
**குடும்பத்தினர்.**

"அன்னை இல்லம்", 15/16, நடுத்தெருலேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

## புதிய

பூஜித் ஜெயசுந்தரவை நியமிப்பதற்குபரிந்துரைக்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்கு, பிரதி பொலிஸ்மா அதிபர்களான எஸ்.எம்.விக்கிரமசிங்க, பூஜித் ஜெயசுந்தர மற்றும் சந்தன விக்கிரமரத்ன ஆகிய மூவரில் ஒருவரது பெயரைப் பரிந்துரைக்குமாறு அரசமைப்புச் சபையிடம் ஜனாதிபதி கேட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்று மாலை மூவரையும், நேர்காணல் நடத்திய அரசமைப்புச் சபை, பூஜித் ஜெயசுந்தரவைப் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்குமாறு, ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்துள்ளது. (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 பில்லியன் டொலர் கடன் கோருகிறது இலங்கை அரசு

## குற்றஞ்சாட்டுகின்றது முன்னிலை சோசலிசக் கட்சி

யாழ்ப்பாணம், ஏப்.19

சர்வதேச நாணய நிதியத்திடம் ஏற்கனவே கோரியிருந்த 1.2 பில்லியன் டொலர் கடனுக்கு மேலதிகமாக 3 பில்லியன் டொலர் கடனை இலங்கை அரசு கோரியுள்ளது என்று முன்னிலைசோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் துறைப் பொறுப்பாளர் புபுது ஜயகொட கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் 1.2 பில்லியன் டொலரைக் கடனாகக்கோரியிருந்தது. இது தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்திருந்தனர். இதன் போது இலங்கை அரசு, 1.2 பில்லியனுக்கு மேலதிகமாக 3 பில்லியன் நிதி வழங்குமாறு கோரியுள்ளது.

இந்தக் கடன் தொகையை வழங்குவதற்கு 5 அம்சக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் உள் நாட்டு வருமானத்தை தற்போதைய நிலையில் பேணுதல், வரி அறவிடலில் மாற்றத்தைக் கொண்டு வருதல், வற் வரி அறவிட்ட துறைகளை அதிகரிக்க வேண்டும், பொருளாதாரத் திட்டங்களை சரிவர நடைமுறைப் படுத்த வேண்டும், வழங்கப்படும் கடன் களை உரிய முறையில் மீள வழங்க உரிய வகைகளைப் பேண வேண்டும் என்பனவே அந்தக் கோரிக்கைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

வரவு - செலவுத் திட்டத்தில் வருமானத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக மக்களுக்கான சலுகைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதற்காகக் கல்வி, போக்குவரத்து, விவசாயம், நெடுஞ்சாலை, சுகாதாரம் போன்ற அமைச்சுகளின் செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்களுக்கே பாதிப்பு.அரசு, தான் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற் படுகின்றது. ஆட்சிக்கு வரும் போது நாட்டுக்கு வருமானம் கிடைக்கும் வழி முறைகளைச் செய்வோம் என்று கூறியிருந்தது. ஆனால் இப் போது அவற்றை மறந்து தன் னிச்சையாகச் செயற்படுகின்றது- என்று குறிப்பிட்டுள்ளார். (ந-ஐ-5)

---

## வடக்கில்

சாலைகளிலும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைக்கு என்று தேர்தல் ஒன்றை நடத்த நான் நடவடிக்கை எடுத்தேன். இதனால்தான் அவர்கள் மனதில்பட்ட கருத்துக்களையெல்லாம் தெரிவிப்பதற்கான சுதந்திரம் கிடைத்திருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளைத்தோற்கடித்தும், அங்கு புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றியும் வடக்கில் அவர்களுக்கு சுதந்திர நடமாட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தேன்.

அனைத்துவித பௌதிக வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தேன். குறிப்பாக மின்சார வசதி, குடிதண்ணீர் வசதி, வீதிகள், பாடசாலைகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தேன். யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள வசதிகளைப் போன்று இலங்கையில் வேறு வைத்தியசாலைகளில் வசதிகள் இல்லை. அந்த வைத்தியசாலையின் முதலாவது மாடியில் சத்திரசிகிச்சைப் பிரிவுகள், இரத்த வங்கி, ஆய்வுகூடம், எக்ஸ்ரே வசதி ஆகியன அனைத்தும் ஏற்படுத்திக் கொடுத்தேன்.

அந்தக் காலத்தில் வடக்கில் இருந்த வாக்களிப்பு வீதத்தையும், இன்றைய காலத்தில் அங்கு காணப்படுகின்ற வாக்களிப்பு வீதத்தையும் பாருங்கள். சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன்.

இவ்வாறு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதால், அவர்கள் பல்வேறு விதங்களில் எதிர்பார்ப்புக்களை முன்வைத்து வருகிறார்கள். அதனை வழங்குவோம், இதனை வழங்குவோம் என்று கூறிவருகின்ற இன்றைய நிலையில், இவை அனைத்தையும் நாங்கள் பார்த்துக் கொண்டே இருக்கின்றோம் என்றார். (த-வ-5)

## வட மாகாண

வடமத்திய மாகாண சபை, மத்திய மாகாண சபைகளுக்கு 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

இதனடிப்படையில் இந்த மூன்று மாகாண சபைகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் இரண்டரை வருட பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளனர். இதனால் கொழும்பு அரசு வழங்கும் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வடக்கு மாகாண சபையைப் பொறுத்த வரையில், 38 உறுப்பினர்களில் 32 உறுப்பினர்கள் மாத்திரமே இரண்டரை வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளனர். கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், வல்லிபுரம் கமலேஸ்வரன், கந்தையா சிவநேசன், எம்.பி.நடராஜ், சிவக்கொழுந்து அகிலதாஸ், சின்னத்துரை தவராசா ஆகிய 6 உறுப்பினர்களும் இன்னும் இரண்டரை வருடங்களைப் பூர்த்தி செய்யவில்லை.

இரண்டரை வருடங்களைப் பூர்த்தி செய்த 32 உறுப்பினர்களில் 4 பேர் மாத்திரம் இதுவரை விண்ணப்பிக்கவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான த.குருகுலராஜா, பா.டெனீஸ்வரன் மற்றும் ஆளும் கீட்சி உறுப்பினர் கே.சயந்தன் ஆகிய 4 பேருமே இதுவரை விண்ணப்பிக்கவில்லை. எஞ்சிய ஆளும் மற்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்த 28 பேரும், கொழும்பு அரசின் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## 500 அகதிகள்

வரை உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுவதாக பி.பி.சி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து மத்திய தரைக்கடல் ஊடாக, ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகப் பயணித்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதில் இத்தாலி கடலோர காவற்படையினரால், 41 பேர் உயிருடன் காப்பாற்றியுள்ளதுடன், 6 சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த விபத்தில் சிக்கியவர்களில் ஏனையோரை உயிருடன் காப்பாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என இத்தாலி கடலோரக்காவற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தங்களுடன் பயணிக்க ஆரம்பித்தவர்களின் படகு ஒன்று நடுக்கடலில் கவிழ்ந்ததில் ஏராளமானோர் மூழ்கினர் என தப்பித்தவர்கள் பிபிசியிடம் தெரிவித்துள்ளனர்.

தற்போது கிரேக்கத்தின் கலமாட்டா பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள அவர்கள், தாங்கள் லிபியாவிலிருந்து புறப்பட்டனர் எனவும், நடுக்கடலில் ஆள்கடத்தல்காரர்கள் தம்மை வேறொரு படகுக்கு மாறும்படி கூறினர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

அப்படி மாறச்சொன்னப் படகில் ஏற்கனவே 300 அகதிகள் வரை இருந்தனர் எனவும் அவர்கள் கூறு கின்றனர். அந்தப் படகு நள்ளிரவில் கவிழ்ந்தது என மீட்கப் பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அதிகாரிகளால் இந்த உயிரிழப்புகளை உறுதி செய்ய முடியவில்லை.

எனினும் இந்தத் தகவல் உறுதியாகும் பட்சத்தில், இது அகதிகள் நெருக்கடி விவகாரத்தில், நடுக்கடலில் நடந்த துயரச்சம்பவங்களில் மிகவும் மோசமானதாக இருக்கும். இதேவேளை, கடந்த ஒரு வருடத்தில் கிழக்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து அகதிகளாக 10 ஆயிரம் பேர் வரை இத்தாலிக்கு வருகை தந்துள்ளனர் என ஐரோப்பிய தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-வ)

---

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை துரைராஜா

(உரிமையாளர் துரை & Co,ஸ்ரான்லி வீதி.யாழ்ப்பாணம்)

பிறப்பு 27 . 08 . 1936 — இறப்பு 18 . 04 . 2016



யாழ் காரைநகரைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை துரைராஜா 18 .04.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தெய்வானை மற்றும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ராஜலட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும் தயானந்தியின் அன்புத் தந்தையும் யோகநாதனின் அன்பு மாமனாரும் வினுஷன், மோனிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2016 புதன்கிழமை கமால் லேன் இல 03 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது மருமகன் மகாதேவாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல-03 கமால்லேன்,
வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர் மற்றும்
மருமகன் மகாதேவா.
077 654 2001,021 222 9276

## மரண அறிவித்தல்கள்

### நாகர் தம்பிராசா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் தம்பிராசா நேற்று (18.04.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கண வரும், கண்ணன், ரங்கன், யசி, சுதா ஆகியோரின் தந்தையும், விசி, அனிதா, பிரியா ஆகியோரின் மாமனும், கிரிதரன்,டிலக்சன், கீர்த்திகா, குருமேகவன், வர்ணிக்கா, யதுசன் ஆகியோரின் பேரனும், இராசம்மா, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, இராசையா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2016) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணியளவில் நாயன்மார் கட்டிலுள்ள மகனுடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

### சின்னையா செல்லத்துரை



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்லத்துரை நேற்று (18.04.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் (கிளி) அன்புக் கணவரும் பாலசிங்கம், காலஞ்சென்ற பாலகௌரி மற்றும் ஜெயசிங்கம், ஜெயமலர், விஜயபாலா, விஜயமாலா, வசந்தகுமார், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் பபிதா, கவிதா ஆகியோரின் தந்தையும் சண்முகப்பிரியா, கிருபாகரன், கருணாதரன், ராசாத்தி, கருணாகரன், தர்சிகா, சசிகரன், எயுசேபியஸ் (மதி) ஆகியோரின் மாமனும் கீர்த்தன், சயந்தன், லதீபா, காலஞ்சென்ற மயூரதன் மற்றும் நிரோஜன், பிருந்தா , ஜேசு, மிதுசா, டினோஜா, கிருஸ்திகா, லக்ஷன், நிஷான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.3.00 மணியளவில் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 696 9245, 021 221 2156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 19

**அல்ஹிஜிரா வி.க. தொடர்**
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து அல் மாதர் அணிமோதவுள்ளது.

**விக்ரோறி வி.க. தொடர்**
மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சில்வேஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி அணி மோதவுள்ளது.

**அறிவொளி வி.க. தொடர்**
பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை ஏ அணியை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# யாழ். மாவட்ட மட்ட கபடித் தொடரில் பருத்தித்துறை செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ். மாவட்ட பதிவு செய்த பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிரணியினரை எவ்வித புள்ளிகளையும் எடுக்கவிடாமல் வரலாற்றுச் சாதனை படைத்து கிண்ணம் வென்றது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை பிரதேச செயலக அணி சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை புள்ளிகள் எதனையும் பெற விடாது முதல் பாதியில் 23:00 என்ற அடிப் படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் இருந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி விலகியமையை அடுத்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி அபார வெற்றி பெற்றது. (ம-422-108)

# விக்ரோறியா, வளர்மதி அணிகளுக்கு வெற்றி


யாழ்ப்பாணம், ஏப். 19
மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும், புத்தூர் வளர்மதி அணியும் வெற்றிபெற்றன.
யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சோமஸ்கந்தன் அணி மோதிக் கொண்டது. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதிக் கொண்டது. இதில் புத்தூர் வளர்மதி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# ஐ.பி.எல். தொடர் மலிங்க விலகல்

காயம் இன்னும் முழுமையாகக் குணமடையாத காரணத்தினால், வைத்திய நிபுணர்களின் பணிப்புரைக்கு அமைய ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் மலிங்க.
ஆசியக்கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் விளையாடிய பிற்பாடு மலிங்க இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ரி-20 உலகக்கிண்ணத்தில் இருந்து அவர் விலகியதால் பல தரப்புக்களிடமிருந்தும் விமர்சனங்களை வாங்கிக் குவித்திருந்தார். ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றுவதற்காக மலிங்க இந்தியா சென்ற வேளையில் அவர் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் இன்னும் அதிகமாகின. இலங்கைக் கிரிக்கெட்டில் இருந்து அவர் அதிகமான அழுத்தங்களைச் சந்தித்தார். இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவரான சுமதிபாலா, மலிங்க ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றுவதற்கான அனுமதிச் சான்றிதழை வழங்குவதற்கு பல நிபந்தனைகளை விதித்திருந்தார். இவை எல்லாவற்றையும் தாண்டி மலிங்க ஏப்ரல் 16 ஆம் திகதி மும்பை அணியுடன் இணைந்திருந்தார். அங்கு அவரது காயத்தைப் பரிசோதித்த மும்பை அணியின் வைத்திய நிபுணர்கள், காயம் குணமடைய இன்னும் நான்கு மாதங்கள் ஆகும் என்று தெரிவித்ததையடுத்து அவர் தொடரில் இருந்து விலகியுள்ளார்.
இலங்கை கிரிக்கெட் சபை, அவரது காயம் குறித்து பரிசீலனை செய்யவேண்டும் என்று ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் இந்தப் பரிசோதனை இன்று நடைபெறவுள்ளது. இந்தப் பரிசேதனையின் பின்னரே சத்திரசிகிச்சை செய்வதா? வேண்டாமா? என்பது குறித்து முடிவு செய்யப்படும். எந்தவொரு அறிவிப்பையும் வழங்காமல் இந்தியா சென்றமைக்காவும் மலிங்க இன்று விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என்றும் தெரியவருகிறது. (ம)



# கிண்ணத்தைச் சொந்தமாக்கியது மருதநிலா விளையாட்டுக் கழகம்



யாழ்ப்பாணம், ஏப். 19
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்திய கால்பந்தாட்டத்தொடரில் மருதநிலா அணி கிண்ணம் வென்றுள்ளது.
லீக் முறையிலான இந்தத் தொடரின் இறுதியாட்டம் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்றது.
மருதநிலா அணியை எதிர்த்து 786 அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில், மருதநிலா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. சிறந்த கோல் காப்பாளராக 786 விளையாட்டுக் கழகத்தின் மாபத் தெரிவானார். சிறந்த பின்கள வீரராக மருதநிலா அணியின் ஈஸ்வர் தெரிவானார். (ம-23)

# வென்றது ஈஸ்வரன்

யாழ்ப்பாணம், ஏப். 19
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து அல்மதினா அணி மோதிக் கொண்டது. இதில் ஈஸ்வரன் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றது மானிப்பாய் ஏஞ்சல்

யாழ்ப்பாணம், ஏப். 18
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் யுத் விங் அமைப்பு நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி சம்பியனானது.
யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்தது யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 54:52 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. சிறந்த வீரனாக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியின் சஜிந்திரம் தெரிவானனர். (ம-23)


## சம்பியனானது யாழ்.

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.
இறுதியாட்டம் உடுவில் பிரதேச செயலக அணிக்கும், யாழ். பிரதேச செயலக அணிக்கும் இடையில் நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நான்கு கால்பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் பெரும்பாலான நேரங்களில் யாழின் ஆதிக்கமே அதிகரித்துக் காணப்பட்டது. முடிவில் அந்த அணி 47:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)



## காளியம்பாள், நவஜீவன்ஸ் அணிகளுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 19
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் காளியம்பாள், நவஜீவன்ஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.
பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளியம்பாள் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# சரபோவாவின் மிரட்டல் மீண்டும் ஆரம்பமாகிறது?

மெல்டோனியம் மருந்தைப் பயன்படுத்தியவர்கள் மட்டில் சர்வதேச ஊக்கமருந்து தடுப்புச் சம்மேளனம் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளதால் சரபோவா மீண்டும் களமிறங்குவதுக்கான வாய்ப்புககள் அதிகமாகியுள்ளன.
மெல்டோனியம் என்னும் மருந்தை, தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பட்டியலில் உலக ஊக்க மருந்து தடுப்புச் சம்மேளனம் கடந்த ஜனவரி முதலாம் திகதி சேர்த்தது. மெல்டோனியம் ஊக்க மருந்து பட்டியலில் சேர்க்கப்பட்டதை தொடர்ந்து நடத்தப்பட்ட ஊக்க மருந்து பரிசோதனையில் ரஷ்யாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனை சரபோவா உட்பட 172 பேர் சிக்கினார்கள். இதில் ரஷியாவை சேர்ந்தவர்களே அதிகம். இதய நோய் மற்றும் சர்க்கரை நோய்களுக்கு மெல்டோனியம் மருந்தாக பயன்படுத்தப்பட்டு வருகிறதால் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய சர்வதேச ஊக்கமருந்து தடுப்புச் சம்மேளனம் முன்வந்துள்ளதாக அறியவருகிறது.
இதன்படி மார்ச் முதலாம் திகதிக்கு முன்பு மெல்டோனியத்தைப் பயன்படுத்தி சிக்கியவர்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியும் என்று உலக ஊக்க மருந்து தடுப்பு சம்மேளனம் கருத்துத் தெரிவித்துள்ளது. மெல்டோனியம் ஊக்க மருந்தை பயன்படுத்தினால் அதன் தாக்கம் உடலில் இருந்து நீங்க எவ்வளவு காலம் பிடிக்கும்? என்பது ஆய்வில் உறுதியாக தெரியாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விட்டுக்கொடுப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால் சரபோவாவின் மீதான தடை நீங்கும். ஏனெனில் செரபோவா ஜனவரி மாதத்தில்தான் குறித்த மருந்தைப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து தடை பெற்றார். (ம)




## வசந்தசிறி அசத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 19
பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வசந்த சிறி அணி வெற்றி பெற்றுள்ளது.
பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புதுமடம் வைகறை பி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# பிராவோவுக்கு எச்சரிக்கை

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் குஜராத் லயன்ஸ் அணிக்காக விளையாடி வரும் டுவைன் பிராவோ, நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்பை வெளியிட்டமைக்காக எச்சரிக்கப்பட்டுள்ளார்.
மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக இடம்பெற்ற ஆட்டத்தில், பும்ராவின் பந்து வீச்சை அடித்தாட முயன்ற டுவைன் பிராவோ, ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது. எனினும், அவர் ஆட்டமிழந்திருக்கவில்லை என்பது பின்னர் தெரிந்தது. இதன் போதே பிராவோ, அந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தார். இதனையடுத்தே பிராவோ குறித்த ஆட்டத்தின் பிரதான நடுவரால் எச்சரிக்கப்பட்டுள்ளார். (ம)

# பட்லரின் ஆதங்கம்

ஐ.பி.எல். தொடரின் ஆட்டங்களில் இலக்குக்காப்புக் கையுறை இல்லாமல் களத்தடுப்பில் ஈடுபடுவது நிர்வாணமாக ஓடுவது போல் இருக்கிறது என்று மும்பை அணியின் வீரர் ஜோஸ்பட்லர் தெரிவித்துள்ளார்.
இங்கிலாந்து அணியின் இலக்குக் காப்பாளரான பட்லர் ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார். மும்பையின் ஆரம்ப வீரரான சிம்மன்ஸ் காயமடைந்ததைத் தொடர்ந்து இலக்குக் காப்பாளரான பார்திவ் பட்டேல் அணியில் இணைக்கப்பட்டார். இதனால் இலக்குக் காப்புப் பணியும் பட்டேலிடமே ஒப்படைக்கப்பட்டது. பட்டேலிடம் இலக்குக் காப்புப் பணி ஒப்படைக்கப்பட்டதால் பட்லர் களத்தடுப்பில் ஈடுபடவேண்டியதாயிற்று. இதனையடுத்து பட்லர் தனது ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்துள்ளார்.
பட்லர் தெரிவிக்கையில் - கிரிக்கெட்டில், இலக்குக் காப்புத்தான் எனக்கு முதலில் பிடித்தமானது. அதை செய்யாமல் களத்தடுப்பில் ஈடுபடுவது நிர்வாணமாக ஓடுவது போல் இருக்கிறது. இதை நான் மட்டும் முடிவு செய்ய இயலாது. என்னை வழிநடத்துபவர்களின் எண்ணத்தைச் செயற்படுத்துவது என் கடமை. கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரோகித் மறுமுனையில் அதிரடி காட்டியது சிறப்பாக இருந்தது. அவர் அமைதியான தன்மை கொண்டவர். நம்பிக்கையுடன் விளையாடும் அவர் அனைத்தையும் தனது கட்டுபாட்டில் வைத்துக் கொள்கிறார். வெற்றி பெறும் வரை களத்தில் இருந்து அசத்தினார். அவரது தலைமைத்துவம் கவனிக்க வைக்கிறது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஏப். 19
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட் டத்தில், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வல்வை ஆதி சக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)


தேவை
தங்கி நின்று பணிபுரியக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 791 1980

வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றுக்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- முன்னனுபவம் உள்ள சமையல் உதவியாளர் (ஆண்/ பெண்)
- காசாளர் (பெண்கள் விரும்பத்தக்கது)
- தோசை, வடை தயாரிப்பதில் (முன்னனுபவம் வாய்ந்த சமையலாளர்.
- சுத்திகரிப்புப் பணியாளர்
- வாகனசாரதி (auto, buddy)

பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்
077 791 1219

hp
AEC Premium Achievers 2015
Winner
Nalin Information Technologies (Pvt) Ltd.
hp
Authorized Business Partner in Jaffna
NALIN Information Technologies(Pvt)Ltd.
login
http://www.hp.com/lk

# ஹைதராபாத்துக்கு முதல் வெற்றி; நடப்புச் சம்பியனை வீழ்த்தியது



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மும்பை-ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது ஹைதராபாத்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஹைதராபாத்தின் பலவீனமே துடுப்பாட்ட வரிசைதான். பந்துவீச்சைப் பொறுத்த மட்டில் ரகுமான், ஹென்றிக்ஸ், புவனேஸ்குமார் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். இதனால் முதலில் பந்துவீசுவது என்ற முடிவு சிறந்ததுதான். கப்ரில் அணிக்குத் திரும்பியிருந்தமையால் ஆரம்ப வீரராக ரோகித் களமிறங்காமல் கப்ரிலுடன் பட்டேல் களமிறங்கினார். 2 ஓட்டங்களுடன் கப்ரிலை வெளியேற்றி முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் புவனேஸ்குமார். பட்டேலை 10 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திருப்பினார் சரன். கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் மிரட்டிய ரோகித், பட்லர் இருவராலும் ஹைதராபாத்தின் பந்துவீச்சை எதிர்த்து தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. தற்பொழுது மும்பை 60-4. வழக்கம்போல மும்பையைக் காக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார் ராயுடு. குருனல் பாண்டியாவும் ராயுடுவுக்குப் பக்கபலமாக இருக்க, மேலதிக இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களைத் தொட்டது மும்பை. விபுல் சர்மாவின் பந்துப் பரிமாற்றத்தில் தொடர்ச்சியாக மூன்று சிக்சர்களை விளாசி சராசரியிலும் ஏற்றத்தை ஏற்படுத்தினார் குருனல் பாண்டியா. 43 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் ராயுடு. ஹார்டிக் பாண்டியா நேற்றும் ஏமாற்றினார். முடிவில் மும்பை 142-6. குருனல் பாண்டியா 49 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பந்துவீச்சில் ஹைதராபாத் சார்பாக சரன் 3 இலக்குகளையும், புவனேஸ்குமார், ரகுமான் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 143 ஓட்டங்கள். எட்டக்கூடிய இலக்குத்தான் ஆனால் ஹைதராபாத்தின் தடுமாற்றத்தையும் எடுத்துப் பார்த்தால் அந்த அணியின் வெற்றி சிறிது சந்தேகமே. ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் வோர்ணர். சவுத்தி வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் இரண்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வழக்கம்போல் இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் தவான். ஹென்றிக்ஸின் ஆட்டம் அதிரடி என்று சொல்லுவதற்கு ஏற்ப இல்லாவிட்டாலும் இலக்குச் சரிவை ஒரு முனையில் தடுத்து வைத்திருந்தார். வோர்ணர் மறுமுனையில் அடித்தாட மேலதிக இலக்கை இழக்காமல் 8.1 பந்துப்பரிமாற்றத்தில் 50 ஓட்டங்களை எட்டியது ஹைதராபாத். 42 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வோர்ணர். வோர்ணரின் ஆட்டத்துக்கு 25 தொடக்கம் 30 பந்துகளுக்குள் அரைச்சதம் கடந்திருக்க வேண்டும். இருப்பினும் இலக்கு 143 என்பதால் அவரது இன்னிங்ஸை ஏற்கலாம். 20 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ஹென்றிக்ஸ். இயன் மோர்கன் ஏமாற்றினார். களத்தில் கூடா. கூடாவை அனுமதித்தால் அது மும்பைக்கு நிச்சயம் கூடாதுதான். பாண்டியா வீசிய 16ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 12 ஓட்டங்கள் கூடாவால் பதிவாக இறுதி 24 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. வோர்ணரின் வேட்டை தொடர 15 பந்துகள் மீதமிருக்க மும்பையை வீழ்த்தியது ஹைதராபாத். வோர்ணர் 90 ஓட்டங்களுடன் களத்தில் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மும்பை சார்பாக சவுத்தி 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

# இறுதிக்குச் சென்றார் நடால்



மொன்ட்கார்லோ மாஸ்டர்ஸ் கிண்ணத்தை எட்டுத் தடவைகள் வென்ற உலகின் ஐந்தாம் நிலை வீரரான ரபேல் நடால், உலகின் இரண்டாம் நிலை வீரரான பிரித்தானியாவின் முரேயைத் தோற்கடித்து மீண்டுமொருமுறை இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார்.

குறித்த ஆட்டத்தின் முதல் செற்றை 2:6 என்று இழந்த நடால், பின்னர் சுதாகரித்துக் கொண்டு தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் வெற்றியைத் தீர்மானிக்கும் செற்றாக மூன்றாவது செற் அமைந்தது. அந்தச் செற்றையும் நடால் 6:2 என்ற கணக்கில் கைப்பற்ற, முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார்.

நடால் இறுதியாட்டத்தில் பிரான்ஸின் கயேல் மொன் பில்ஸைச் சந்திக்கிறார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.